Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 18.00
දිනමුරසු වාරමලර්
ஒக் 6 - 12, 2005
வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 634

## அவசியமான தருணத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிரடி நடவடிக்கை!

## ஒற்றையாட்சியிலிருந்து தமிழ் மாநில சுயாட்சிக்கு!


புதிய முயற்சிகள்



சம்திங் சம்திங் த்ரிஷா! சினிமா ஸ்பெஷல்

அரசியல் படுகொலையும் படுகொலை அரசியலும்

# ஆன்மீகம்



## பூப்புனித நீராட்டுதல்

இந்து மதத்தில் கைக்கொள்ளப்படும் சம்பிரதாயச் சடங்குகளில் 'பூப்பு' அடையும் பெண்களுக்கு புனித நீராட்டும் சம்பிரதாய சடங்கினை குல வழமைப்படி முறைப்படி செய்வது பண்டைக்காலம் முதல் நடந்து வருகிறது.

சுவாமி மதுரானந்தா அவர்கள் எழுதிய இந்து சமயம் முதுநிலை என்ற நூலில் பெண்கள் ருதுவாகி 5,7,9ஆம் நாள் புனித நீராட்டு என்ற சடங்கினை செய்யவேண்டும் என்றும், அதனை அர்த்தமுள்ள இந்துமத தத்துவப்படி முதலில் கணபதி பூசை செய்து பின் ஒரு செப்புக் குடத்தை அல்லது வெள்ளிக் குடத்தை தர்ப்பைப் புல்லில் வைத்து சந்தனம் குங்குமம் பூக்களால் அலங்கரித்து சுத்தமான நீர்நிரப்பி 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தை ஜெபித்து தர்ப்பை, அட்சதை, பூ, முதலியவற்றைப் போட வேண்டும். முடியுமானால் கங்கா ஜலம் விடலாம். அதன்பின் "கங்கேச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதி நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மின் சந்நிதம் குரு" என்ற மந்திரம் ஜெபித்து புண்ய தீர்த்தங்களை குடத்திலுள்ள நீரில் ஆவாஹனம் செய்ய வேண்டும். பின் கணபதிக்கு நிவேதனம் செய்து தீபாராதனை காண்பிக்கவேண்டும்.

ருதுவான பெண்ணுக்கு அக்குடத்து நீரால் முறைப்படி நீராட்ட வேண்டும். அத்துடன் அந்நீரெடுத்து வீட்டின் எல்லாப் பாகங்களிலும் தெளிக்க வேண்டும். குழந்தையாக இருந்த அப்பெண்ணானவள் பெரிய பெண்ணாக வளர்ச்சியடைந்தமைக்காக பெரியவர்கள் சேர்ந்து இறைவனுக்கு நன்றி கூறி சிறப்புடன் ஆசீர்வதித்து வாழ்த்த வேண்டுமாம். இதுவே தகுந்த முறை.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

## இயேசுவை நோக்கி அழையுங்கள்

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28)

வாழ்க்கையில் பலவித சோதனைகளால், வேதனைகளால், வியாதிகளால், உபத்திரவங்களால், பொருளாதாரக் கஷ்டங்களால், குடும்பப் பாரங்களால், தொழில் பிரச்சினைகளால் வேதனைப்பட்டு பாரம் சுமந்து கொண்டிருக்கிறீர்களா? இயேசு ஜீவனோடிருக்கிறார். உலகின் பாவங்களை சிலுவை மரத்தில் தூக்கிச் சுமந்தவர் இன்று உங்களுக்கு ஆறுதல் தருவதற்காக ஜீவனோடிருக்கிறார். அவர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள். இயேசுவை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் ஜெபத்தைக் கேட்கிற தேவன். உங்கள் பாரங்களை அவர் மேல் வைத்து விடுங்கள். அவர் உங்களை விடுவிப்பார்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

-போதகர் வேதமுத்து ஜோசப்.

## ஷைத்தானுடைய விரோதி யார்?

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"ஓர் மார்க்க அறிஞர் ஆயிரம் வணக்க சாலிகளைவிட ஷைத்தானுக்கு மிகவும் கடுமையானவர்" (விரோதியாவார்).

விளக்கம் :- மார்க்க அறிவில்லாதவரை ஷைத்தான் வெகு இலகுவில் கெடுத்துவிடுவான். மார்க்க அறிவைக் கற்றவர்கள் ஹராம் ஹலால் மற்றும் தீனுடைய விஷயங்கள் ஆகியவைகளைப் புரிந்துவைத்திருப்பதினால் அவர்கள் ஷைத்தானின் வலையில் சீக்கிரம் மாட்டிக்கொள்ளமாட்டார்கள். எனவேதான் ஷைத்தானுக்கு இவர்கள் விரோதியாகத் தென்படுகிறார்கள். மேலும் மார்க்கக் கல்வியைக் கற்றவர்கள் அவர்கள் கற்ற கல்வியின்படி அமல்செய்துகொண்டே இருந்தால்தான் அதனுடைய அந்தரங்கத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07.

## கவிதைப் போட்டி இல.634



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.10.2005.

கவிதைப் போட்டி இல.634
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.631



பரிசுக்குரிய கவிதை

### கட்டளை

மழலைகள் ஆனாலும்
மாற்றுக் கருத்துக்களை
பார்க்கவோ கேட்கவோ
பேசவோ கூடாது என்று
ஏக தலைவன்
இட்ட கட்டளையோ இது?

-ஓடையூரான்,
மீராவோடை.

### தேவை!

காந்தி மகான்
கருத்துரைகள்
நனவாக
வேண்டுமெனில்
இங்கு
கண்ணற்ற
கபோதிகளும்
வாய் பேசா
ஊமைகளும்
காது கேளா
செவிடர்களும்
நிறையத் தேவை!

-வி.இராதுலன்,
ஆரையம்பதி - 01.

### இன்றைய தத்துவங்கள்!

தேர்தல் காலம்,
தெருவெல்லாம்
கட்சிக்கூட்டம்
தெரியவேண்டியது
இப்போது,
பாரபட்சம்
பார்க்காதே!
பல வதந்திகள்
கேட்காதே!
பாராதவற்றைச்
சொல்லாதே!

-நா.ஜெயபாலன்,
பிபிலை.

### தற்போதைய நிலை

பொருட்களின் விலை உயர்வை
கண்டுகொள்ளாதே!
தேர்தல் கால வாக்குறுதிகளைக் காதில்
போட்டுக்கொள்ளாதே!
அரசியல் ஊழல்களை வெளியிடாதே!
என குழந்தைகளுக்கே புரிந்தன போலும்.

-ஆர்.உதிஸ்ட்ரா, வத்தளை.

### புது மொழி

நல்லதைப் பார்க்காதே!
நல்லதைக் கேட்காதே!
நல்லதைப் பேசாதே!
இப்படிக்கு,
ஜனநாயகம்.

-எம்.ஐ.சியானி,
இறக்காமம் - 01

### இனியாவது.....

மூவினங்களும்
முடியுமானவரை
முயற்சியுங்கள்!
இலங்கைத்தீவில் -
இன்னும்
எஞ்சியுள்ளவர்களையாவது
பாதுகாப்போம்!

-சீனிராசா எடிசன்,
கொழும்பு - 13.

### மௌனம் காப்பீர்!

கடத்தல்களைக்
காணாதீர்!
வரியிறுப்பைக்
கேட்காதீர்!
கொலை பற்றிப்
பேசாதீர்!
நிலமதில் நீடூழி
வாழ்வீர்.

-சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### நம்ம பொடியன்கள்!

எனது ஐந்து வயது
மகள்
நஸ்லியா கேட்டாள் :
"இவங்க....யாரு
வாப்பா?"
நான் சொன்னேன் :
"கண்ணைப்
பொத்திக்கிட்டிருக்காரே....
இவரு யாழ்ப்பாணப்
பொடியன்!
நடுவுல காதைப்
பொத்திக்கிட்டிருக்காரே....
இவரு கண்டிப்
பொடியன்!
கடைசியில -
வாயைப்
பொத்திக்கிட்டிருக்காரே.....
இவரு மட்டக்களப்புப்
பொடியன்!"

-அப்துல் அலி அமீர்
அலி, கிண்ணியா.

### அன்றும் இன்றும்

"தீயதைப் பார்க்காதே,
கேட்காதே, பேசாதே"
அன்று இது குரங்கு மொழி.
"கொலைகளைப்
பார்க்காதே,
கேட்காதே, பேசாதே.
இன்று இது குழந்தை
மொழி.

-அ.சந்தியாகோ, கண்டி.

### இனந்தெரியாதோரல்ல...

கண்காணிப்புக் குழு பிரதிநிதி ஒருவர் -
தமிழ்
கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் - நமது
ஊடகக்காரர் ஒருவர்
இவர்களை இனங்காண்பதில் ஏது பிரச்சினை
தமிழர் ஒருவருக்கு?

-றெ.பி.மரியடினேசன், மன்னார்.

### தமிழர்கள்

இன்றைய தமிழர்களின்
நிலை இது....
குருடனாய்,
செவிடனாய்,
ஊமையாய்
வாழ்ந்தாக வேண்டும்
நம் தாய் திருநாட்டில்.

-சீ.வாசன், ஹட்டன்.

# உங்கள் பக்கம்

## பு/தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஒரு மைல்கல்

பு/தில்லையடி மகா வித்தியாலயத்தின் வரலாற்றில் 2005ஆம் ஆண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு ஆண்டாகும்.

ஏனென்றால் கடந்த காலங்களில் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சா/த பரீட்சை, க.பொ.த.உ/த பரீட்சை என்பவற்றில் தோற்றிய மாணவர்களில் பெரும்பாலானோர் சித்தியடைந்துள்ளமை போற்றிப் பாராட்டப் பட வேண்டிய விடயமாகும். இந்த பெருமைக்குரிய விடயம் தாழ்ந்து போகாமல் தக்க வைத்துக்கொள்வது முதலாவது மாணவர், மாணவிகளினது கைகளிலும், இரண்டாவது ஆசிரிய, ஆசிரியைகளின் கரங்களிலும், மூன்றாவது பெற்றோர், நலன் விரும்பிகளின் கைகளிலும் தான் உள்ளது. இதற்கு அதிபரும், பிரதி அதிபரும், ஊன்றுகோலாக இருப்பார்கள் என்பது எனது அவா!

-எஸ்.ஏ.சி. நியாஸ்,
அரபா நகர், புத்தளம்.

## பல் வைத்தியர் பற்றாக்குறை

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள அரசினர் வைத்தியசாலையில் பற்சிகிச்சைக்காக ஒரே ஒரு வைத்தியர் மாத்திரமே கடமை புரிவதால் நோயாளர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். அத்தோடு வைத்தியர் விடுமுறையில் சென்று விட்டால் பல்நோயினால் அவதியுறும் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு, பதில் வைத்தியர் இல்லாமையினால், விடுமுறையில் சென்ற வைத்தியர் திரும்பி வரும்வரை காத்திருக்க வேண்டிய நிலை.

எனவே காத்தான்குடி அரசினர் வைத்தியசாலையில் பல்வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளிடம் பணிவுடன் வேண்டுகிறோம்.

-எம்.அய்.எஸ்.மர்ழியா,
காத்தான்குடி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# வாசகர் சாலை




தினமுரசில் வெளிவரும்
ஆக்கங்களை
ஆர்வமாக வாசிக்கும்
வாசகர்களில் நானும்
ஒருவர். உங்கள்
பத்திரிகைச் சிறுதைகள்
என்னை வெகுவாகக்
கவர்ந்துள்ளன.
தினமுரசு
வளர்ந்துவரும்
எழுத்தாளர்களுக்குக்
களமாக அமைகிறது.
தொடர்ந்தும்
இதுபோன்ற ஆக்கங்கள்
வெளிவர
வாழ்த்துக்கள்.

-பவித்ரா வரவேஸ்வரன்,
வெள்ளவத்தை.

**அன்புடன் முரசுக்கு,**

முரசின் பக்கங்கள் மட்டுமல்ல, அத்தனை அம்சங்களும் இனிதே. முரசு தாங்கி வந்த இனிய 633 அருமையிலும் அருமை. முதலில் எந்தப் பக்கத்தைப் பார்ப்பது என்ற யோசனையில் திக்குமுக்காடிப் போகின்றேன். முரசு கொண்டு வரும் அத்தனை அம்சங்களும் எம் மனங்களில் தித்திக்கின்றது.

-முகமட் அன்சார், கிண்ணியா.

நான்
முரசு தேய்க்கும்
அதிகாலையில்
முணுமுணுக்கும் சில
முரசொலிகள்
முழங்கால் வலிக்க
மூன்று மைல்கள்
முச்சக்கர வண்டிவர
முன்னால் தினமுரசு - அதன்
பின்னால் என் முழு மனசு
இது உன் புலமையின்
பரிசு.

-மதன், கந்தப்பளை.

**அன்பின் முரசுக்கு**

நான் கடல் கடந்து மத்திய கிழக்கில் வாழ்ந்தாலும் உன் மூலம் என் தேசத்தைக் காண்கின்றேன். வாராவாரம் உன்னை எதிர்பார்த்துக் காத்திருந்து நீ வந்தடைந்ததும் நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

என் தனிமைக்குத் துணையாக, கவலைக்கு மருந்தாக, சிந்தனைக்கு விருந்தாக நீ வலம் வருகின்றாய். உன் சேவை மென்மேலும் தொடர்ந்து வளர என் நல்வாழ்த்துக்கள்.

-ஏ.எல்.எம்.நஜீமா, டோகா, கட்டார்.

**இனிய முரசுக்கு**

உன்னுடைய ஆக்கங்கள் அரசியல் முதல் சமையலறை வரை மட்டுமன்றி அறிவிற்கும் தீனி போடுகின்றது. வாசகர்களின் இதயங்களில் நீங்கா இடம் பிடித்திருக்கும் என் அன்பின் முரசுக்கு பலகோடி நன்றிகளும் வாழ்த்துக்களும்.

-ரூபினி, கல்முனை.

வெற்றி முரசே!
முரசின் 633 பதிப்பில் பில்கேட்ஸையும்
சானியா மிர்ஸாவையும் வெளிப்படுத்தி முயற்சி
உடையோரின் உயர்ச்சியினை
வெளிப்படுத்தியமைக்கும் எம் முயற்சிகளுக்கு
ஆர்வமூட்டியமைக்கும் நன்றிகள் பல.


-கு.வசந்தன், பருத்தித்துறை.

# 15கோடி ரூபா விவகாரம் உட்கட்சி விடயங்களை
## அம்பலப்படுத்தியதாக மகேஸ்வரன் மீது ரணில் கண்டனம்

உட்கட்சி விவகாரங்களைச் சந்திக்குக் கொண்டு வந்தமைக்காக ஐ.தே.க. எம்.பி. மகேஸ்வரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக ஐ.தே.க வின் பிரதிப் பொதுக் காரியதரிசி திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார். ஐ.தே.க.வின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஏமாறுபவ ரென்றும் ரணிலுக்கு ஆதரவளிப்பதற்காக இ.தொ.கா.தலைவர் தொண்டமான் பதினைந்து கோடி ரூபாவைக் கோரினா ரென்றும் 'மின்னல்' நிகழ்ச்சியில் மகேஸ் வரன் தெரிவித்திருந்தார். அப்போது இ.தொ.கா.வின் உப தலைவரான ஆர்.யோக ராஜனும் உடனிருந்தார். ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சரவைப் பாது காப்புப் பிரிவைச் சேர்ந்த ஒன்பது வாகனங்கள் அதிரடிப்படை வீரர்கள் சகிதம் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருப்பதாக மகேஸ்வரன் குற்றம் சாட்டியிருந்தார். இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு கடும் பாதுகாப்புடன் கூடிய பன்னிரண்டு வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இ.தொ.கா. ஆதரவு வழங்கலாமென பரவலாக செய்திகள் அடிபடுகின்ற போதிலும், பதினைந்து கோடி ரூபாவை ஆறுமுகம் தொண்டமான் ஐ.தே.க. விடமிருந்து கோரினார் என்று மகேஸ்வரன் எம்.பி. தெரிவித்த கருத்து, மேற்படி இரு கட்சிகளுக்குள்ளும் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருக்கிறது. ஐ.தே.க. எம்.பி. மகேஸ்வரனின் கருத்து உண்மையென பதால்தானா ஐ.தே.க. தலைமை அவர் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றதென்று ஐ.தே.க. வட்டாரங்கள் கேள்வி எழுப்பு கின்றன. கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது யாழ்.மாவட்டத்தில் போட்டியிடக் கூடாதென்று புலிகளால் மிரட்டி விரட்டப்பட்ட தாலேயே அவர் கொழும்பில் போட்டியிட நேர்ந்தது. பெருந்தொகைப் பணத்தையும் புலிகளுக்குக் கொடுத்தபோதும் அவரை யாழ்ப்பாணத்தில் போட்டியிட புலிகள் அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

உண்மையிலேயே தொண்டமான் பதினைந்து கோடி ரூபா கேட்டாரா? இல்லையா? என்பது வேறு சங்கதி. ஆனால் புலிகள் மகேஸ்வரனை ஜனாதிபதித் தேர்தலில் தமது சார்பில் வேட்பாளராக நியமித்து, வடக்குக் கிழக்கில் மோசடிகள் மூலம் மகேஸ்வரனுக்கு சார்பாக வாக்குகளைப் போடலாம் என்ற கணிப்பில் அவரைக் களத்தில் நிறுத்த முயல்வதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இம்முறையும் மகேஸ்வரன் புலிகளால் மிரட்டப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப் படுகிறது. உயிரில் ஆசை இருப்பதால் புலிச்சார்பு வேட்பாளராக மகேஸ்வரன் களத்தில் குதிப்பாரென்றும் தெரிவிக்கப் படுகிறது. ஐ.தே.க.வுடன் இணைந்து இ.தொ.கா. போட்டியிட்டபோது இரு ஆசனங்களை மட்டுமே பெற்றதாகவும், பொது ஜன ஐக்கிய முன்னணியோடு இணைந்து போட்டியிட்ட போது எட்டு ஆசனங்களை இ.தொ.கா. பெற்றதாகவும் யோகராஜன் கூறியிருந்தார். அப்படியானால் மகேஸ்வரனின் குற்றச்சாட்டு உண்மையா வென்று இ.தொ.கா. வட்டாரங்களில் சந்தேகம் கிளப்பப்படுகிறது.



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களுக்கு யாழ். ஈ.ம.ஜ.கட்சியினால் பெருமளவு அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டன. ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில், கைதடியில் உள்ள ஆதரவற்றோர் சிறுவர் இல்லம், விழிப்புலன், செவிப்புலன் இழந்த மாணவர்களுக்கான நவில்ட் கல்லூரி மற்றும் கைதடி முதியோர் இல்லம் ஆகியவற்றிற்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. யாழ்.மாவட்ட ஈ.ம.ஜ.கட்சி பிரதம அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நடராஜா மதனராஜா தலைமையில் சென்ற கட்சி முக்கியஸ்தர்கள், சிறுவர்களுக்கான சத்துணவு பொதிகள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் அன்பளிப்புச் செய்தனர். இச்சிறுவர் இல்லங்களின் அத்தியாவசிய மற்றும் மேலதிக தேவைகளை விபரமாகக் கேட்டறிந்த நடராஜா மதனராஜா அதுகுறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தார். நடராஜா மதனராஜாவுடன் ஈ.ம.ஜ. கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் அலெக்ஸாண்டர் சாள்ஸ் மற்றும் ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் ராம் ஆகியோரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

## மகாவலியில் மர முந்திரிகை

மகாவலி வலயத்திலுள்ள கல்னேவ, நொச்சியாகம் பகுதிகளில் மர முந்திரிகைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக ஒப்பந்தமொன்று கடந்த மாதம் கைச் சாத்திடப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலின் பேரில் கைச்சாத்திடப்பட்ட இந்த இரு வருட கால வேலைத்திட்ட ஒப்பந்தத்தில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத் தலைவர் எஸ்.தவராஜாவும், நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி, ஆற்றுப் படுகை அபிவிருத்தி மற்றும் ரஜரட்ட அபி விருத்தி அமைச்சின் செயலாளர் டி.எம்.அபேவிக்கிரமவும் கைச்சாத்திட்டனர்.

## ஐ.தே.க. எம்.பி. கையை முறித்தார்

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த ஜே.வி.பி. உறுப்பின ரொருவர் கேகாலை மாவட்ட ஐ.தே.க. எம்.பி.யொருவரால் ரம்புக்கனையில் தாக்கப்பட்டுள்ளார். இடது கையில் முறிவுக்கு இலக்காகிய சமிந்த ரணவக என்ற இந்த நபர் கேகாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளார். இச் சம்பவம் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

## ஐரோப்பிய யூனியனின் உறுதியான நடவடிக்கைக்குப் பாராட்டு

புலிகள் இயக்கத்தின் மீது பயணத் தடை விதித்து ஐரோப்பிய யூனியன் விடுத்த அறிக்கையானது, கண்டனத்தையும் தாண்டி செயற்பாடுகளை நோக்கிய அக்கறையைக் காட்டியுள்ளமை வரவேற்கத்தக்கது! ஏனெனில், புலிகள் கண்டனங்களைக் கணக்கில் எடுத்ததே இல்லை. புலிகள் இயக்கத்தை வழிக்குக் கொண்டு வரு வதானால் புலிகள் இயக்கத்திற்கு எதிரான உறுதியான செயற்பாடுகள் அவசியமானது. இந்த உண்மையை ஐரோப்பிய ஒன்றியம் நன்கு புரிந்து வைத்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவா னந்தா ஐரோப்பிய யூனியனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2002 பெப்ரவரியில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின் புலிகள் இயக்கத் தலைமையை சமாதான வழிமுறைக்குக் கொண்டு வருவதில் சர்வதேச சமூகம் காட்டி வரும் அக்கறையும் ஈடுபாட்டையும் புலித் தலைமை தொடர்ச்சியாக மறுதலித்தே வந் துள்ளது. ஜனநாயகச் சூழலுக்கும் சமாதான வாழ்விற்கும் புலிகள் இயக்கம் வழங்கிய கௌரவம் எத்தகையது என்பதை சர்வதேச சமூகம் நன்கு கண்டுகொண்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களுக்கு மேலான காலத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கைவிடத் தயாரில்லை என்பதைப் புலிகள் இயக்கம் நிரூபித்துள்ளது.

தொடர்ச்சியான அரசியல் படு கொலைகள், மாற்று ஜனநாயக சக்திகள் மீதான தடை, எல்லை தாண்டிய பயங்கர வாதச் செயற்பாடுகள், சிவில் சமூகங்களின் மீதான அடக்குமுறை, சிறுவர்களைப் படையணிக்குச் சேர்த்தல், பலாத்காரமாக ஆட்சேர்த்தல், கப்பம், போர்த் திணிப்பு எனப் புலிகள் இயக்கம் தமது செயற்பாடுகளை சமாதான காலத்திலும் மேற்கொண்டே வருகிறது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் மூவர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணத்தில் கடந்த 3ஆம் திகதி 24 மணி நேர கால எல்லைக்குள் மூவர் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனரென்று பொலிஸார் தெரிவித்தனர். ஈ.பி.டி.பி. உறுப்பினரான கிருஷ்ணன் பரமேஸ்வரன் (வயது - 42) என்ற வரணியைச் சேர்ந்த ஆசிரியர் ஆனைக்கோட்டை ஆறு கால் மடத்தடியில் காலை 7 மணியளவில் சுட்டுக் கொல்லப் பட்டார். யாழ். நகரிலுள்ள அடைக்கல மாதா பாடசாலையில் இவர் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

கன்னாகத்திலுள்ள நகைக் கடை உரிமை யாளரான பொன்னுத்துரை சுபேந்திரன் (வயது - 30) என்பவர் கந்தரோடை வீதியில் வைத்து பிற்பகல் 4.30 மணியளவில் புலி களால் சுட்டுக் கொல்லப்பட்டார். புலிகள் இயக்கத்திற்குக் கப்பம் கொடுக்க மறுத்த தாலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டாரென்று கிராம வாசிகள் தெரிவித்தனர்.

கார்த்திகேசு செந்தூர் செல்வன் (வயது - 21) என்ற யாழ்.பல்கலைக்கழக மாணவன் வடமராட்சி மணல்காட்டுப் பகுதியில் வைத்து 3ஆம் திகதி பின்னிரவு வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டார். வரணியைச் சேர்ந்த இந்த மாணவர் மிகவும் வறுமைப்பட்ட குடும்பத் தைச் சேர்ந்தவரென்பதால், மணலேற்றும் லொறியின் சாரதியாகவும், கடமையாற்றி வந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுக்கு ஆட்களை ஏற்றி இறக்குமாறு புலிகள் விடுத்த கோரிக்கையை மறுப்புத் தெரிவித்ததாலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டு வாகனத்துடன் சேர்த்து எரிக்கப்பட்டார்.

## தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இல்லையாம்

வடக்குக் கிழக்கில் அச்சுறுத்தல், வாக்கு மோசடி ஆகியவை இல்லாத நீதியான தேர்தல் ஒன்றினை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு தேர்தல் ஆணையாளரிடம் நான்கு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது புலிகள் அப்பட்டமான தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டனரென்று சர்வதேச, தேசிய தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்திருந் ததை இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை தனியார் ஊடகங்கள் ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கவிற்குப் பக்கச்சார்பாகச் செய்திகளையும் விடயதானங்களையும் வெளியிடுவதாகவும் எனவே அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்து வதைப் போன்று தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரியொருவரை நியமிக்குமாறும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணையாளரைக் கோரியுள்ளனர். 17ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தின்படி தனக்கு தகுதி வாய்ந்த அதிகாரியொருவரை நியமிக்கத் தகுதியுண்டு என்று தேர்தல் ஆணையாளர் கூறினார். ஆனால் தனியார் ஊடகங்கள் பாரபட்சமாகச் செய்திகளை வெளியிட்டால் நடவடிக்கை எடுக்கத் தனக்கு அதிகாரமில்லையென்றும் அவர் கூறினார். பக்கச்சார்பாகச் செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கெதிராக தனி நபர்களோ, அரசமைப்புகளோ நீதிமன்றங் களில் வழக்குத் தொடர முடியுமென்றும் அவர் சொன்னார்.

## லண்டன் விமானக் குண்டுப் புரளி; வெள்ளவத்தைப் பெண் சிக்கினார்

கடந்த மூன்றாம் திகதி லண்டனை நோக்கிப் புறப்பட்ட UL-501 என்ற விமானத் தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகப் புரளி கிளப்பிய பெண்மணி இனம் காணப்பட்டி ருக்கிறாரென்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர். வெள்ளவத்தை யிலுள்ள நாணயக் குற்றி போட்டுப் பேசும் தொலைபேசியிலிருந்து இந்தப் பெண்மணி விமானநிலைய அதிகாரியொருவருக்கு மேற்படி விமானத்தில் குண்டு வைக்கப் பட்டிருப்பதாகத் தகவல் கொடுத்துள்ளார். சம்பந்தப்பட்ட பெண்மணி குண்டுப் புரளி தகவல் கொடுப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த நபரொருவர் அப் பெண் சம்பந்தமான விபரங்களைப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இக் குண்டுப் புரளி காரணமாக விமான நிலையத்தில் வேலை செய்யும் பல தமிழர்கள் தேவையற்ற சங் கடங்களுக்கு உள்ளாக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதேவேளை இந்தப் பெண்மணிக்கும் - புலிகளுக்கும் இருக்கக் கூடிய தொடர்பு குறித்தும் ஆராய்ந்த பொலிஸார், கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த மேலும் மூன்று தமிழ் இளைஞர்களைத் தேடி வலை விரித் துள்ளனர். கட்டுநாயக்கா விமானநிலையத் திலிருந்து 3ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் புறப்பட்ட விமானம் குண்டுப் புரளியை அடுத்து 45 நிமிடங்கள் கழித்து கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்தது குறிப்பிடத் தக்கது. இந்த விமானத்தில் 257 பயணிகளும் 15 விமான ஊழியர்களும் இருந்தனர்.

## வடக்குக் கிழக்குக்கு அமெரிக்க உதவி

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங் களுக்கான முதன்மை பிரதியுதவிச் செயலாளர் டொனால்ட் காம்ப், வடக்குக் கிழக்கில் அமெரிக்க உதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி மீளமைப்புப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரி களுடன் கலந்தாலோசித்துள்ளார். யூ.எஸ்.எய்ட் நிறுவனம் வடக்குக் கிழக்கில் பல புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

## பாலியல் குற்றச்சாட்டு; யாழ். விரிவுரையாளருக்கு எதிராக மகளிர் ஆர்ப்பாட்டம்

15வயதுச் சிறுமியை தொடர்ச்சியாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி வந்தா ரென்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கணேசலிங் கத்திற்கு பிணை வழங்கக் கூடாதெனக் கோரி யாழ். பெண்கள் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் நீதிமன்றத்தின் முன் அணிதிரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். கடந்த 3ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மேற்படி நிலையத்தின் தலைவி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கிடையில் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா இவருக்குப் பிணை வழங்குமாறு கோரிய போதும், யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் மூன்றாவது தடவையாகவும் பிணை வழங்க மறுத்தார். எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பொங்கு தமிழ் நிகழ்வுகளின் முக்கியஸ்தரான கணேசலிங்கத்தின் சார்பில் ஆஜரானவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியுற்ற சட்டத்தரணி ஸ்ரீகாந்தா என்பது குறிப்பிடத் தக்கது. சிறுமியின் நலன்களை கவனிக்க மனித உரிமை ஆர்வலர் சட்டத்தரணி எம். றெமிடியஸ் ஆஜரானார்.

## வலயத்திற்குள் புலிகள்

திருகோணமலை அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் ஊடுருவிய நான்கு தமிழ் இளைஞர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, திருமலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். வீடியோ படம் பிடித்துக்கொண்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டனரென்று கடற்படையினர் தெரிவித்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த எஸ். அரவிந்தன், சண்முகம், ஜெயக்குமார் மற்றும் ஜே.ஜெயக்குமார் ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களிடமிருந்து புலிகளின் அடையாள அட்டைகள் கைப்பற்றப் பட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

## தாவூத் இப்ராஹீமுக்கு இன்டர்போலில் இடம்

மும்பைத் தொடர் குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான பிரபல தாதா தாவூத் இப்ராஹீமை கைது செய்யுமாறு 184 நாடு களுக்கு சர்வதேசப் பொலிஸான இன்டர் போல் அறிவித்துள்ளது. சம்பந்தப்பட்ட நாடுகளில் தாவூத்துக்கு இருக்கும் சொத்துக் களை முடக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேடப்பட்டு வரும் சர்வதேசக் கேடிகளின் பட்டியலில் 186ஆவது பேர்வழியாகத் தாவூத் இப்ராஹீம் உள்ளார். புலி இயக்கத் தலைவர் பிரபாகரனை தேடப்படுவோர் பட்டியலில் ஏற்கனவே இன்டர்போல் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.



பாலியல் குற்றச்சாட்டிற்கு இலக்கான விரிவுரையாளர் கணேசலிங்கத்திற்கு பிணை வழங்க வேண்டாம் என்று கோரி யாழ்.. மகளிர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம்

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## முரசம்

### ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை புலிகளை வழிக்குத் திருப்பவில்லை

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னரும் சரி, அதற்கு முன்னைய காலப் பகுதியிலும் சரி, புலிகளின் போக்குக் குறித்து சர்வதேச சமூகம் தனது திருப்தியை வெளிப்படுத்தியதில்லை. மாறாக அதிருப்தியையும் கடுமையான கண்டனத்தையுமே எப்போதும் தெரிவித்து வந்துள்ளது. ஆனால் புலிகளைப் பொறுத்தவரையில் சர்வதேசத்தின் அங்கீகாரத்தையும், அனுதாபத்தையும் பெற்றுக்கொள்வதில் பெரும் முயற்சி எடுத்துக் கொள்வதை அவதானிக்க முடிகிறது. புலிகளின் செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தின் கண்டனத்துக்கும் விசனத்திற்கும் உட்படுவதானது, புலிகள் தொடர்ச்சியாக மனித உரிமைகளையும், சிறுவர் உரிமைகளையும், கருத்துச் சுதந்திரத்தையும், எழுத்துச் சுதந்திரத்தையும், ஜனநாயக மறுப்பையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தாமல் தொடர்வதேயாகும். எரிந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணப்படுமாக இருந்தால், அது முழுக்க முழுக்க தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகவே அமைய வேண்டுமென புலிகள் கோருவதானது, தாம் இழைக்கும் தவறுகளையோ, தமது கண்மூடித்தனமாக செயற்பாடுகளையோ எவரும் கேள்வி கேட்டு விடக்கூடாது என்கின்ற குறுகிய மனப்போக்கேயாகும். தவிரவும், கடந்த மூன்றரை வருடங்களில் மக்களுக்குள் அரசியல் பணிக்காக வந்திருந்த காலப்பகுதிக்குள் தமது உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவோ, மக்களின் நலவாழ்வு, அபிவிருத்தி, புனரமைப்பு போன்ற எந்தப் பணிகளிலும் ஈடுபட முடியாமல் போன இயலாத்தனத்தையும், அவை குறித்து தமிழ் மக்கள் கேள்விகளைத் தொடுக்க முடியாத சூழலையும் ஒப்பீட்டளவில் புலிகள் நோக்குகின்ற போது, ஜனநாயக விழுமியங்களோடு மக்களுக்கான தீர்வு கிடைக்கப்பெற்றால் புலிகள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளின் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ள முடியும். இது தவிரவும் இதுவரை காலமும் புலிகளால் பாதிக்கப்பட்ட அதாவது கணவனை இழந்த, தந்தையை இழந்த, சகோதரனை இழந்த, சொத்துக்களை இழந்த அல்லது பறிகொடுத்த அனைவரும் சுதந்திரமாகக் கேள்விகளைக் கேட்கக் கூடிய நிலை உருவாகினால் அதற்கு எவ்வாறு முகங்கொடுப்பதென்ற கடினமான சூழல் புலிகளுக்கு ஏற்படலாம். ஆகவேதான் சர்வதேச சமூகத்தின் கண்டனத்திற்கும் தமிழ் பேசும் மக்களின் விசனத்திற்கும் உட்பட்டாலும் கூட, எந்தவித அக்கறையுமில்லாமல் புலிகள் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற வகையில் நடந்து கொள்கிறார்கள். அவ்வாறு அக்கறை கொள்வதானால் சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக புலிகள் நடத்தும் எழுச்சி மாநாடுகளும், பொங்கு தமிழ்களும் தேவையற்றதாகவே இருக்கும். ஏனெனில் போராட்டத்தில் நியாயமும், மனித நேயமும், அர்ப்பணிப்பும், உண்மைத் தன்மையும் இருந்தால் எவ்வித வேண்டுகோள்களையும் முன்வைக்காமலேயே சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அதைவிடுத்து, விரும்பத்தகாத எல்லாச் செயற்பாடுகளையும் தொடர்ந்து செய்துகொண்டு அதைக் கண்டிக்கின்ற சர்வதேச சமூகத்தை பேரினவாதிகளின் ஒரு அங்கமாக காட்ட முற்படுவது புத்திசாதுரியமானதாகாது. ஆகவே சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தையும் அங்கீகாரத்தையும் தேடித் தருவதற்குத் தடையாக இருக்கும் மேற்குறிப்பிட்ட விரும்பத்தகாத செயற்பாடுகளை புலிகள் கைவிடுவது நல்லது.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஒற்றையாட்சியிலிருந்து தமிழ் மாநில சுயாட்சிக்கு! புதிய முயற்சிகள்

**ந ர ன்**

ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் பேசும் மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாண சபை நிறுவப்பட்டது. இது செயலிழக்கச் செய்யப்பட்டு பதினைந்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. இந்தப் பதினைந்து வருட காலமாக மத்திய அரசின் நேரடி அதிகாரியான மாகாண ஆளுனராலேயே அங்கு நிர்வாகம் கையாளப்பட்டு வருகிறது. இலங்கையில் யுத்தத்தாலும் சுனாமியாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு மக்களே. எனவே மிக அவசியமாகவும் அவசரமாகவும் நிவாரண நடவடிக்கைகள் தேவைப்படுவது இந்த மக்களுக்கே. மத்திய அரசிலிருந்து கொண்டு இந்த மக்களின் அவசரத் தேவைகளை நிறைவேற்ற முடியாது. அரசியல் யாப்பை மாற்றி அதிகாரப் பகிர்வை மேற்கொண்டு வடக்கு - கிழக்குக்குத் தேவையான பூரண சுயாட்சியுடன் கூடிய ஒரு மாநில அரசை ஒரே இரவில் ஏற்படுத்தி விட முடியாது. வடக்கு - கிழக்கு மாகாண சபையை உயிர்ப்பித்து மக்களுக்கு உயிர்த்துடிப்பு மிக்க பணிகளை ஆற்ற வேண்டிய உடனடித் தேவை இருக்கிறது. வடக்கு - கிழக்கில் வரி, கப்பம், கொலை மிரட்டல், ஆட் கடத்தல்கள், படுகொலைகள், சிறுவர்கள் கடத்திச் செல்லப்படுதல் ஆகிய கொடூரங்களுக்கு முடிவு கட்ட வேண்டும். அந்த முடிவுக்கான ஆரம்பம் இங்கே விளக்கப்படுகிறது.

பிரதான இரு கட்சிகளான சுதந்திரக் கட்சியும் ஐ.தே.க.வும் சமஷ்டி முறைத் தீர்வையே முன்வைத்திருக்கின்றன. ஆனால் சுதந்திரக் கட்சி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் ஜே.வி.பி., ஹெல உறுமய முன்வைத்திருக்கும் ஒற்றையாட்சிக்குள் இனப் பிரச்சினைத் தீர்வு மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண சுனாமிப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நிபந்தனைகள் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருக்கின்றன. ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட முடியாதெனப் புலிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் கூப்பாடு போடத் தொடங்கிவிட்ட போதிலும் ஒற்றையாட்சியிலிருந்து ஆரம்பித்து படிப்படியாக மூன்று கட்ட முயற்சிகளின் மூலம் இறுதித் தீர்வு காண முடியுமென்ற புதிய பரிணாமப் படிமுறையொன்று இப்போது முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அதாவது செயலற்றுப் போயிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்தைத் தேர்தல் மூலம் மீளமைத்து, அதற்கு அரசியல் தலைமையைக் கொடுப்பதன் மூலம் இந்த முதற்கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்க முடியுமென்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இந்தியாவில் தெரிவித்திருந்தார். ஒற்றையாட்சியின் கீழேயே தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு, கிழக்கில் மாகாணசபை அறிமுகப்படுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த மாகாண சபையைச் செயற்பட வைப்பதன் மூலம் அச் சபைகளின் அதிகாரங்களைப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கு மக்களின் நலன்பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் வடக்கு - கிழக்குக்கென உருவாக்கப்படும் உத்தேச சுனாமிப் பொதுக்கட்டமைப்பின் கீழான புனர்வாழ்வு, புனரமைப்பு, நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். சுனாமிக் கட்டமைப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு விதித்திருக்கும் நான்கு சரத்துக்களைத் தவிர ஏனையவற்றை அமுல்படுத்த முடியும். யுத்தச் சீரழிவுகளால் பல வருடங்களாகவும் சுனாமியால் பல மாதங்களாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உடனடியாகவே நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இது உதவுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இரண்டாவது கட்டமாக இப்போதிருக்கக் கூடிய அரசியலமைப்பு 154G (2)ஆவது ஏற்பாட்டின் பிரகாரம் அதிகாரப் பகிர்வு வசதிகளைப் பலப்படுத்திக்கொள்ள முடியும். அதாவது மாகாண சபையில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைப் பாராளுமன்றத்திலும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் மூலம் மாகாண சபையின் அதிகாரங்களை மேலும் பலப்படுத்திக்கொள்ள முடியும். இலங்கைப் பாராளுமன்றத்தில் எண்பது சதவீதத்துக்கு மேல் எம்.பி.க்களைக் கொண்டிருக்கும் இரு பெரும் கட்சிகளான சுதந்திரக் கட்சியும் ஐ.தே.க.வும் சமஷ்டித் தீர்வே ஒரே வழியெனக் கூறியிருப்பதால் இது மிகவும் இலகுவான காரியம். அத்துடன் தமிழர் தரப்புகளும் முஸ்லிம் தரப்புகளும் வடக்கு - கிழக்குக்கு அதிகாரங்கள் பலப்படுத்தப்படுவதை எதிர்க்கப் போவதில்லையென்பதால் இந்த மாற்றங்களைச் செய்வது இலகுவான காரியமாகும். இதன் மூலம் மக்கள் நலன்சார்ந்த எழுபது சதவீதத்துக்கு மேற்பட்ட பணிகளை வடக்கு, கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ள முடியும்.

முன்னர் மாகாண சபை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் இப்போது மாகாண சபைகளை ஏற்றுக்கொண்டு அவற்றில் அங்கம் வகிப்பதால் அதிகாரங்கள் பலப்படுத்தப்படுவதை எதிர்க்கப்போவதில்லை. அது மட்டுமல்ல, ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்கான வழிமுறைகளைச் சகல அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றி, உயர்நீதிமன்ற அங்கீ காரம், சர்வஜனவாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்ற முடியும். எனவே ஒற்றையாட்சியிலிருந்து ஆரம்பித்துப் படிப்படியாக அதிகாரங்களை அதிகரித்து, ஒற்றையாட்சியை நீக்கும் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தும் இந்தப் பரிணாம முறையை செயற்படுத்த முடியுமென்று இந்தியத் தலைவர்களிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளங்கப்படுத்தியிருக்கின்றார்.

வடக்கு - கிழக்கில் புலிகளால் வேட்டையாடப்பட்ட மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களுக்கு அவர்களின் விருப்புக்கேற்ப சுயாட்சி அலகொன்றினையும் அதன் மூலம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். முஸ்லிம் மக்கள் மீதும் தமிழ் மக்கள் மீதும் கிட்டத்தட்ட கடந்த முப்பது வருட காலமாக பாசிச மேலாதிக்கப் பிடியை இறுக்கிவரும் புலிகளிடமிருந்து விடுதலை பெறவே வடக்கு, கிழக்கு மக்கள் விரும்புகின்றனர். ஏனைய சகல தமிழீழ ஆயுதக் குழுக்களையும் வேட்டையாடிய புலிகள், இன்றும்கூட தமது அடாவடித்தனங்களை அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர்.

தமிழீழப் போராட்டக் குழுக்கள் முதன் முதலாக அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது திம்புவிலாகும். திம்புப் பேச்சுவார்த்தையின் தோல்விக்கு இலங்கை அரசே காரணம். இதன் பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் முதல் இன்றுவரை நடைபெற்ற சகல பேச்சுவார்த்தைகளையும் தோற்கடித்தவர்கள் புலிகளே. அவர்களுக்கு வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எவ்வித அக்கறையும் கிடையாது. மக்களின் தலைகளுக்கு மேலாகத் தமது மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்புவதே அவர்களின் நோக்கமாகும். இதைத்தான் புலிகளின் செயற்பாடுகள் இன்றுவரை நிரூபித்து வருகின்றன. சம்பந்தா சம்பந்தமில்லாத, நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைத்து ஆறு தடவைகள் உடன்பாடுகளை முறியடித்திருக்கிறார்கள். மூன்று ஈழ யுத்தங்களைக் கிழக்கில் ஆரம்பித்திருக்கிறார்கள். கருணா அம்மானின் பிரச்சினை மட்டும் எழுந்திருக்காவிட்டால் பிரபாகரன் நான்காவது ஈழ யுத்தத்தை எப்போதோ ஆரம்பித்திருப்பார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புலிகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம், புலிகளுக்குச் சார்பாகவே அமைந்துள்ளது. படைத் தரப்பினரோ, பொலிஸாரோ, அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளுக்குள் சிவிலுடையில் கூட நுழைய முடியாது. நுழைந்தால் கைது, விளக்கமறியல், சிறைத்தண்டனை. ஆனால் புலிகள் அரசியல் வேலையென்ற போர்வையில், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து அடாவடித்தனங்களில் ஈடுபடுவதற்கு அந்த ஒப்பந்தம் அனுமதி வழங்கியிருக்கிறது. புலிகள் இயக்கத்துக்குள் கருணாவின் பிரச்சினை உச்சமாக வெடித்தபோது, 'அது எங்கள் உள் வீட்டுப் பிரச்சினையென' கூறிக்கொண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி ஆயுதங்களுடன் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை ஊடறுத்துச் சென்று, கருணா தரப்பினர் மீது தாக்குதல் நடத்தி, பல நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றொழித்தார்கள். நோர்வேயோ அல்லது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ வெறும் பார்வையாளர்களாகப் பார்த்துக்கொண்டிருந்ததுதான் மிச்சம். ஆட்சியிலிருந்த ரணில் விக்கிரமசிங்கவும் பிரபாகரனின் அடாவடித்தனத்துக்கு 'ஆமாம் சாமி' போட்டுக் கொண்டார். ஆயுதப் படைகளுக்குத் தெரியாமல், அல்லது அவர்களின் கண்களில் படாமல் வன்னிக் காட்டிலிருந்து புறப்பட்ட பிரபாகரனின் புலிகள் அணி, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் தாண்டி வெருகல் ஆற்றுக் கரையை அடைந்தது எவ்வாறென்பது ரணிலுக்கும் ஆயுதப் படையினருக்கும் மட்டுமே தெரியுமென்ற குற்றச்சாட்டையும் நாம் தட்டிக் கழித்துவிட முடியாது.

யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு மூன்றரை வருட காலத்துக்குள் புலிகள் ஏப்பமிட்ட அப்பாவிகளின் உயிர்கள் மட்டும் (மாற்றுக் கருத்துடையோர், சிவிலியன்கள் உட்பட) ஆயிரத்தையும் தாண்டியிருக்கிறது.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்து, கடைசியில் லக்ஷ்மன் கதிர்காமரின் உயிரையே குடித்தபோதுதான் சர்வதேச சமூகம் விழித்துக் கொண்டது. யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி, அத்துமீறல்களிலும் மனித உரிமை மீறல்களிலும் புலிகள் ஈடுபடுவது கட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா உரத்துக் குரல் கொடுத்தபோது அதனை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டது. ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை எந்தப் பேச்சுக்கும் வர மாட்டோமென்று சண்டித்தனம் விட்ட தமிழ்ச்செல்வன், கதிர்காமரின் கொலையையடுத்து யுத்த நிறுத்த ஒப்பந்த மீளாய்வு குறித்து உடனடியாகவே பேச விழைவதாகக் குறிப்பிட்டார். பிறகு கிளிநொச்சியிலோ ஒஸ்லோவிலோ பேச்சு என்று கூறி காலத்தை இழுத்தடித்து வருகிறார்கள்.

என்றுமே மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் புலிகள் முன்வந்ததில்லை. தம்மை இராணுவ ரீதியாகக் கட்டியெழுப்புவதற்கும் யுத்தத் தயாரிப்புகளுக்காகவும் போர் நிறுத்த காலத்தைப் பயன்படுத்தியதே அவர்களின் வரலாறு.

ரணில் விக்கிரமசிங்க அரசோடு பேச்சுவார்த்தையை ஆரம்பித்த புலிகள், வடக்கு - கிழக்கு மக்களின் உடனடி புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கென அமைக்கப்பட்ட சிரான் உட்பட்ட இரு கமிட்டிகளிலிருந்தும் விலகிச் சென்றார்கள். இக் கமிட்டிகளுக்கு அதிகாரம் போதாதென்பதே புலிகள் கூறிய சாக்குப்போக்காகும். தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பேண உருவாக்கப்பட்ட இந்தக் கமிட்டிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் போதாதென்றால், பேச்சுவார்த்தை மேசையை விட்டு ஓடுவதல்ல தீர்வு. கூடிய அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து கூட்டுவதே ஒரே வழி. பல நாடுகளுக்கு உல்லாசப் பயணம் மேற்கொண்டு ஆறு மாதங்கள் மட்டுமே மேசையில் குந்தியிருந்த புலிகள் இன்று வரை பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பவில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

பின்னர் இலங்கையின் அரசியல் யாப்பிற்கு விரோதமான முறையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை முன்வைத்தனர். பின்னர் இந்த அதிகாரசபையை நிறுவினால் மட்டுமே பேச்சுவார்த்தையைத் தொடருவோம் என்று வாதிட்டனர்.

சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது வடக்கு, கிழக்கு மாகாணமே. இதற்கென சுனாமிப் பொதுக் கட்டமைப்பொன்றினை புலிகளுடன் இணைந்து நிறுவ அரசு முன்வந்தது. இப் பொதுக்கட்டமைப்பின் நான்கு ஷரத்துக்கள் அரசியலமைப்புக்கு விரோதமானதென உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. அதில் ஒரு ஷரத்து பிராந்தியக் கமிட்டித் தலைமையகம் கிளிநொச்சியில் நிறுவப்படக் கூடாதென்பதாகும். தாங்கள் திருகோணமலையிலேயே இத் தலைமையகத்தை நிறுவுமாறு கேட்டதாகவும் அரசாங்கமே கிளிநொச்சியில் பிராந்தியத் தலைமையகம் அமைய வேண்டுமென்று யோசனை கூறியதாகவும் புலிகள் கதையளந்தனர். உண்மையிலேயே புலிகள் வடக்கு, கிழக்கு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியிருந்தால் இந்த நான்கு ஷரத்துக்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு அரசுடன் இணைந்து தமிழ் பேசும் மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை முன்னெடுத்துச் சென்றிருக்க முடியும். மறு தரப்பினால் வழங்க முடியாததைக் கேட்பதும் அதையே சாட்டாக வைத்து தீர்வு முயற்சிகளிலிருந்து ஒதுங்கிக் கொள்வதும் புலிகள் இலங்கை மக்களுக்குப் போதித்து வரும் வரலாற்றுப் பாடமாகும்.

“1994ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் எவருமே போட்டியிடக் கூடாதென்றும் போட்டியிடுபவர்கள் துரோகிகளெனக் கருதப்பட்டுக் கொல்லப்படுவார்களென்றும் எச்சரிக்கை விடுத்த புலிகள், பத்து வருடங்கள் கழித்துத் தமது முகவர்களைப் போட்டியிட வைத்தனர். அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் புலி முகவர்கள் போட்டியிடுவதற்கு கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி மறுப்புத் தெரிவித்தார். எனவே மூலையில் வீசப்பட்டுக் கிடந்த தமிழரசுக் கட்சியின் பெயர்ப் பலகையைத் தூசி தட்டியெடுத்த புலிகள் தமது சார்பில் 'குதிரை கஜேந்திரன்' உட்படத் தமது முகவர்களைப் போட்டியிட வைத்து 22 எம்.பி.க்களைக் கள்ளவாக்குகளின் மூலம் தெரிவு செய்ய வைத்துத் தம்மை ஏகப் பிரதிநிதிகளென்று புலிகள் தம்பட்டமடித்துக் கொண்டனர். அதாவது தமிழ் மக்களின் நலன்களுக்காக அவர்கள் பாடுபடுவது இல்லை. புலிகள் தமது கபட நோக்கத்தையே முன் வைக்கிறார்கள் என்பதற்கு இது மற்றொரு உதாரணமாகும். குருக்கள் ஏதோ செய்தால் குற்றமில்லை என்பார்களே, அதுபோல் தான் இதுவும்.

புலிகளின் கொலைப் பட்டியலில் முன்னுரிமை வகித்தவர்களில் ஒருவரும் புலிகளுக்கெதிரான பிரசாரத்தை உலக நாடுகளில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றவருமான கதிர்காமரின் படுகொலை, ஒரு செய்தியை சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அரசுக்கும் தெளிவாகச் சொல்கிறது. யுத்த நிறுத்த காலத்தில் படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் உரிய முறையில் தடுப்பதுபற்றி நடவடிக்கை எடுக்காமல் மௌனமாக இருந்ததே கதிர்காமரின் உயிருக்கு விலை கொடுக்க வேண்டியேற்பட்டதற்கான காரணம் என்பதை மறுத்து விட முடியாது.

கதிர்காமரின் படுகொலை ஓர் தீய அம்சம். அந்த தீய அம்சத்தை புலிகளுக்கு எதிரான நல்ல செயற்பாடாக மாற்றுவதற்கு சர்வதேச சமூகமும் இலங்கை அரசும் முன்வரவேண்டும். கதிர்காமர் சாகும்வரை தேசத்தின் ஐக்கியத்திற்காக, தேசிய இனங்களின் சமாதான சகஜீவனத்திற்காக, புலிகளின் அராஜகங்களுக்கெதிராக உரத்துக் குரல் கொடுத்து வந்தார். 'செத்தும் கொடுத்த சீதக்காதியைப் போல' கதிர்காமரின் மரணமும் புலிகளின் அராஜகங்களுக்கெதிராக சர்வதேச சமூகத்தை உசுப்பி விட்டிருக்கிறது. டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் இணைத் தலைமை நாடுகள், கதிர்காமரின் படுகொலையை புலிகளே செய்திருக்கின்றனரென்று திட்டவட்டமாகக் கண்டித்திருக்கின்றன.

ஐரோப்பிய யூனியனும் இதனைத் தெளிவாகத் தெரிவித்திருப்பதோடு புலிகளுக்குப் பயணத் தடையையும் விதித்திருக்கிறது. காலம் கனிந்து வருகிறது. புலிகள் போதித்த மூன்றரை ஆண்டு கால அனுபவம் போதும் போதுமென்றாகி விட்டது. வடக்குக் கிழக்கு மாகாண சபையை மீள உயிர்ப்பித்து, இனப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இந்தியப் பாணியிலான அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கு இந்தியா உதவக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஈழத்துப் “பொல்பொட்”டுகளின் நரவேட்டையிலிருந்து வடக்கு, கிழக்கு மக்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் தமிழ் பேசும் மக்களும் கைகோர்த்து முன் செல்ல வேண்டும். ■

## ஊரிலிருந்து....



ஐரோப்பிய யூனியன் நாடுகள் தங்கட நாட்டில புலிகள் கால் வைக்கக் கூடாது எண்டு தடை போட்டதுக்கு ஆர் காரணம் எண்டு அறிஞ்சால் ஆச்சரியப்பட்டு போவீங்கள். முந்தி எங்கட நாட்டை ஆண்ட அரசொண்டில குடியுரிமை பெற்று பொருளாதாரத்தில உயர் பதவி வகிக்கிற எங்கட ஆள் ஒருவர் தாயகம் வந்திருக்கிறார். ஊருக்கு வந்தால் 'அவங்கட உபத்திரவம்' எண்டு போட்டு கொழும்பில நிண்டவரை ஊரிலிருந்து போய்ச் சந்திச்சன். யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கிற ஆட்களில ஒரு குறூப் டியூட்டி முடிஞ்சு தங்கட தங்கட தாய் நாட்டுக்கு போச்சினமாம். அப்படி போனவை வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்காமல் வடக்கு, கிழக்கில கடமையில இருக்கேக்க கதைக்க ஏலாத எல்லா விஷயத்தையும் அப்படியே போட்டு உடைச்சு விட்டினம். உண்மையா போர் நிறுத்தத்தை தங்கட கையைக் கட்டிப்போட்டு கடைப்பிடிக்கிறது இலங்கை இராணுவம் எண்டதோட புலிகளின்ட திருகுதாளம் எல்லாத்தையும் ஆதாரத்தோட புட்டு புட்டு போட்டு உடைச்சு விட்டினமாம். அதிர்ந்து போன ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக எடுத்த முதல் நடவடிக்கைதான் இது. போகப்போகப் பாருங்கோ! எங்க எல்லாம் கிடுக்கிப் பிடி எண்டு.

# ஈழத்தின் தலைநகரில் இறுதிப் பொங்கு தமிழ்

**போ**லியான போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகு தமிழ் மக்களை வீதிக்கு இழுக்கும் புலிகளின் செயற்பாடுகளின் நடவடிக்கைகளில் பிரதானமான நிகழ்ச்சி இதுவாகும். இதற்கு அடுத்தபடியாக எழுச்சி மாநாடுகளைக் குறிப்பிடலாம்.

ஏனையவற்றை அதாவது, ஹர்த்தால், வீதி மறியல், எதிர்ப்புப் பேரணி, உண்ணாவிரதப் போராட்டம், கடையடைப்பு, பாடசாலை பகிஷ்கரிப்பு என்பவை வேறொரு ரகமானவை. புலிகளின் பார்வையில் இவை அகிம்சை வழிப் போராட்டங்கள். இதையும் மீறினால் அல்லது தடுத்தால் கைக்குண்டு வீச்சு, இனந்தெரியாமல் சுடுவது, இரவில் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், ஆட்களைக் கடத்துதல் என்பவை மற்றுமொரு ரகமானவை. தமிழ் மக்கள், புலிகள் ஊருக்குள் வந்த கடந்த மூன்றரை வருடத்துக்கும் மேலான காலப் பகுதியில்தான் இந்தப் பொங்கு தமிழெல்லாம் பொங்கினதும், வழிந்ததும். இரண்டு தசாப்தத்திற்கும் மேலாக ஆயுதப் போராட்டம் நடத்திய புலிகள் சாதிக்க முடியாததையா பொங்கு தமிழும், எழுச்சி மாநாடும் சாதிக்கப் போகின்றன என்ற புதிருக்கு விடை காண்பதற்காக ஆரம்பகால கட்டத்தில் நடந்த இம்மாதிரியான நிகழ்வுகளுக்கு மக்கள் அலை அலையாக திரண்டு வந்தனர், மிகுதியானவர்களை இரவிரவாக புலிகள் வீடுகளுக்குச் சென்று வலுக்கட்டாயமாக வரச் சொல்லி வற்புறுத்தினர். அவ்வாறெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டு பெரும் எடுப்பில் நடத்தப்பட்ட எந்த நிகழ்ச்சியினூடாகவும் தமிழ் மக்களின் உண்மையான எழுச்சியையோ, உணர்ச்சிகளையோ சர்வதேசத்தின் கவனத்துக்கு வெளிக்காட்டுவதற்குப் பதிலாக தனியே புலிகளின் சுய இலாபம் கருதிய செயற்பாடுகளுக்காகவே அந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன என்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

அதன் விளைவாக அண்மைக்காலத்தில் புலிகளால் நடத்தப்படும் பொங்கு தமிழுக்கோ, எழுச்சி மாநாட்டுக்கோ மக்களின் பிரசன்னம் மிகவும் குறைவாகவே இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இலட்சக் கணக்கில் மக்களைத் திரட்டுவதாகக் கூறினாலும் அவர்களால் சில ஆயிரம் பேர்களையே திரட்ட முடிகிறது என்பதற்குச் சிறந்த உதாரணம் யாழ்ப்பாணத்தில் செப்டம்பர் முப்பதாம் திகதி நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வு.

அந்த பொங்கு தமிழ் நிகழ்வே கடைசிப் பொங்கு தமிழ் என்று கூறிவந்த புலிகள், அது தோல்வி கண்டதால் மறுபடியும் ஈழத்தின் தலை நகரமாகக் கருதப்படும் திருகோணமலையில் ஒரு பொங்கு தமிழை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இதுவரை வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களிலும் அடுத்தடுத்து எழுச்சி மாநாடுகளையும், பொங்கு தமிழ்களையும் நடத்திய புலிகள் அந் நிகழ்வுகளின் தீர்மானங்களாக சர்வதேச சமூகம் தங்களை அங்கீகரிக்க வேண்டுமெனவும், இல்லாவிட்டால் தாம் பிரிந்து போவதை எவராலும் தடுக்க முடியாது எனவும் பிரகடனம் வெளியிட்டனர். புலிகளின் இந்த வேண்டுகோள்களில் உண்மைத் தன்மை, அர்ப்பணிப்பு, ஜனநாயக மரபு, மனித உரிமை என்பன கொஞ்சமும் இல்லாததை மிகத் துல்லியமாக அறிந்து கொண்ட சர்வதேச சமூகம் சிறந்ததும், முக்கியத்துவமிக்கதுமான தனது பதிலை இதே காலப்பகுதியில் தெரிவித்துள்ளது. அதாவது புலிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் - அதாவது சுமார் இருபத்தைந்து நாடுகளில் தடை செய்வதோடு புலிகள், பயங்கரவாதிகள் என்றும், அவர்கள் படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும், சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதையும் நிறுத்தி சமாதான மேசையில் விசுவாசமான பங்காளியாகத் தம்மை நிரூபிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்தை, அமெரிக்கா உட்பட்ட சில நாடுகள் வரவேற்றுள்ளன. இதனூடாக புலிகளின் அம்பலம் அரங்கேறியுள்ளதை தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் முழு உலகுமே புரிந்து கொண்டுள்ளது. ஆனால் புலிகள் சர்வதேச சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களை ஆராய்ந்து தமது போக்கில் மாற்றத்தைச் செய்வதை விட்டு, மீண்டும் மீண்டும் பொங்கு தமிழ், எழுச்சி மாநாடு என்று தமிழ் மக்களை விரட்டிக் கொண்டிருக்கின்றனர். இப்போது கடைசியான பொங்கு தமிழ் என்று திருமலை நகரத்தில் நடத்தப் போகும் பொங்கு தமிழைக் கூறுகின்றனர். இதில் கடைசி என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ஒன்று - இதுவரை நடத்தப்பட்டவைகளில் கடைசி என்றும் கொள்ளலாம். மற்றது - திருமலை பொங்கு தமிழின் போது குண்டுகளை வெடிக்க வைத்து அல்லது கலவரத்தை ஏற்படுத்தி அப் பலியை படைத்தரப்பின் மீது சுமத்தி அதைக் காரணமாகக் கொண்டு ஒரு நெருக்கடி நிலையை அல்லது யுத்தத்தை தொடங்கி விடுவது என்றும் கருதலாம். அப்படி நடந்தால் இந்தச் சமாதான காலத்தில் நடைபெற்ற கடைசி நிகழ்ச்சியாகவும் திருமலை பொங்கு தமிழைக் கருதலாம்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் குண்டொன்றை வெடிக்கச் செய்து குழப்ப நினைத்த புலிகளின் திட்டம் அம்பலத்துக்கு வந்துள்ளது. அதாவது மேடை அமைத்துக் கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் அவ்வீடத்தில் குண்டுடன் ஒரு இளைஞனைப் பிடித்தனர். அந்த இளைஞனை புலிகள் தாமே அனுப்பியதாகவும், பல்கலைக்கழக மாணவர்கள் அவதானமாக இருக்கிறார்களா


அலசுவது

**- மதியூகி -**

என்பதை உறுதிப்படுத்தவே தாம் இவ்வாறு அனுப்பியதாகவும் தெரிவித்து, அவ்விளைஞனை அழைத்துச் சென்றனர். ஆகவே, யாழ்ப்பாணத்தில் நடைபெற இருந்த அனர்த்தம் திருகோணமலையில் நடைபெறக்கூடும். புலிகளைப் பொறுத்தவரை தமக்குப் பிரசாரமாகவும் அனுதாபமாகவும் சர்வதேச மட்டத்தில் அமையுமாக இருந்தால் ஒரு நூறு பேரோ, இருநூறு பேரோ இறந்து போவதில் எவ்வீதப் பிரச்சினையும் இல்லை. ஆகவே சர்வதேச மட்டத்தில் அகப்பட்டுப் போயிருக்கும் புலிகளின் பிடியை தளர்த்துவதற்காக அல்லது விடுவிப்பதற்காகப் பலியாகப் போகும் மக்கள் யார்? என்ற பெருங் கேள்வியைச் சுமந்து கொண்டு திருமலையில் பொங்கு தமிழ் ஏற்பாடு செய்யப்படுகிறது.

திருவிழா தயார். பலிக்கடா யார்?





நன்றி : 'த ஐலண்ட்'



**யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் குண்டொன்றை வெடிக்கச் செய்து குழப்ப நினைத்த புலிகளின் திட்டம் அம்பலத்துக்கு வந்துள்ளது. அதாவது மேடை அமைத்துக் கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் அவ்விடத்தில் குண்டுடன் ஒரு இளைஞனைப் பிடித்தனர். அந்த இளைஞனை புலிகள் தாமே அனுப்பியதாகவும், பல்கலைக்கழக மாணவர்கள் அவதானமாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தவே தாம் இவ்வாறு அனுப்பியதாகவும் தெரிவித்து, அவ்விளைஞனை அழைத்துச் சென்றனர். ஆகவே, யாழ்ப்பாணத்தில் நடைபெற இருந்த அனர்த்தம் திருகோணமலையில் நடைபெறக் கூடும்**

## அதிரடி அய்யாத்துரை



**திருடனுக்குத்தான்** விதானை வேலை குடுக்கவேணுமெண்டு ஊருக்குள்ள பகிடியாச் சொல்லுவினம். அது இப்ப சரியாப் போட்டுதுங்கோ. என்ன தான் தேசிய எழுச்சிக்குள்ள எடுபட்டுப்போய் ஏக தலைமையிட்ட தவில் வாசிச்சுக்கொண்டிருந்தாலும், முக்கியமான பங்ஷன்களில கலந்து கொண்டாலும் கழுவுற மீனில நழுவுற மீன் மாதிரி நழுவிக் கொள்ளுற சம்மந்தமானவருக்கு ஒரு கடிவாளத்தைப் போட்டிருக்கினமாக்கும். அதானுங்கோ தமிழான கட்சியின்ர தலைமைப் பொறுப்பை அவருக்கே குடுத்திருக்கினம். இனி அவர் தானே கிடந்து முறிய வேணும். பொறுப்பை எடுத்துக் கொண்டு சம்மந்தமானவர் போக்குக் காட்டினால் கூட இருக்கிறவையே வன்னியில போட்டுக் குடுப்பினமெண்டது அவருக்குத் தெரியும். அது சரி, வன்னியிலதான் ஏக தலைமையெண்டால் இதென்னது இன்னொரு தலைமை? ஓகோ ஒருவேளை தனித்துவம் காட்டினமோ. நன்றியுள்ளதுக்கு போர்த் தேங்காய் கிடைச்சமாதிரித்தான். அதுபோகட்டும், சம்மந்தமானவர் எம்.பி.யாகிறதில திருவாணமலை மக்களுக்குத்தான் பிரயோசனமில்லையெண்டு ஆகிட்டுது. ஏக தலைமைக்காவது ஏதாவது பலிக்குதோ எண்டு பார்ப்பம். வெயிட் அன்ட் சீ......

**தேனை** எடுத்தவன் கையை நக்குவான் எண்டு கேள்விப்பட்டிருப்பியள். இங்க என்னடாவெண்டால் கையை நக்குறதுக்குப் பதிலா ஒருவர் கையையே கடிச்சுப்போட்டாருங்கோ. யாரெண்டு சொன்னனெண்டால் மின்னல் வெட்டிச் சிரிப்பியள். சுனாமியாலை சனம் பாதிக்கப்பட்டு இருக்கேக்க, டீவியையும், ரேடியோவையும் எவ்வளவுக்கு பாவிக்க முடியுமோ அவ்வளவுக்குப் பாவிச்சுப் பிரசாரப்படுத்தினது மட்டுமில்லாம, உதவிகளையும் பெற்றுக்கொண்டவர் மக்களுக்கு வந்தது எண்டு யோசிக்காம, மண்ணைத் தூவி விட்டுட்டாருங்கோ. மின்னிற நிகழ்ச்சி நடத்தி இந்த வகையிலையும் அந்த வகையிலையும் ஏ-நைன் பாதைக்குள்ளால சமாதானத்தை கைப்பிடியா கூட்டிவந்திடுவன் எண்ட கணக்கா வரிவரியா வசை பாடின தம்பியார் தானுங்கோ, சுனாமி உதவியை சுருட்டிக் கொண்டு சுவிசுக்குப் பறந்திட்டாராம். நெருக்கமானவையிட்ட மட்டும் தன்னை சி.ஐ.டி. தேடுதெண்டு வண்டி விட்டிருக்காருங்கோ. பாத்தியளோ சக்தியான தொலைக்காட்சியில தன்னை சக்தி படைச்சவராகக் காட்டிக் கொண்டிருந்தவர், கடைசியில சனத்தின்ர பணத்தில சத்தி எடுத்துப் போட்டு சம்மந்தப்பட்டவைக்கு டாட்டா காட்டிப் போயிட்டார். இவர் சுனாமி சுனாமி எண்டு திரியேக்க கூத்தமைப்பு எம்.பி. செவாலியே லிங்கத்தாரும் கூடத் திரிஞ்சவர். இவரும் விரலை நக்கியிருப்பாரோ? நாமறியோம் பராபரமே.....

ரங்கமணி சுவிசில குளிரோ..... சூடோ......

**வாயால** தோரணம் கட்டி என்னால யாழ்ப்பாணத்திலையும் எம்.பி.யாக முடியும், தலைநகரிலையும் எம்.பி.யாக முடியுமெண்டு சாதிச்சுக் காட்டின மண்ணெண்ணையாரையே முழி பிதுங்க வச்சுப் போட்டினமுங்கோ. சின்னத்தம்பியார் நடத்திற குத்றோன் டிவிக்காரர், பேட்டி காணுறதெண்டுபோய் மண்ணெண்ணையாரிட்டக் கேட்டிருக்கினம். பார்ளிமெண்டில உங்களை கதைக்க விடாத கட்சிக்குள்ளேயே இன்னும் இருக்கிறியளே எண்டு கேட்டதுக்கு, அது வந்து உப்பிடி பிரதான கட்சியோடை இருந்தாத்தான் கொஞ்சமாவது எங்கட மக்களுக்கு உதவி செய்ய முடியும் எண்டதாலதான் இன்னும் அந்தக் கட்சியில இருக்கிறன் எண்டு மீசைக்குக் கீழாலை வடியிறதை துடைச்சுக் கொண்டு சொன்னவர். கேள்வி கேட்டவர் திருப்பிக் கேட்டாருங்கோ ஒரு கேள்வி. அப்புடியெண்டால் அமைச்சரா இருக்கிற தேவமானவரும் அப்புடித்தானே சொல்லிக் கொண்டு மக்களுக்கு உதவிக் கொண்டு அரசாங்கத்தில ஒரு அங்கமாக இருக்கிறார். அவரை மட்டும் வாய்க்கு வந்தபடியெல்லாம் நாகரிகமில்லாம விமர்சிக்கிறியளே எண்டு கேட்டதுக்கு, மண்ணெண்ணையார் முழியெல்லாம் பிதுங்கிப் போக, என்ன சொல்லிறதெண்டு தெரியாம பெப்பே..... யெண்டு வாயடைச்சுப் போயிட்டாருங்கோ. பெடியன் கெட்டிக்காறன். மண்ணெண்ணையான மண்ணெண்ணையாரையே மடக்கிப் போட்டானுங்கோ. அவருக்கு ஒரு சபாஷ்.

**முன்னம்** சிகப்புக் குரோசில விலாசங் காட்டிக் கொண்டு திரிஞ்சவர் வரேக்கையும் போகேக்கையும் ரெண்டெழுத்தாருக்கு தேவையானதை வாங்கிக் கொடுத்ததாலை கூத்தமைப்பில ஒரு எம்.பி.சீட்டை கூலியா வாங்கிப் போட்டார். ஆள் அப்பவே உதவியெண்டு செய்து கொடுத்தால் தாய்க்குலத்திட்டை வலிஞ்சு கொண்டு திரியிறவர். அவருக்குப் பதவி கிடைச்சால் சும்மாவே இருப்பார்

**கொலைகாரன்,** கொள்ளைக்காரனையெல்லாம் செல்வாக்கைப் பயன்படுத்தி விடுவிச்சுப் போட்டு, அவங்களைக் கொண்டு ஊருக்குள்ள கைவார் காட்டிக் கொண்டு திரியிறாராம். அதுமட்டுமே, வேலைவாய்ப்புக் கேட்டுக் கொண்டோ, வேறு ஏதாவது உதவி கேட்டோ வாற தாய்க்குலத்திட்டையும் தரக்குறைவா பேரம் பேசிறாராம். சாடை மாடையாப் பேசியும் சரி வராட்டில, கமலஹாசன் கணக்கா ஒரு உம்மாவாவது வாங்கிப் போட்டுத்தானாம் வந்த விஷயத்தைப் பார்க்கிறாராம். அவரைப் பத்தி சும்மாநாச்சும் தாய்க்குலத்திட்ட கேட்டால், அவர் மனிசன் இல்லையுங்கோ; மிருகம் எண்டு புகழ்பாடிட்டுப் போகினமாம். வவுனியாவைத் தன்ர கொண்ரோலில வச்சிருக்கிறாராம். பேருக்கு ஏத்தமாதிரி எப்பவும் கிசு கிசோட இருக்கிறதுதான் புடிக்குமோ என்னவோ....

**தலைநகரில** குடியிருக்கிற எங்கட சனத்துக்கு பாதையால யாழ்ப்பாணத்துக்கு போயிட்டு வாறதுக்குள்ள வேணாம் வேணாமெண்டு போகுதாம். வழமையான பதிவுக்குப் புறம்பாக இவையைக் கூப்பிட்டு ரெண்டெழுத்தார் விசாரிக்கினமாம். எப்புடியெண்டு தெரியுமோ? நீங்கள் தலைநகரில இருக்கிறது பிரச்சினையில்லை. உங்கட விலாசமெல்லாம் எங்களிட்ட இருக்கு. எங்கட உறுப்பினர்கள் உங்க வந்தால் அவைக்கு தங்கிறதுக்கு வசதி செய்து குடுக்கவேணும்...... புரியுதோ எண்டு இடத்தை புக் பண்ணினமாம். உப்பிடித்தான் இப்பவும் ரெண்டெழுத்தார் கொஞ்சப்பேர் தங்கியிருக்கினமாம். சரி என்ன செய்யிறது. தலை விதியெண்டிட்டு சனம் ஓம்பட்டுக் கொண்டு வீடு வந்து சேருதுகளாம். ரெண்டெழுத்தார் எப்புடி ஊடுருவினம் எண்டதை விசாரிக்கிறவைக்கு உப்புடியான சிம்பிள் மூவிங்குகள் தெரியாமத்தான் இருக்கினமோ எண்டும் யோசிக்க வைக்குது. இனிமேல் மூணு வருசத்துக்குள்ள தலை நகருக்குள்ள தலைக்கறுப்பைக் காட்டிக் கொண்டு திரியிறவையை தடவிப் பிடிக்கப் போகினமோ தெரியாது. நமக்கேனப்பா வீண் வில்லங்கம். கப் சிப்பெண்டு இருங்கோ....

**மூண்டு லட்சம்** பேரைக் கொண்டு வந்து முட்டுக்காலில இருக்கப் பண்ணுறன். அதுமட்டுமல்லாம, வரலாற்றில உதுதான் கடைசிப் பொங்கு தமிழ் எண்டும் போர்க்கொடி தூக்குமாப்போலை வீடு வீடாய்ப் போய் சனத்தை வாங்கோ வாங்கோ எண்டு அழைச்சும் சனம், சுரக்காய்க்கு உப்பு இல்லையெண்டிட்டு தங்கட தங்கட வேலையைப் பார்த்துதுகள். கடைசியா தமிழ் பொங்கி வழியேக்க நாலு இலக்கத்துக்குள்ளதான் சனம் வந்து நிண்டதுகளாம். இரவு பகலா நித்திரையில்லாம அரெஞ்மெண்ட் பண்ணின குதிரைக் கஜேந்திரத்தாருக்கு கடுப்பு அதிகமாகி முகத்தில எள்ளும் கொள்ளுமா வெடிச்சுப் பறந்ததை தூரத்தில இருந்து பார்த்தவைக்கு தெரிஞ்சுதாம். அஞ்சு இலக்கத்தில ஆள் சேர்க்கிறன் எண்டவர் நாலு இலக்கத்தில எண்டதும் நல்லா மரியாதை கெட்டுப் போயிட்டாராம். நல்ல காலம் உந்த முடிவு போன எலக்ஷனுக்கு முன்னம் தெரிஞ்சிருந்தால் ஆளுக்குக் குடுபட்ட எம்.பி.சீட்டும் கிடைச்சிருக்காதெண்டு விரிவுரையாளர் ஒருவர் விலாவாரியா வியாக்கியானம் செய்துகொண்டிருந்ததை நல்ல காலம் யாரும் கேட்டுப்போடயில்லையுங்கோ. இல்லாட்டில் வில்லங்கம்தான்.

# பன்முகம் கொண்ட எஸ்.பி.பி.


சென்ற வாரத் தொடர்ச்சி......

## புகழ் தந்த பாடல்கள்

கே.வி.மஹாதேவன் இசையமைப்பில் எம்.ஜி.ஆரின் 'அடிமைப்பெண்' என்ற



படத்தில் அவர் பாடிய 'ஆயிரம் நிலவே வா' என்ற பாடல் ஒரு சிறப்பான இடத்தை பாலுவுக்குப் பெற்றுத் தந்தது. 'இயற்கை என்னும் இளைய கன்னி' என்று ஜெமினிக்காக அவர் பாடிய டூயட்டும் பெரும் புகழ் பெற்றது. 'கேளடி



கண்மணி' என்ற திரைப்படத்தில் அவர் ராதிகாவுடன் இணைந்து நடித்து 'மண்ணில் இந்தக் காதலன்றி யாரும் வாழ்தல் கூடுமோ' என்று மூச்சு விடாமல் பாடிய பாடலை ஒருவரும் எளிதில் மறக்கவியலாது.

பாலுவிற்கு இசையமைப்பாளராகும் வாய்ப்பு தாசரி நாராயணராவின் 'கன்னியாகுமரி' என்ற திரைப்படத்தில் கிடைத்தது. தெலுங்கு, கன்னடம், தமிழ், ஹிந்தி ஆகிய நான்கு மொழிகளிலும் சுமார் 50 திரைப்படங்களுக்கு இசை அமைத்துள்ளார் பாலு. நடிகர்களுக்குப் பின்னணி பேசும் வாய்ப்பு அவருடைய ஆழமான வசீகரக் குரலுக்கு மற்றொரு வாயிலைத் திறந்து விட்டது எனலாம். 'அன்னமைய்யா' என்ற திரைப்படத்தில் திருப்பதி பாலாஜியாக நடித்த நடிகர் சுமனுக்குப் பின்னணிக் குரல் கொடுத்ததற்கு அவருக்கு Best Dubbing Artist Award கிடைத்தது. அவர் பாக்யராஜ், மோஹன், கிரீஷ் கர்நாட், ஜெமினி கணேஷ், நரேஷ், கார்த்திக், ரகுவரன், வினோத்குமார் போன்றவர்களுக்கும் பின்னணிக் குரலில் பேசியிருக்கிறார்.

பாலு தன் நல்ல நண்பர் கமலின் தூண்டுதலால் நடிப்பில் தீவிர ஆர்வம் கொண்டு பிரேமா என்ற தெலுங்குப் படத்தில் துவங்கி தமிழில் குணா, தலைவாசல், கேளடி கண்மணி, சிகரம், காதலன் என்ற படங்களிலும், தெலுங்கில் பவித்ர பந்தம், ஆறே பிராணம் என்ற படங்களிலும், முத்தின மாவா என்ற கன்னட மொழித் திரைப்படத்திலும் நடித்தார். கேபாலக்ருஷ்ணனின் 'ஜன்னல்' என்ற தொலைக்காட்சித் தொடரில் லக்சுமியுடன் இணைந்து சிறப்பாக நடித்தார். பாலு, லதாஜியுடன் பல அயல்நாடுகளுக்குச் சென்று Live Show நடத்தி விட்டு வந்தார். வெள்ளை மாளிகையில் லதாஜியுடன் பில் கிளின்டனைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

ஈநாடு தொலைக்காட்சியில் அவர் ஞாயிற்றுக்கிழமை தோறும் மூன்று வருடங்களாகத் தொடர்ந்து நடத்தி வந்த 'பாடுதா தீயகா' என்ற நிகழ்ச்சியின் மூலம்



கோபிகா பூர்ணிமா, பார்த்தசாரதி போன்ற அநேகப் புதுமுகங்கள் பின்னணிப் பாடகர்களாக மலர்ந்துள்ளனர். சமீபத்தில் ஈ டி.வி. கன்னடாவில் அவர் நடத்திய 'எதே தும்பி ஹாடுவெனு' என்னும் நிகழ்ச்சி மிகவும் அருமையாக அமைந்து, இசை இரசிகர்களுக்கு மாநிலமெங்குமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பல புதுத்திறமைகளைக் கண்டு இரசிக்கும்



அருமையான களமாக அமைந்தது.


பாலு தன்னைத் திரைப்படத்துறைக்கு அறிமுகப்படுத்திய திரு. கோதண்டபாணி அவர்களின் பெயரால் Kodandapani Audio Laboratories என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நிறுவி, அதைத் தன் கனவுக் கோயில் என்று அழைக்கிறார். நம் நாட்டிலுள்ள அதிநவீன ஒளிப்பதிவுக் கருவிகளுடன் கூடிய நிறுவனங்களில் ஒன்றாக அது அமைந்துள்ளது.

பாலுவுக்கு ஓய்வு நேரங்களில் கிரிக்கெட் பார்ப்பதில் விருப்பம். அவர் மகன் சரணும் நடிப்பிலும், பின்னணி இசையிலும் தந்தையின் அடிகளைப் பின்பற்றுகிறார். அவர் மகள் பல்லவி, திருமணத்திற்கு முன்பு ஏ.ஆர்.ரஹ்மான் அவர்களின் இசையில் சில பாடல்கள் பாடியிருக்கிறார். பாலு பங்கு பெறும் எந்த நிகழ்ச்சியும் ஸர்வே ஜனா சுகினோ பவந்து என்ற வாழ்த்துடன்தான் முடியும்.

பன்முகம் கொண்ட பாலு பல்லாண்டு வாழ்ந்து தம் இசைப் பணியை ஆற்ற வேண்டி இறைவனை இறைஞ்சுவோம்.

(முற்றும்)


## நவசித்தர் மாந்தீரீகம்




ஓம் குருவே நம: கர்ம வினைகளினால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத துன்ப துயரங்கள், வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டு பிரயாணத் தடை, காதல் பிரச்சினை, காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிரச்சினைகள் தீர வேண்டாதவரை பிரிக்க, கிரக தோஷ நிவர்த்தி செய்து வீட்டில் லட்சுமிகரம் ஏற்பட, வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அளிக்கக் கூடியவாறு விசேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அநேக காரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹா சக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்திரீக விஷ மருத்துவர்.

Dr.T.Murukuppillai (S.A.M.P), Main Street, Pandiruppu - 01. Kalmunai, (Sri Lanka) Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077







## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P. K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 - 11 - 2344831
web- www.drpksamy .com


## விளம்பரப் பகுதி

### தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk

### சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. - ஆசிரியர்

# இன்னொருவர் பார்வையில்

# அவசியமான தருணத்தில் ஐரோப்பிய யூனியனின் அதிரடி நடவடிக்கை

**'ஐரோப்பிய யூனியனின் தடை' புலிகளின் பாதைக்கு முடிவு' என்ற தலைப்பில் கடந்த 2ஆம் திகதி 'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. மேற்படி பத்திரிகையின் விசேட பந்தோபஸ்து நிருபரால் எழுதப்பட்ட இக்கட்டுரை, ஐரோப்பிய யூனியனால் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை குறித்தும் புலி இயக்கத்தை ஜனநாயக வழிக்குத் திரும்பச் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்கிறது.**

புலிகள் இயக்கத்தின் மீது காலவரையறையின்றி பயணத் தடையை விதிக்கவும் அந்த இயக்கத்ம் தனது படுகொலை வேட்டைகளை நிறுத்தாவிட்டால் அந்த இயக்கத்தை தனது பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள மேலும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஐரோப்பிய யூனியன் தீர்மானித்துள்ளது. இதனால் புலிகள் இயக்கத்தினால் உயிராபத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கும் மக்கள் நிம்மதி பெருமுச்சு விட முடிந்துள்ளது.

இத் தீர்மானம் மிகவும் பாராட்டுக்குரியது. தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் உட்பட இலங்கையர்கள் அனைவருமே வரவேற்பார்களென்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ஏனெனில் மிகத் தாமதமாகவென்றாலும் எடுக்கப்பட்டிருக்கும் இந்த நடவடிக்கை, புலிகள் தமது அரக்கத்தனமான செயற்பாடுகளைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதற்கு அழுத்தம் கொடுக்கும்.

இந்த முடிவு, புலிகள் மறைத்து வைத்திருக்கும் முகத்தை உதவி வழங்கும் நாடுகள் உணர்ந்து கொள்வதற்கு ஓர் ஊக்கியாகவும் அமையும். புலிகள் தமது பிரிவினைவாதத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் எதிரான மக்களை நாடெங்கும் கொன்று குவித்து நடத்திவரும் இரகசிய யுத்தத்துக்கு, உதவி வழங்கும் நாடுகள் மேலும் உதவாமல் தடுப்பதற்கும் அந்த முடிவு உதவும்.




நாடு புலிகளுக்குக் கொடுத்த விலை அளப்பரியது. கடந்த 22 வருடங்களில் பல திறமை வாய்ந்த அரசியல்வாதிகள், கல்விமான்கள் மற்றும் ஏனைய சமூகத் தலைவர்கள் புலிகளினால் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஜனநாயகத்தின் பேரால் அவர்கள் செய்த தியாகம் பாராட்டத்தக்கது. ஜனநாயகம், பயங்கரவாத எதிர்ப்பு, பிரிவினைவாத எதிர்ப்பு ஆகியவற்றின் பேரால் இச் சந்தர்ப்பத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் செய்த அதி உன்னத தியாகம் குறித்து விசேடமாகக் குறிப்பிட வேண்டும். அவரின் கொலையே புலிகளின் அவலட்சணமான முகத்தை ஐரோப்பிய யூனியனுக்கு அம்பலப்படுத்தியது.

புலிகளின் மிலேச்சத்தனத்தையும் பாசிஸச் செயற்பாடுகளையும் பூரணமாக அறிந்து கொள்வதற்கு அவர்களால் கொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலைப் பார்க்க வேண்டும். கலாநிதி நீலன் திருச்செல்வம், அ.அமிர்தலிங்கம், ஜனாதிபதி ஆர் பிரேமதாசா, ஜெனரல் ரஞ்சன் விஜேரட்ன, காமினி திஸாநாயக்கா, லலித் அத்துலத்முதலி, வி.யோகேஸ்வரன், சரோஜினி யோகேஸ்வரன் ஆகியோர் உட்பட மிகப் பலர் புலிகளால் கொல்லப்பட்டனர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்றோரைக் கொல்ல புலிகள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததையும் குறிப்பிடவேண்டும். தமது பாதைக்குக் குறுக்கே நிற்பவர்களை அழித்தொழிக்க விரும்பினால் புலிகளுக்கு எல்லைகள் இருக்காதென்பதை இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

சர்வதேச சமூகமும் உதவி வழங்கும் நாடுகளும் புலிகளுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு படுகொலைகள் சம்பந்தமான புலிகளின் வரலாற்றுப் பட்டியல் நல்ல ஆதாரமாக அமையும். இக் காலகட்டத்தில் இந்த உண்மையை ஐரோப்பிய யூனியன் புரிந்து கொண்டிருப்பதானது, இன்னமும் சந்தேகங்களுக்கு ஆட்பட்டுப் புலிகளின் பிரிவினைவாதத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் அனுதாபமும் ஆதரவும் தெரிவிப்பவர்களுக்கு முன்னுதாரணமாக அமையும்.

கடந்த இரு தசாப்தங்களாகப் புலிகள் புரிந்த ஆயிரக்கணக்கான படுகொலைகள் மற்றும் வன்செயல்கள் சம்பந்தமாகச் சட்ட நடவடிக்கையெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்திருந்தால் எப்போதோ புலிகள் மீது தடை விதிக்கப்பட்டிருக்கும்.

தீவிரவாத இயக்கத்தின் இத்தீய செயற்பாடுகள் குறித்து நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றங்கள் தீர்ப்புகள் வழங்கியிருந்தால் நிச்சயமாகச் சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கை ஊட்டியிருக்கும்.

போதிய ஆதாரங்கள் இல்லாததால் நீதிமன்றங்களில் நிரூபிப்பதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போனதால் புலிகள் தமது குற்றச் செயல்களைப் புரிந்து விட்டுத் தப்பிச் செல்வதற்கு எமது சட்ட பலவீனங்களும் கூடக் காரணமாக அமைந்தன.

புலிகள் மேற்கொண்ட குற்றச் செயல்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட முடியுமென்றாலும் கூட சில குற்றச் செயல்களுக்கு எதிராக மட்டுமே அதிகாரிகளால் வழக்குத் தாக்கல் செய்ய முடிந்தது என்பது வேதனைக்குரியது. வேறு சில வழக்குகள் போதிய சாட்சியம் இல்லாததால் இன்னமும் விசாரணை செய்யப்படும் நிலையிலேயே இருக்கின்றன. இவ்வாறான கொலைகள் குறித்து விசாரணை நடத்துவதற்கான நவீன கருவிகள் போதியளவு அரசாங்கத்திடம் இல்லையென்பதை உணர்ந்து கொண்ட புலிகள், தப்பிச் செல்லக் கூடிய விதத்தில் தமது கொலைகளைத் திட்டமிட்டு நடத்துகின்றனர். புலிகளின் குற்றச் செயல்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஒரு சிலவற்றை தவிர ஏனையவை நிலுவையில் இருக்கின்றன. சட்டத்திலிருக்கும் ஓட்டைகளே இதற்குக் காரணம். புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு 200 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மத்திய வங்கிக் குண்டு வெடிப்பைப் போன்று மேலும் பல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தால் அவை சர்வதேச சமூகத்தின் மீது பாரிய தாக்கமொன்றினை ஏற்படுத்தியிருக்கும்.

இத்தகைய திறமையீனங்களை புலிகளும் அவர்களது கையாட்களும் நன்கு பயன்படுத்தி தாம் நீதியான, இலட்சியத்திற்காகவே போராடுகின்றனரென்று உலகத்துக்கு எடுத்து காட்ட முனைந்துள்ளனர். இதற்கு ஆதாரமாக ஓர் உதாரணத்தைக் காட்ட முடியும். முன்னர் ஒரு தடவை ஐரோப்பிய யூனியன் நாடுகளில் புலிகளைத் தடைசெய்ய எடுக்கப்பட்ட முயற்சியையும் அதனைத் தாமதப்படுத்துவதற்கு செல்வாக்கு செலுத்தப்பட்டமை குறித்தும் எடுத்துக்காட்டாகக் கூறலாம். புலிகளின் குற்றச் செயல்களுக்கு எதிராக அரசாங்கம் செயற்பட்டு, அவை குறித்து ஐரோப்பிய யூனியனுக்கு நிரூபித்திருந்தால், பிரிவினைவாத சக்திகளின் முயற்சி என்றோ தோல்வியைச் சந்தித்திருக்கும்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விசாரணை செய்வதற்கு இந்தியா எடுத்த உடனடி நடவடிக்கையும் அதில் புலி இயக்கத் தலைவர் குற்றவாளியாகக் காணப்பட்டமையும் பயங்கரவாதத்துக்கு எதிராக அரசாங்கம் சட்டபூர்வ நடவடிக்கைகளை எவ்வாறு கையாள வேண்டுமென்பதற்கு நல்ல உதாரணமாகும். இருந்தாலும் கூட ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக பிரபாகரன் தேடப்படுகிறார். இவ்வாறான செயற்பாடுகள் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு தமது தந்திரோபாயம் குறித்து மீளாய்வு செய்வதற்கு செல்வாக்குச் செலுத்த முடியும்.

ஐரோப்பிய யூனியனின் தீர்மானத்தை மிகச் சாதாரணமானதென சமாதானத் தரகர்களான நோர்வேயினால் வெறுமனே தட்டிக் கழித்து விடமுடியாது. எனவே அவர்களுக்கு இந்தக் காலகட்டத்தில் பாரிய பொறுப்பொன்று இருக்கிறது. பக்கச் சார்பெதுவுமின்றி சம்பந்தப்பட தரப்புகளுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டியது நோர்வேயின் முக்கிய கடமையாகும்.

ஏனைய பயங்கரவாத இயக்கங்களோடு புலிகள் கொண்டிருக்கும் தொடர்புகள் குறித்து வெளிநாட்டு அரசாங்கங்களும் சர்வதேச சமூகமும் மிகப் பாரதூரமாகக் கவனத்திலெடுத்து விசாரணை நடத்த வேண்டும். புலிகளுக்கும் நேபாளத்தின் மாவோ கெரில்லாக்களுக்குமிடையிலான ஆயுதப் பேரம் பற்றி அண்மைய பத்திரிகைச் செய்திகள் இந்தியாவின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன.

வெளிநாடுகளில் புலிகள் வரவேற்கப்பட மாட்டார்கள் என்ற காரணத்தினால் பேச்சுவார்த்தைகளைத் தாமதிக்கச் செய்வதற்கு ஐரோப்பிய பயணத்தடையை ஒரு சாட்டாகப் புலிகள் முன் வைக்கலாம். ஐரோப்பிய பயணயத் தடைபற்றி கருத்துத் தெரிவித்த புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் இந்தத் தடை பேச்சுவார்த்தையை முறிவடைய வைக்கலாம் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் குற்றச் செயல்களைப் புரிந்து விட்டு மற்றக் கட்சிகளின் தலையில் பழியைப் போட்டு விட்டுத் தப்பிச் செல்லும் விதத்தில் புலிகள் செயல்பட்டு வந்திருக்கின்றனரென்பதைப் புலனாய்வுத் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. கொழும்பில் கொலையாளிகளை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்தி, தமது நோக்குகளை நிறைவேற்றுவதே புலிகளின் புதிய தந்திரோபாயம். இது தொடர்பாக கொழும்பில் பல ஒப்பந்த அடிப்படையில் செயற்படும் கொலைகாரக் குழுக்களோடு ஏற்கனவே புலிகள் தொடர்புகளை வைத்திருக்கின்றனரென்று தகவல்கள் கிட்டியுள்ளன.

புலிகளின் இத்தகைய நடவடிக்கைகள் கொழும்பின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும். ஏனெனில் இந்த ஒப்பந்தக் கொலைகாரக் குழுக்களில் பெரும்பாலும் சிங்கள இளைஞர்களே அங்கம் வகிக்கின்றனர். எனவே இராணுவ மற்றும் பந்தோபஸ்து அதிகாரிகள் புலிகளின் இந்தப் புதிய தந்திரோபாயத்தை சாதாரணமான ஒன்றாக எடுத்துக் கொள்ளக்கூடாது. பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்டுவதற்காக ஏற்கனவே பல சிங்கள இளைஞர்கள் புலிகளோடு இணைந்திருப்பதாகத் தெரியவருகிறது. இது ஆபத்தான வளர்ச்சிப்போக்காகும். இந்த ஒப்பந்தக் கொலை காரர்களையும் தேடிப் பிடிப்பது முன்னுரிமைப் பணியாக அமைய வேண்டும்.

கம்பஹாவில் கைதிகள் கொண்டு செல்லப்பட்ட சிறைச்சாலை வாகனம் மீது நடத்தப்பட்ட அண்மைய தாக்குதல் மிகச் சக்தி வாய்ந்த தொழில்சார் கொலைக் குழுக்கள் கொழும்பில் இயங்குகின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்தக் கொலைக் குழுக்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு உண்டா என்பது விசாரணைகள் மூலம் கண்டு பிடிக்கப்பட வேண்டியவையாகும். இதனைப் புலிகள் நிராகரிக்கலாம். ஆனால் இக் கொலைக் குழுக்களுக்கு புலிகள் பயிற்சியளித்திருக்கலாம்.

தமது முக்கிய எதிரிகளான அரசியல்வாதிகளை நெருங்க முடியாத நிலையில் புலிகள் இருக்கிறார்கள். இதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் கடினமான ஆயுதப் பாதுகாப்பு காரணமாகும். எனவே இவர்களைக் கொல்வதற்கு ஒப்பந்தக் கொலைகாரர்களைப் புலிகள் பயன்படுத்தக் கூடும். இந்த அபாயத்தை ஆனந்த சங்கரி முன் கூட்டியே அறிந்திருக்கலாம். இதனால்தான் கட்சி வழக்கொன்றிற்கு ஒழுங்கு பூர்வமானமுறையில் நீதிமன்றத்திற்கு ஆஜராகுமாறு கேட்கப்பட்ட அவர், தனது உயிருக்கு இருக்கும் ஆபத்து குறித்து நீதிபதியிடம் தெரிவித்துள்ளார். இவை குறித்து பந்தோபஸ்து அதிகாரிகள் கவனத்திலெடுத்திருக்கிறார்களா? எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் பலியெடுக்கக்கூடிய அபாயம் நிலவுகிறது. குறிப்பாக வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் கொல்லப்படக் கூடிய அபாயகரமான சாத்தியங்கள் இருப்பதைப் பந்தோபஸ்து அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

*நன்றி : சண்டே ஒப்சேர்வர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!


## —வாழ்க்கைச் சரிதம்—

என்னோடு தொலைபேசியில் பேசிய நண்பர் பெருந்தகை வேறு யாருமல்ல.

'வை.கோ.' என்று வையம் அழைத்து மகிழும், தமிழாய்ந்த பெருந்தகை திரு.வை. கோபால்சாமி அவர்கள் தான்.

### அரச கட்டளை

'கணேசு... இவருதான் வாலி; நம்மூர்க்காரரு... திருச்சி சாந்தி பிலிம்ஸ்



பெரியண்ணன் அவர்கள், சிவாஜியிடம் என்னை இப்படித்தான் அறிமுகப்படுத்தி வைத்தார்.

அப்போது நான் ஏகப்பட்ட எம்.ஜி.ஆர். படங்களுக்குப் பாடல்கள் எழுதிக் கொண்டு இருப்பது சிவாஜிக்குத் தெரியும். அதன் காரணமாகவே, என்பால் அவருக்கு ஓர் எரிச்சல் இயல்பாக இருக்கக்கூடும் என எண்ணினேன் நான்.

ஆனால், என் எண்ணத்திற்கு மாறாக சிவாஜி அவர்கள் சிரித்த முகத்தோடு, 'வாங்க..' என்று என் வலக்கரத்தில் தன் வலக்கரத்தைக் கோத்து, வரவேற்றார்.

திரு. பெரியண்ணன் அவர்கள், சிவாஜி குடும்பத்திற்குப் பிள்ளையார் சுழி போன்றவர். அவரை முன்னிலைப்படுத்தியே நடிகர் திலகத்தின் குடும்ப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சிவாஜியைக் கொண்டு தான் தயாரிக்கும் 'அன்புக் கரங்கள்' படத்திற்கு நான் பாடல்கள் எழுத வேண்டும் என்று பெரியண்ணன் அவர்கள் பெரிதும் விரும்பினார். அதன் காரணமாகவே என்னை அழைத்து சிவாஜியிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

1964இல் ஆரம்பமான இந்த அறிமுகம், பிறகு நான் 60 சிவாஜி படங்களுக்குப் பாடல்கள் எழுத ஓர் ஆரம்பமாக அமைந்தது.

'பராசக்தி' காலத்திலிருந்தே சிவாஜியின் நடிப்பில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த நான் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றக் கூட்டங்களில், சிவாஜியை விமர்சித்துப் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானதுண்டு.

இது குறித்து சிவாஜிக்கு மனதளவில் என்பால் கசப்புணர்வு மெல்லியதாய் பரவியிருந்தபொழுதும், அவர் படங்களுக்கு நான் பாடல் எழுதக்கூடாது என்றெல்லாம் தடை விதிக்கக்கூடிய குறுகிய கண்ணோட்டம் அவரிடம் இருந்ததில்லை.

தனிப்பட்ட முறையில் சிவாஜியும், எம்.ஜி.ஆரும் ஆரத்தழுவி அன்பு பாராட்டும் நண்பர்களாக இருந்தபோதும், தொழில் ரீதியாக அவர்களுக்கிடையில் ஒரு போட்டி மனப்பான்மை இருந்தது முக்காலும் உண்மை.

சிவாஜி நடிக்கும் அன்புக் கரங்கள்' படத்திற்கு நான் பாடல்கள் எழுதுவதாக, என் பெயரைத் தாங்கிய முழுப் பக்க விளம்பரம் நாளேடுகளில் வெளியான அன்று-

'தாழம்பூ' படப்பிடிப்பில், நான் எம்.ஜி.ஆரை தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது.

என்னைப் பார்த்தவுடன் 'உங்க அன்புக் கரங்கள் எப்ப ரிலீஸ்?' என்று எம்.ஜி.ஆர் புன்னகைத்தவாறு என்னிடம் கேட்டார்.

"உங்க அன்புக்கரங்களில் இருந்து என்றைக்குமே எனக்கு ரிலீஸ் கிடையாது" என்று நான் சொன்னதும் எம்.ஜி.ஆர். நெகிழ்ந்து போனார்.

தமிழ்நாடு முழுவதும் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த சமயம், நிவாரண வேலைகளுக்காகப் பெரிய அளவில் நிதி திரட்டித் தர, நடிகர் சங்கத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு -


ஐந்து முக்கிய பெருநகரங்களில் முதலமைச்சர் திரு.எம்.ஜி.ஆர். தலைமையில், அனைத்துப் பிரபல நடிகர்களும் பங்கு பெறும் வகையில், கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியிருந்தன.

திருநெல்வேலியில் நடந்த கலை நிகழ்ச்சிக்கு எம்.ஜி.ஆர். தலைமை வகிக்கையில், நான் அவருக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்தேன். (தொடரும்.......)

இதய வெளி

---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




பெல்பாய்டு என்கிற பெண், அமெரிக்க உள்நாட்டுப் போரில் அடிமை வியாபார ஆதரவுப் படைக்குச் சாதகமாக பல சாகஸங்களைச் செய்தாள். அரசாங்க ஆதரவுப் படைகள் பாலங்களை நாசம் செய்து அடிமை வியாபார ஆதரவு படைக்கு உணவு கிடைக்காமல் செய்ய முயற்சிக்கப் போகிறது என்கிற தகவல் கிடைத்தவுடன் அந்தத் தகவலை அடிமை ஆதரவுப் படைத் தலைமைக்குத் தெரிவிக்க விரும்பினாள் பாய்டு. அரசாங்கப் படை அணிகளைத் தாண்டிச் சென்றுதான் அந்தத் தகவலை அவள் கொடுக்க வேண்டியிருந்தது.

தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் பாய்டு இராணுவ வீரர்கள் சுட்டுக் கொண்டிருந்தபோதே குண்டுகளுக்கு மத்தியில் சாமர்த்தியமாக நுழைந்து சென்று சேர்க்க வேண்டிய இடத்தில் தகவலைச் சேர்ந்தாள். இதனால் அந்த இராணுவம் பட்டினிக் கிடக்காமல் பாதுகாக்கப்பட்டது.

ரோஸ்கிரீன் ஹெளன் என்பவள் அழகான விதவை. நாற்பது வயது அவளுக்கு. அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் வட்டாரத்தில் மிகவும் பிரபலமாக இருந்தவள். அடிமை வியாபாரத்தை ஒழிக்க விரும்பிய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் எதிர்ப்பாளர் அவள். அவருக்கு எதிரான படைகளுக்கு உளவாளியாக வாஷிங்டன் நகரத்திலேயே அவள் செயல்பட்டாள். லிங்கனுக்கு நெருக்கமான நண்பர்களை வீட்டுக்கு அழைத்து வந்து விருந்து வைத்து சல்லாபித்து பேச்சுக் கொடுத்து தேவையான ரகசியங்களைச் சேகரிப்பது அவளுக்குப் பழக்கம். பிறகு அந்தத் தகவல்களை லிங்கனின் எதிரிப் படைகளுக்கு அனுப்பி வைத்து விடுவாள். இதன் விளைவாக வெற்றி பெற வேண்டிய லிங்கனின் படைகள் சில போர் முனைகளில் தோற்க வேண்டிய நிலையும் உருவாயிற்று.

எலிசபெத் வான் லியூ என்ற ஒரு பெண். அவள் லிங்கனுடைய அரசாங்கப் படையின் பிரதம தளபதிக்கு உளவாளியாக வேலை பார்த்தாள். தன்னுடைய வீட்டிருந்தபடியே பிரதம தளபதியின் செயலகத்திற்கு சமிக்ஞைகள் மூலம் செய்திகள் அனுப்பும் ஒரு முறையை அவள் கையாண்டாள். அவள் அளித்த தகவல்கள் லிங்கனின் படைகள் வெற்றி பெற பேருதவியாக இருந்தன.

### புகழ் பெற்றவர்கள்


பெண் உளவாளிகளில் சமீபகாலத்தில் மிகுந்த புகழ் பெற்று பத்திரிகைகளில் பரபரப்பை ஏற்படுத்தியவள் கிறிஸ்டியன் கீலர். பிரிட்டனில் வாழ்ந்தாள். அமைச்சர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என்று படுக்கைக்குப் படுக்கை தாவி பல சாகசங்கள் புரிந்தவள். சர்வதேசத் தலைவர்கள் பலரையும் சுண்டுவிரலில் ஆட்டி வைத்தவள். ரஷ்யர்களின் உளவாளியாக பிரிட்டனில் அவள் செயல்பட்டாள்.

அவளுடைய சாகசத்திற்கு பலியானவர் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சராக விளங்கிய ப்ர:புயூமோ. அவருக்கு வலை விரித்து அவரிடமிருந்த பாதுகாப்பு ரகசியங்கள் பலவற்றையும் அறிந்து அவற்றை ரஷ்யர்களுக்குக் கொடுத்துதவினாள். அவளுடைய லீலைகள் வெளிப்பட்டபோது ப்ர:புயூமோவும் அதில் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---



இலங்கையில் தினந்தோறும் சட்ட விரோதமான கருக்கலைப்புக்கள் 3500 முதல் 4000 வரையில் மேற்கொள்ளப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கருக்கலைப்பு என்பது இலங்கையில் சட்டமாக்கப் படவில்லை என்பதால் மேற்படி எண்ணிக்கையானது, இதனையும் விட அதிகமாகலாம் என்பது மருத்துவத்துறையின் கருத்தாக உள்ளது.

கருவைத் தொடர்ந்து வயிற்றில் சுமந்து கொண்டிருக்கும் போது தாயின் உயிருக்கு ஆபத்து ஏதும் நிகழக் கூடுமாயின், மருத்துவ அனுமதியின் பிரகாரம் கருக்கலைப்பு செய்வதற்கு இந்நாட்டில் சட்ட ரீதியிலான அனுமதி இருக்கிறது. கருக்கலைப்பு என்பது அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதொரு விடயமாகும். இலங்கை உட்பட அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற கருக்கலைப்புகளில் நூற்றுக்கு 95 சதவீதமானவை பாதுகாப்பற்றதாகும். சகல வயதுகளையுடைய பெண்கள் மத்தியிலும்

# கருக்கலைப்பால் ஏற்படும் அபாயம்



கருக்கலைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது, திருமணம் முடித்த, முடிக்காத, குழந்தைகள் பெற்ற அனைத்து ரகப் பெண்கள் மத்தியிலும் கருக்கலைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கருக்கலைப்பு சட்டரீதியாக்கப்படாமை காரணமாக இவ்வாறானதொரு நிலைமையின் கீழ், கருக்கலைப்பு தொடர்பான எவ்வித அறிவும் இல்லாத அல்லது அது தொடர்பான அனுபவம் இல்லாத மருத்துவர்களும் அல்லாத நபர்கள் கருக்கலைப்பு செய்வது மிகவும் பயங்கரமானதொரு விடயமாகும்.

அதே நேரம் இந்நபர்கள் கருக்கலைப்பு செய்வதற்காக உபயோகிக்கின்ற உபகரணங்கள் விஷக் கிருமிகளைக் கொண்டவையாக காணப்படுகின்றன. இதனால் கருக்கலைப்பு செய்து கொள்கின்ற பெண்களுக்குப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான சட்ட விரோதமான முறையில் கருக்கலைப்புக்கு உட்படுத்தப்பட்டு அதிக இரத்தம் வெளியேறுதல் உட்பட பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகின்ற பெண்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவதானது தற்போது மிகவும் அதிகரித்து வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகின்றன. இவ்வாறான ஒரு பெண்ணுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அரசுக்கு 35,000 ரூபா மட்டிலும் செலவு செய்ய நேரிடுகின்றது. இது முழு சமூகத்திற்கும் பெரும் சுமையைக் கொண்டு தருகின்ற ஒரு விடயமாகும்.

சட்ட விரோதமான கருக்கலைப்பு காரணமாக உலகம் முழுவதிலும் நாளொன்றுக்குச் சுமார் 180 பெண்கள் இறக்கின்றனர்.

இலங்கையில் கூட சட்டவிரோத கருக்கலைப்புக் காரணமாக பெரும்பாலான பெண்கள் இறந்து வருகின்றனர். அல்லது பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, இதற்கான தீர்வு என்ன? என்பதைத் தான் நாங்கள் கண்டறிய வேண்டும்.

கருக்கலைப்பைச் சட்டரீதியாக்குவது தான் இதற்கான தீர்வாகும் என ஒரு சாரார் கூறுகின்றனர்.



நாடளாவிய ரீதியில் பரந்துபட்டிருக்கின்ற கருக்கலைப்புச் செய்யும் நிலையங்களைச் சுற்றி வளைத்து அவற்றை நடாத்திவருபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்க வேண்டுமென இன்னும் ஒரு சிலர் கூறுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு முன்னர் பெண்கள் ஏன் கருக்கலைப்புச் செய்து கொள்ளத் தூண்டப்படுகிறார்கள் என்பதை இனங்காண வேண்டும்.

தேவையற்ற முறையில் கருத்தரிப்பதே இதற்கு முக்கியக் காரணமாகும் என பெரும்பாலும் கூறப்படுகின்றது.

கருக்கலைப்பு மேற்கொள்ளப்படக் கூறப்படும் முக்கியக்காரணிகள்: ஒரு பெண் கர்ப்பம் தரித்தால் அதனை அப் பெண்ணின் துணைவனோ அல்லது குடும்பத்தாரோ ஏற்றுக் கொள்ளாமையாகும். அல்லது அந்த கர்ப்பத்துக்கு ஒத்துழைப்பு வழங்காமையாகும்.


மற்றது பெண்ணின் கர்ப்பமானது அப்பெண்ணின் உடல்நலத்திற்கு ஒத்துவராமை அல்லது உயிருக்கு ஆபத்தை உண்டு பண்ணுதல்.

கர்ப்பப்பையில் இயல்பு நிலை தோன்றாமை.

போன்ற காரணங்களையும் கூறலாம்.

திட்டமிடப்படாத உடலுறவுகள் காரணமாகத் தேவையற்ற கர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இவ்வாறான கருத்தரிப்புக்கள் உலகம் முழுவதிலுமாக வருடாந்தம் 80 மில்லியன் அளவில் ஏற்படுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இதற்கான காரணங்களை நோக்கும் போது, கற்பழிப்பு, கர்ப்பிணியானதன் பின்னர் அக் குழந்தை தேவையற்றதாகுதல், திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாகவே கர்ப்பம் தரித்தல், திருமணம் முடித்திருந்



தாலும் வயது வந்த பிள்ளைகள் இருத்தல் கருத்தரித்து மூன்று மாதகாலத்திற்குள் ஏற்படக்கூடிய 'ருபெல்லா' போன்ற நோய்கள், குடும்பத்திட்டம் தொடர்பில் கொண்டுள்ள கவலையீனங்கள், குடும்பக்கட்டுப்பாட்டு முறை தோல்வி அடைதல் என்பன சிலவாகும்.

பெரும்பாலான பெண்கள் திருமணம் முடித்த ஆரம்ப காலக் கட்டத்தில் கருத்தரிக்க விரும்புவதில்லை. இதற்குத் தனிப்பட்ட பல காரணங்கள் இருக்கலாம். எயிட்ஸ் போன்ற நோய்கள் தொடர்பிலான அச்சங்கள், சமூகப் பொருளாதார அழுத்தங்கள் போன்றவையும் கூடக் காரணங்களாக இருக்கலாம்.

தேவையற்ற கருத்தரிப்பைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பொறுப்புடன் கூடிய பாலியல் தொடர்புகள் மிகவும் முக்கியமானதாகும் என்பது மருத்துவக் கருத்தாகும்.

தேவையற்ற கருத்தரிப்புகளின் மூலம் மார்புப் புற்று நோய், இதயம் தொடர்பான நோய்கள், நீரிழிவு, சிறுநீரக நோய்கள் என்பன ஏற்படக் கூடுமென கண்டறியப் பட்டுள்ளன.

கருக்கலைப்பை மேற்கொள்ளக் கூடிய உரிய ஒழுங்கு விதிகள் உள்ளன. அதனை ஏற்று, அது தொடர்பில் நன்கு பயிற்சிகளைக் கொண்ட மருத்துவர்களால் கருக்கலைப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதே மருத்துவத்துறையின் கூற்றாகும்.

உரிய முறையில் அதனை மேற்கொண்டால் உயிரழிவில் இருந்தும் பிற பாதிப்புகளில் இருந்தும் பெண்களைக் காப்பாற்றிக் கொள்ள இயலும்.

-பாரூக்

# உரிமை மடல் 23

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்*
*தேவானந்தா அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*

**அன்பான எம் தேசத்து மக்களே!**
**உலகெங்கும் பரந்து வாழும் எம் தாயகத் தேசத்து உறவுகளே!**
**என் உயிரினும் மேலான பாசமிகு தோழர்களே!**

**உங்களுக்கு வணக்கம்!**

எம் தாயகத் தேசத்தின் விடியலை விரைவாக வென்றெடுப்போம் என்ற தளராத நம்பிக்கைகளோடு மக்களாகிய உங்களைச் சுதந்திரப் பிரஜைகளாக இந்த மண்ணில் வாழவைப்போம் என்ற உருக்குறுதி வாய்ந்த உணர்வுகளோடு மறுபடியும் ஒரு உரிமை மடலில் உங்களோடு மனந்திறந்து பேசுவதில் நான் மனம் நிறைகின்றேன்!

உரிமைக்காகப் போராடும் நாங்கள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக ஓய்வெடுத்துக்கொண்ட வரலாறு இதுவரை இல்லை! எமது மக்கள் எமது தாயகத் தேசத்தில் சுதந்திரப் பிரஜைகளாக உரிமை பெற்று எப்பொழுது நிம்மதியாக வாழத் தொடங்குகின்றார்களோ அப்பொழுதுதான் நாமும் நிம்மதியாக ஓய்வெடுத்துக்கொள்ள முடியும்!

அதுவரை எதுவரினும் எதிர்கொள்ளத் தயார் என்ற திடமான மன உறுதியோடு மக்களாகிய உங்களுக்காக உழைப்போம் என்ற தென்போடும், திட்டங்களோடும் நாம் எழுந்து முகமுயர்த்தி நிற்போம்!

எம் இனிய மக்களே!

நாம் ஒடுக்கப்படுகின்ற ஒரு தேசிய இனம்! எமது ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் பூரண சுதந்திரம் எமக்கும் உண்டு! அந்த வகையில்தான் நாம் ஆயுதப் போராட்டத்தில் அன்று ஈடுபட்டிருந்தோம்!

முடிவற்ற யுத்தம் என்பது அர்த்த மற்றனவாக - வகைதொகையற்ற அழிவுகளை எமது மக்களாகிய உங்களுக்குத் தந்துகொண்டிருப்பதால்...

மாறி வரும் உலகத்தின் போக்கைக் கருத்தில் கொண்டு நாம் செயற்பட எண்ணியதால்....

பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தையும் அரசியல் தீர்வையும் எட்ட முடியும் என்ற நம்பிக்கையின் சமிக்ஞைகள் இலங்கையின் அரச தரப்பிடமிருந்து கிடைத்திருந்ததால்....

அதற்கு அயலுலக மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு எமக்குக் கிடைத்திருந்ததால்....

எமது போராட்ட வடிவத்தை நாம் மாற்றியமைத்துக் கொண்டவர்கள்!

ஆனால், புலித் தலைமைகளோ இன்னமும் மக்களின் வாழ்வியல் உரிமைகளை மறுப்பவர்களாக - மனித உயிர்களைக் காவுகொள்ளும் வன்முறையாளர்களாக - ஆயுதங்கள் மீது மோகம் கொண்டு மறுபடி மறுபடி ஒரு யுத்தத்தை மக்களாகிய உங்கள் மீது திணிப்பதற்கே கங்கணம் கட்டி நிற்கிறார்கள்!

விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் அர்த்தமற்ற தொடர் அழிவுகளை ஏற்படுத்திக்கொண்டு அதன் ஊடாகப் புலித் தலைமை தனது இருப்பைத் தக்கவைத்து வருகின்றது!

ஈ.பி.டி.பி.யினராகிய நாம், அழிவுகளிலிருந்து மக்களைக் காத்து அர்த்தமுள்ள ஒரு அரசியல் தீர்வுக்கூடாக எமது மக்களின் விடுதலையை வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கையோடு களத்தில் நிற்கின்றோம்!

இதில் யாருடைய வழிமுறைக்கு மக்களாகிய உங்களது அங்கீகாரம் கிடைக்கின்றது என்பதும், யாருடைய வழிமுறைக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கின்றது என்பதும் மக்களாகிய உங்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் நன்கு தெரியும்!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்பு ஆயுதப் போராட்டத்தை இடை நிறுத்திய நாம் ஜனநாயக அரசியல் களத்தில் நின்று இன்று வரை பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்!

நாங்கள் ஆயுதப் போராட்டத்தை மட்டும்தான் இடை நிறுத்தினோமே தவிர, எமது உரிமைப் போராட்டத்தைக் கைவிட்டு விடவில்லை!

நாங்கள் அழிவுகளை மட்டும் தருகின்ற ஆயுத பலத்தோடு மட்டும் களத்தில் நின்றவர்களல்ல. அர்த்தமுள்ள அரசியல் தீர்வுக்காக ஆத்ம பலத்தோடு உங்கள் ஆதரவோடு மக்களாகிய உங்கள் மத்தியில் நிற்பவர்கள்!

மக்களாகிய உங்களது விருப்பங்களுக்கு மாறாக ஆயுத பலாத்காரத்தின் ஊடாக அச்சத்தை உருவாக்கி அதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாமே என்று மக்களாகிய உங்களது தலைமையை தான்தோன்றித்தனமாகத் தட்டிப்பறித்த புலிகள் எமது விடுதலைப் போராட்டத்தை இன்று எந்தத் திசை நோக்கி இழுத்துச் செல்கின்றார்கள்?....

இன்று எமது போராட்டம் எங்கே சென்று கொண்டிருக்கிறது?.... எமது மண்ணில் இப்போது என்ன நடந்துகொண்டிருக்கிறது?... இவைகளை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

புலிகள் - மக்களை – உங்களை மிரட்டி வதைத்து மௌனமாக்கி மக்களது – உங்களது ஏகப்பிரதிநிதிகளாகத் தம்மைத்தாமே வெளிக்காட்டி தமது தொடர்ச்சியான கொலைகளால் - வன்முறைகளால் - மக்கள் விரோதச் செயல்களால் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் பயங்கரவாதிகளாக அடையாளப் படுத்தப்பட்டு தடை உத்தரவினைப் பெற்றுக் கொண்ட புலிகளினால், நியாயமான எமது மக்களின் அரசியலுரிமைக்கான கோரிக்கை என்பது இன்று உலக நாடுகளினால் பயங்கரவாதமாக சித்திரிக்கப்பட்டு வருவது கண்டு நான் வேதனைப்படுகின்றேன்!

எமது மக்களின் அரசியல் அபிலாஷைகள் மீது பயங்கரவாதம் என்ற கறை பூசப்பட்டிருப்பது கண்டு நான் துயரப்படுகின்றேன்!

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக ஆரம்பித்து இன்று அதை ஒரு ஜனநாயக ரீதியிலான போராட்டமாக மாற்றியிருப்பது வரை இந்தப் போராட்டத்திற்காக இரத்தத்தையும் தசையையும் தாரைவார்த்துக் கொடுத்தவர்கள் என்ற வகையில் இன்றைய எமது தாயக தேசத்தின் நிலை கண்டு என்னால் வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை!

உயிரினங்களை வதைப்பது பாவம் என்று கருதிய மக்கள் நீங்கள்! மனிதநேயப் பண்புகளால் சர்வதேச அரங்கில் மிடுக்கோடு முகமுயர்த்தி நின்றவர்கள் தமிழ் பேசும் மக்கள்!

ஆகையால்தான் அன்று எமது போராட்டத்தை நோக்கி சர்வதேச நாடுகளின் சாதகமான ஒரு பார்வை இருந்தது. ஆனால் இன்று அந்த நிலை தலைகீழாக மாறிவிட்டது. ஏன் இந்த நிலைமை?....

மக்களாகிய உங்களது கனவுகள் மீது பயங்கரவாத முத்திரை குத்தியவர்கள் யார்?....

உங்களது மனிதநேய அடையாளங்களை சர்வதேச அரங்கில் சிதைத்தவர்கள் யார்?....

உங்களது முகங்களில் கரி பூசியவர்கள் யார்?...

இன்று பொங்கு தமிழ் என்று கூறி மக்களை பலாத்காரமாக வீதிக்கு இழுத்துக் கொண்டு மறுபுறத்தில் சொந்த இனத்தையே கருவறுத்து வருவதற்குப் புலிகள்தான் காரணம் என்பதை மக்களாகிய நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

**உன் கால்களில் குத்திய**
**கூரிய முட்கள் ஒவ்வொன்றும்**
**நீ எப்போதோ தூவி வைத்தவை...**
**அதில் அடுத்தனின் பங்கு குறைவு!**

என்றான் ஒரு கவிஞன்.

அதுபோலவே புலிகள் வகுத்துக்கொண்ட பாதை புலிகளுக்கே படுகுழியாக அமைந்து விட்டது. ஒடுக்குமுறையாளர்கள் தமக்குரிய புதைகுழியைத் தாமே தோண்டிக்கொள்கிறார்கள் என்பது போல் புலிகள் தமக்குரிய புதைகுழியைத் தாமே தோண்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை!

பாரதப் பிரதமர் ராஜுவ் காந்தியைக் கொன்றிருக்காவிட்டால் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று முடிவெடுத்து இந்தியா தடை செய்திருக்காது!

சொந்த இனத்தைக் கருவறுப்பது போல் சொந்த மக்களையே படுகொலை செய்திருக்காவிட்டால் அமெரிக்காவும் பிரித்தானியாவும் கனடாவும் புலிகளைத் தடை செய்திருக்கமாட்டா.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் கதிர்காமரை படுகொலை செய்திருக்காவிட்டால் இன்று ஐரோப்பிய யூனியன் புலிகளுக்குப் பிரயாணத் தடை விதித்திருக்காது!

சிறுவர்களைப் பலாத்காரமாக படையணிக்குத் திரட்டுவதை நிறுத்துங்கள்!.. அரசியல் படுகொலைகளை நிறுத்துங்கள்!... ஆட்கடத்தல் அச்சுறுத்தல்களை நிறுத்துங்கள்! கப்பம் வாங்குவதை நிறுத்துங்கள்! என்று சர்வதேச சமூகம் புலிகளை நோக்கி நீண்ட காலமாகவே கோரிக்கைவிடுத்துக் கொண்டிருக்கிறது!

சர்வதேச சமூகத்தின் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளைப் புலிகள் ஏற்றுக் கொள்ள மறுத்து, தொடர்ந்தும் வன்முறை மீதும், பயங்கரவாத நடவடிக்கைகள் மீதும் நாட்டம் கொண்டு செயற்பட்டு வருவதனால் மட்டுமே இன்று புலிகள் மீது சர்வதேச சமூகம் அழுத்தங்களையும் தடைகளையும் பிரயோகித்து வருகின்றது.

உலக நாடுகளெங்கும் இருக்கின்ற பயங்கரவாத இயக்கங்களோடு இணைத்து புலிகளையும் பட்டியலிட்டு சர்வதேச சமூகம் அறிவித்து வருகின்றது.

**நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!...**

இன்று இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது வெறுமனே இலங்கையின் உள்நாட்டு அரசியலோடு மட்டும் சம்பந்தப்பட்டிருக்கும் விடயமல்ல! இலங்கைத் தீவையும் கடந்து விரிந்து பரந்த சர்வதேச சமூகத்துடனும் இந்த விடயம் பின்னிப்பிணைந்திருக்கின்ற ஒரு பாரிய பிரச்சினை !

சர்வதேச நாடுகளின் சாதகமான சமிக்ஞை இன்றி, அவர்களின் ஆதரவின்றி எரிகின்ற இனப் பிரச்சினைக்கு நாம் தீர்வு கண்டுவிடுவது வெறும் கனவு மட்டும்தான்!

மக்களாகிய உங்களது ஏகப் பிரதிநிதிகள் தாமேதான் என்று புலிகள் கூறி வருகின்றார்கள்!

மக்களின் விருப்பங்களுக்கு மாறாகத் தான்தோன்றித்தனமான முறையில் தங்களது தலைமையை எமது தாயக தேசத்தின் மீது புலிகள் பலாத்கார வடிவத்தில் திணித்து வருகின்றார்கள்....

தங்களுடன் பேசித்தான் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று புலிகள் நிபந்தனை விதித்து வருகின்றார்கள்.

உலக நாடுகள் பலவும் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாகத் தடைசெய்திருக்கின்ற இந்நிலையில்.....

சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை ஏற்காமல் புலிகள் தொடர்ந்தும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற இந்நிலையில்....

அதனால் எஞ்சியுள்ள ஏனைய உலக நாடுகளும் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பகிரங்கமாக எதிர்காலத்தில் அறிவிக்கப் போகின்ற பொறிக் கிடங்கைப் புலிகள் எதிர்கொண்டு வருகின்ற இந்நிலையில்....

தமிழ் பேசும் மக்களின் தலைவிதியைத் தீர்மானித்துக்கொள்வது எப்படி என்ற கேள்வி எழுகின்றது.

ஒரு பயங்கரவாத இயக்கத்தினால் ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையை எவ்வாறு பேசித் தீர்க்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

யுத்த முனைப்புகளில் மட்டும் ஆர்வம் காட்டிவரும் புலிகள் இயக்கத் தலைமையினால் சர்வதேச சமூகம் விரும்புவது போல் மக்களாகிய உங்களது பிரச்சினையை எவ்வாறு பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு முன்வர முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

ஈ.பி.டி.பி.யினராகிய நாம், புலிகளின் பிரச்சினை என்பது வேறு! தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை என்பது வேறு! என்று சர்வதேச சமூகத்திடம் மிகவும் உறுதியாக எடுத்துரைத்து வருகின்றோம்!

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று அடிக்கடி எடுத்துக்கூறி வருகின்றோம்!

ஏனென்றால் நியாயமான ஒரு அரசியல் தீர்வை வேண்டி நிற்கும் மக்களாகிய உங்களது பிரச்சினையும், வன்முறை அரசியல் வழிமுறையினால் பயங்கரவாதிகளாக உலக நாடுகளினால் தடைசெய்யப்பட்டிருக்கும் புலித்தலைமையின் பிரச்சினையும் ஒன்றெனக் கருதப்படுமேயானால், மக்களாகிய உங்கள் மீதான சர்வதேச சமூகத்தின் அனுதாபம் அற்றுப்போய் விடும்!

மக்களாகிய உங்களது அரசியல் அபிலாஷைகளைத் தீர்த்து வைக்க முற்படும் சர்வதேச சமூகத்தின் முயற்சிகள் முன்னேற்றமின்றி முடங்கிப்போய் விடும்!

இந்த ஆபத்திலிருந்து எமது தாயக தேசத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய பாரிய பொறுப்பு மக்களாகிய உங்களுக்கு இருப்பதை நீங்கள் உணர வேண்டும்!

மக்களாகிய நீங்கள் இது குறித்த தெளிவான ஒரு தீர்மானத்தை வெளிப்படையாக எடுக்கவேண்டிய வரலாற்றுக் காலகட்டத்தில் இன்று நிற்கின்றீர்கள்!

நீங்கள் விரும்புவது அரத்தமுள்ள ஒரு அரசியல் தீர்வையே அன்றி அழிவுகளைத் தருகின்ற யுத்தத்தை அல்ல என்பதை சர்வதேச உலகுக்கு எடுத்துக்காட்ட நீங்கள் முன்வர வேண்டும்!

மக்களாகிய நீங்கள் பயங்கரவாதத்திற்கும் ஆயுத வன்முறைக் கலாசாரத்திற்கும் எதிரானவர்கள் என்பதை அடையாளப்படுத்த முன்வர வேண்டும்!

மனிதப் படுகொலைகளுக்கும் ஆட்கடத்தலுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் எதிரானவர்கள் என்பதை நிரூபித்துக்காட்ட மக்களாகிய நீங்கள் முன்வர வேண்டும்!

அப்போதுதான் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் அனுதாபத்தையும் நாம் பெற்றுக்கொண்டு எரிகின்ற இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வினைக் காண முடியும்!

புலிகள் சரிந்துபோன தங்களது செல்வாக்கைக் கட்டியெழுப்புவதற்காக.... தங்களது ஆயுத வன்முறைக்கும் அராஜக நடவடிக்கைகளுக்கும் மக்களின் ஆதரவு இருப்பதாக சர்வதேச சமூகத்திற்குக் காட்டிக் கொள்வதற்காகவும்...

பொங்கு தமிழ் என்றும் தமிழ் எழுச்சிப் பிரகடன மாநாடு என்றும் மக்களாகிய உங்களை பலாத்காரமாக வீதிக்கு இழுத்து தங்களது வன்முறை அரசியலுக்கு நியாயம் கற்பிக்க முற்படுகின்றார்கள்!

இது குறித்து நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்! புலித் தலைமையின் மக்கள் விரோத ஆயுத வன்முறையோடு உங்களுக்கு உடன்பாடு இல்லை என்பதை அடையாளப் படுத்துவதற்காக நீங்கள் புலிகளிடம் இருந்து தொடர்ந்தும் விலகியிருப்பவர்களாக உங்களைச் சர்வதேச சமூகத்திற்குக் காட்ட முற்பட வேண்டும்!

ஈ.பி.டி.பி.யினராகிய நாம், எமது தாயக தேசத்தின் விடிவு குறித்து, மக்களாகிய உங்களது அரசியல் அபிலாஷைகள் குறித்து - ஒரு தெளிவான திட்டத்தை முன்வைத்தே செயற்பட்டு வருகின்றோம்!

நாம் கொண்டிருக்கும் திட்டமானது அயலுலக மற்றும் சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தை இன்று பெற்று வருகின்றது.

மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி! என்ற சமஷ்டி அமைப்பு முறையிலான ஒரு அரசியல் ஏற்பாட்டின் அடிப்படையிலேயே நாம் நடைமுறையில் சாத்தியமான எமது திட்டத்தை வகுத்திருக்கின்றோம்! இதில் எந்த விதமான விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமில்லை!

நாம் கொண்டிருக்கும் எமது மக்களாகிய உங்களது அரசியல் அபிலாஷைகள் குறித்த சமஷ்டித் திட்டத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பித்திருக்கின்றோம்!

இதை நடைமுறைப்படுத்த வைப்பது மக்களாகிய நீங்கள் நம்பியிருக்கும் ஈ.பி.டி.பி.யினராகிய எங்களது பொறுப்பு!


ஒற்றையாட்சி முறைக்கு நாம் ஆதரவளிப்பதாக அண்மையில் தமிழ் தேசியக் கூட்மைப்பின் மூத்த தலைவர் ஒருவர் என் மீது குற்றம் சாட்டியிருந்ததாக அறிகின்றேன்!

சட்டம் படித்த அவரிடம் மக்களாகிய உங்கள் சார்பாக நான் பகிரங்கமாகக் கேட்பது இதுதான்!

2004ஆம் ஆண்டுத் தேர்தலில் மக்களின் விருப்புக்களுக்கு மாறாகத் தங்களைத் தாங்களே தெரிவு செய்துகொண்டவர்கள், பாராளுமன்ற நாற்காலிகளில் அமர்வதற்கு முன்பாகத் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும், அவரது சகாக்கள் 21 பேரும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பிற்குக் கீழ்ப்படிந்து சத்தியப்பிரமாணம் எடுக்கவில்லையா என்று கேட்கின்றேன்!

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு - புலிகளது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். 1983ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியத் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட 17 தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றையாட்சியை வலியுறுத்துகின்ற ஆறாவது திருத்தச் சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து தங்கள் பதவிகளைத் துறந்தனர். அவ்வாறு இன்று நடைமுறையில் இவர்களால் செய்து காட்ட முடியுமா?

இலங்கை அரசியல் யாப்பின்படி ஆறாவது திருத்தச் சட்டத்தில் உள்ள சரத்துக்கள் என்ன என்று அவரிடம் நான் கேட்கின்றேன்!



ஆறாவது திருத்தச் சட்டப்படி இலங்கை யின் ஒற்றையாட்சிக்கும் இறைமைக்கும் விசுவாசமாக இருப்போம் என்று சத்தியப் பிரமாணம் செய்து, கையொப்பம் வைத்து விட்டுத்தான் அவர்களும் பாராளுமன்ற நாற்காலிகளில் அமர்ந்து கொண்டவர்கள்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருக்கும் நான், இந்த சத்தியப் பிரமாண விடயத்தில் விதிவிலக்கானவன் அல்ல!

ஆனால் ஒற்றையாட்சி முறையை அடிப்படையாகக்கொண்ட பாராளுமன்றக் கதிரைகளில் அமர்ந்து கொண்டு, அவர்கள் திட்டங்களை முன்வைக்காமல் - தீர்வை முன்வைக்காமல் வெறும் வீராவேச முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருப்பது என்பது சமஷ்டித் தீர்வு நோக்கிய ஒரு அடியெடுப்புக்குக் கூட உதவப் போகின்ற நடவடிக்கை அல்ல என்பதைத்தான் நான் மக்களாகிய உங்கள் சார்பாக அவர்களிடம் பகிரங்கமாகக் கூறி வைக்க விரும்புகிறேன்!

ஒற்றையாட்சிக்குப் புறம்பாக இடைக்கால தன்னாட்சி கோஷத்தை முன்வைத்தவர்கள் பின்னர் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட சுனாமிப் பொதுக் கட்டமைப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

ஈ.பி.டி.பி. யினராகிய நாம், அவ்வாறான வழிமுறையைக் கொண்டிருப்பவர்களல்ல, இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்கு மாறாக ஒரு சமஷ்டிக் கூட்டாட்சி முறையிலான திட்டத்தை நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் தயாரித்து அதை அரச தரப்பிடமும் சர்வதேச சமூகத்திடமும் சமர்ப்பித்திருக்கின்றோம்! இது மக்களாகிய உங்களுக்கும் தெரிந்த விடயமே!

ஒற்றையாட்சி முறைக்கு மாற்றான ஒரு சமஷ்டி அடிப்படையிலான திட்டத்தை தமிழ் கூட்டமைப்பினர் தயாரித்து அதைப் பகிரங்கப்படுத்திவிட்டு வந்து மக்களின் முன்னால் நிற்கட்டும்! அப்போது அதை நாமும் வரவேற்போம்!

எம் இனிய மக்களே!

மக்களாகிய உங்களது அரசியல் அபிலாஷைகள் குறித்து நாம் எத்தகைய திட்டத்தை கொண்டிருக்கின்றோம்?.....

அதை நடைமுறைப்படுத்த நாம் கொண்டிருக்கும் நடைமுறைச் சாத்தியமான அணுகு முறை என்ன?

இந்தக் கேள்விகளுக்கான விடையோடு மீண்டும் அடுத்த வாரம் மறுமடலில் சந்திப்போம்!

*திட்டங்கள் எங்களது!... தீர்மானம் உங்களது!....*
*மத்தியில் கூட்டாட்சி!... மாநிலத்தில் சுயாட்சி!...*
*தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்!*
*என்றும் நாம் மக்களுக்காக!...*

பிரியமுடன்.....

**கே. என். டக்ளஸ் தேவானந்தா, பா.உ,**

செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.
கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி,
கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சர்,
மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சர்.



தோளை - வலியுடைய தாக்கி - உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி - அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும் - கட்டு
மாறாவுடலுறுதி அருளால் வேண்டும்

- சுப்பிரமணிய பாரதியார்



# விவேகமுள்ள விதூஷகன்



ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவரது சபையில் ஒரு விதூஷகன் இருந்தான். ராஜா விதூஷகனிடம் அவ்வப்போது வினாக்களை விடுப்பார். அவரது உள்ளப் பாங்கை அறிந்து அதற்கேற்ற வகையில் விதூஷகன் கெட்டிக்காரத் தனமாக பதில் அளித்து வருவான்.

ஒரு நாள் ராஜா விதூஷகனிடம் கேட்டார். "விதூஷகா! என் கைகளில் எல்லாம் உரோமம் இருக்கிறது. ஆனால் உள்ளங்கையில் இல்லையே! அது ஏன்?"

விதூஷகன் சமத்காரமாகப் பதில் தந்தான்.

"மன்னரே எல்லோருக்கும் செல்வங்களை வாரி வாரி வழங்கி, உங்கள் கைகளில் உரோமம்

பாப்பா முரசு சிறுகதை

முளைக்கவில்லை."

ராஜா மறுபடியும் தொடர்ந்தார்.

"எனது நாட்டு மக்களின் உள்ளங் கைகளிலும் உரோமம் இல்லையே? அதற்குக் காரணம் என்ன?"

விதூஷகன் அதற்கும் பொருத்தமான பதிலைத் தந்தான்.

"மன்னரே! நீங்கள் வாரி வாரி வழங்கும் செல்வத்தை உள்ளங்கைகளால் வாங்கி வாங்கி, நாட்டு மக்களின் கைகளில் உரோமங்கள் வளரவில்லை."


ராஜா விடவில்லை மேலும் ஒரு வினாவினைத் தொடுத்தார்.

"அது சரி விதூஷகரே! எனது எதிரி நாட்டு மன்னர் கைகளிலும் உரோமம் இல்லையே? காரணம் என்ன?"

"மன்னரே! உங்களுக்கு சேர்ந்து இருக்கும் புகழைக் கண்டு மனம் வெதும்பி தங்கள் உள்ளங் கைகளை ஒன்றோடு ஒன்று தேய்த்துக் கொள்வதால் எதிரி நாட்டு மன்னர்களின் கைகளில் உரோமம் உதிர்ந்து விட்டது" என்றார்.

பதிலைக் கேட்ட மன்னர் விதூஷகனின் அறிவை வியயந்து பாராட்டி அவருக்கு பரிசில்களையும் அளித்தனுப்பினார்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12.10.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 616**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 614

**பரிசுக்குரியவர்:**
**பி.சஹறானா லெண்டைன், தரம் - 3,**
**காவத்தை தமிழ் மகா வித்தியாலயம், காவத்தை.**

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | ஆர்.தில்சான், தரம் 1B, 118/3 பரனகேஸ் பெலா வீதி, நுகேகொடை. |
| எல்.பி. கீர்த்தனா, தரம் 3B, கொ/நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம், கொழும்பு - 13 | எஸ்.எல்.எம். சுகைரி, தரம் 9B, ம/அல் - அஸ்ஹர் வித்தியாலயம், ஏறாவூர். |
| கு.ரஜந்தினி, 40, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை. | கமிலஸ் கிருத்திகன், தரம் 1A, விபுலானந்தாக் கல்லூரி, பண்டாரிக்குளம், வவுனியா. |
| வை. ஆஸாத் (றிஹானா), ஜாபிர் ஸ்டோர்ஸ், பாடசாலை வீதி, தில்லையடி, புத்தளம். | க.சுகன்யா, தரம் - 2, 3, மொல்லிகொட வீதி, கம்பளை. |
| ஆர்.திவ்யா, தரம் 6B, ப/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், | ரஞ்சன் நிரஞ்சனா, தரம் 10E, T.V.K. மில் வீதி, செங்கலடி. |

# ஆத்திசூடி

## சொல் சோர்வு படேல்

நீ பிறருடன் பேசும் போது ஐயமும் மயக்கமுமற்ற தெளிவான வார்த்தைகளில் உன் கருத்துக்களைச் சொல்.

-ஔவையார்

*எஸ் நிரஞ்சலா, கண்டி.*

# நூறு வாழை நட்டோம்



ஆழ வெட்டி அகலமாக
நூறு வாழை நட்டோம்
ஆறு கொத்து நூறு
இறைப்பில்
ஆன பழம் தின்றோம்.

வாழை குலை ஈன்ற
பின்பு
வாழ் வழிந்து போகும்
வாழை யடி வாழையாக
வாழைக் குட்டி
தோன்றும்.

வாழ்வு தரும்
வாழையென்று
வாழை வைத்துக்
காத்தோம்
வாழ வைக்கும் வள்ளலென்று
வாழ்த்துகிறார் பாரும்.

# அதிசய உலகம்

## நூற்றாண்டு நடப்புகள்

**1900**

1. உலக மக்கள் தொகை 170 கோடி.

2. இரண்டாவது ஒலிம்பிக் போட்டிகள்.

3. சீனாவில் பாக்ஸர் கலவரம், சீனாவில் இருந்த மன்சூரியா என்ற பகுதியில் குடியேறிய ஐரோப்பியர்களை, மதத்தையும் கலாசாரத்தையும் பரப்ப வந்தவர்கள் இவர்கள் என்ற கோபத்தில், பாக்ஸர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டு பல சீன இளைஞர்கள் அவர்களைத் தாக்கினர். அரசும் மறைமுக ஆதரவு கொடுத்தது. இதனால் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, இத்தாலி, ஜப்பான், ஜேர்மன் சேர்ந்த கூட்டுப்படை மன்சூரியாவுக்குள் நுழைந்து போர் தொடுத்து. வெற்றி பெற்றது. 3000பேர் கொல்லப்பட்டனர். இளைஞர் படைத் தலைவர்களின் தலைகள் மக்கள் முன்னிலையில் துண்டிக்கப்பட்டன.

4. பிரிட்டனில் தரைக்கடியில் புகையிரதம்.

5. உளவியல் அறிஞர் ஃப்ராய்டின் கனவுகளின் விளக்கம் நூல் வெளியீடு. மனோதத்துவ இயல்பற்றி பிற்பட்ட காலத்தில் எழுதிய அத்தனை உண்மைகளுக்கும் அடிப்படையாக இருந்தது மனிதனின் ஆசை அல்லது பயம். இவை தூங்கும் போது கனவுகளாக வெளிப்படுகின்றன.

6. ஒஸ்காவைல்ட் மரணம்.


7. தென் ஆபிரிக்காவில் இருக்கும் ஒரு பகுதி இங்கிலாந்தின் கீழ் இருந்தது. போயர் இன மக்களின் வசம் ஒரு பகுதி இருந்தது. இந்த மக்கள் தமது எல்லையை விரிவுபடுத்த முயன்றபோது பிரிட்டிஷ் படைக்கும் போயர் படைக்கும் இடையில் போர் நடைபெற்றது. 7,000 பேர் போரிலும் 7,000 பேர் நோய்களாலும் மரணித்தனர். இறுதியில் இங்கிலாந்திற்குச் சாதகமாகப் போர் முடிந்தது.

# உங்கள் பொது அறிவு எப்படி?

| | |
|---|---|
| 1. கழுதைப் பால் எந்நோய்க்கு உகந்தது? | கசம். |
| 2. அழகிய கூடு கட்டும் பறவை எது? | தூக்கணாங் குருவி. |
| 3. யாழ்ப் பறவை எங்கு காணப்படுகின்றது? | அவுஸ்திரேலியாவில். |
| 4. லாமா எத்தேசத்து விலங்கு? | தென் அமெரிக்கா. |
| 5. வரிக்குதிரை அதிகம் வாழும் கண்டம் எது? | ஆபிரிக்கா. |
| 6. இந்தியாவிற்கு யானைபோல் அமெரிக்காவிற்கு? | கழுகு. |
| 7. அவுஸ்திரேலியாவிற்கு கங்காரு போல் ஜேர்மனிக்கு? | கரடி. |
| 8. நண்டிற்கு பற்கள் எங்கே உள்ளன? | அதன் வயிற்றில். |
| 9. மலைப்பாம்பு குட்டி ஈனுமா? | ஈனாது, முட்டையிடும். |
| 10. பச்சோந்தியில் நிறம் மாறும் தன்மையுடையது எது? | ஆண் பச்சோந்தி. |




## குட்டையும் நெட்டையும்




உலகிலேயே மிக உயர்ந்த மனிதரான 7 அடி 8.5 அங்குல உயரமுடைய சீனாவின் க்சீ புத் உம், குட்டையான மனிதரான 4 அடி 1.7 அங்குல உயரம் கொண்ட இந்தியர் கிரான்வுவும் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்ட அபூர்வ சந்தர்ப்பம் ஒன்றே இது. இவர்கள் இவ்வாறு சந்தித்துக்கொண்டது லண்டனில் கின்னஸ் சாதனைக்காக நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றின் போதே.

## மகுடமிழந்த அழகி



இம்முறை தாய்லாந்து அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட அஞ்சலா மெக்கோ தனது சுயவிருப்பின் பெயரில் அழகிப் பட்டத்தை மீளளிக்க நடவடிக்கை எடுத்தார்.

அவுஸ்திரேலிய தந்தைக்கும் தாய்லாந்து அன்னைக்கும் பிறந்த அஞ்சலா தனது விடுமுறையைக் கழிப்பதற்காக தாய்லாந்து வந்துள்ளார். அப்போது அங்குள்ள அவரது உறவினர்கள் அழகிப் போட்டியில் கலந்து கொள்ளும்படி தூண்டியுள்ளனர். எப்படியோ அந்நாட்டு கலாசாரத்தையும் மொழியையும் கற்றுக்கொள்ளும் நோக்கில் போட்டியில் கலந்து கொண்டு மகுடத்தையும் வென்றார். மகுடம் வென்றவர் அடுத்த ஒருவருடம் அந்நாட்டில் தங்க வேண்டுமென்பது தாய்லாந்துச் சட்டம். சட்டத்தைக் காப்பாற்ற முடியாத காரணத்தால் பட்டத்தைத் துறப்பதாக இவர் நிருபர்களிடம் தெரிவித்தார். இவர் அமெரிக்காவில் மொடல் அழகியாக இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் துறந்தது பட்டத்தை மாத்திரமின்றி தனக்குக் கிடைத்த பரிசுத் தொகையான தாய்லாந்து நாணயமான பாஹ்ராத் ஒரு மில்லியனையும், 8 இலட்சம் பாஹ்ராத் பெறுமதியான வைர மகுடத்தையும், மோட்டார் வாகனமொன்றையும் ஏற்பாட்டாளருக்கு மீளத் கையளித்துள்ளார். வலிய வந்த சீதேவியை எட்டி உதைத்துள்ளார் ஒரு வனப்பான வஞ்சி.

ருமேனியப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் மழைக் காலத்தில் குடையுடனேயே பாராளுமன்றத்துக்கு சமுகமளிக்கின்றார்கள். அண்மையில் பாராளுமன்றத்தை புதுப்பித்ததால் கூரையிலிருந்து நீர் ஒழுகுவதே இதற்குக் காரணமாம். பாராளுமன்றப் பொதுக்கூட்டங்களின் போது குடை பிடித்த மந்திரிமார் மழையில் இருந்து தப்புவதற்கு கதிரைகளை அங்கும் இங்கும் நகர்த்துவது, மேசைகளைத் துடைப்பது போன்ற சம்பவங்களும் நடந்தேறுவதால் பாரிய இடைஞ்சல் ஏற்படுவதாகத் தெரிவிக்கிறார்கள்.



## குடையுடன் கூட்டம்



## சந்தோஷம் தரும் சண்டை

சீனாவின் ரொங்ஸீயி நகரில் தொழிலாள மக்களிடையே, காட்டுக் குதிரைகள் பங்கு கொள்ளும் போர் பிரபலமானது. வருடாந்தம் அங்கு நடைபெறும் இம் 'மிருகச் சண்டை'யைக் காண சீனாவின் பல பிரதேசங்களிலிருந்தும் மக்கள் வந்து குவிகிறார்கள். குதிரைகள் இரண்டினது உக்கிரச் சண்டை மக்களுக்கு சந்தோஷம் தரும் சண்டையாக இருக்கிறது போலும். வீடு இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது இதுவா?

## உடைக்காமல் உடைந்த சாதனை



அவுஸ்திரேலியப் பிரஜையான பிரைன் ஸ்போர்ட்ஸ், மெல்போர்ன் நகரில் 439 முட்டைகளைச் செங்குத்தாக நிறுத்தி உலகச் சாதனை ஒன்றை உடைத்துள்ளார். இச் சாதனையை முறியடிப்பதற்கு இவருக்கு 12 மணித்தியாலங்கள் தேவைப்பட்டதோடு, இதற்கு முன் இருந்த சாதனையைவிட 18 முட்டைகளை மேலதிகமாக நிறுத்தி, சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதித்துள்ளார். முட்டைகளை உடைக்காமல் சாதனையை உடைத்த இவரது பொறுமைக்கு சபாஷ் போடலாம். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது எவ்வளவு உண்மை.



விக்ராந் - தீபு
இளமை

# கமல் தொடங்கும் நடிப்புக் கல்லூரி!

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பெயரில் ஊட்டி அல்லது கொடைக்கானலில் நடிப்பு, இயக்கம், ஒளிப்பதிவு, எடிட்டிங் உள்ளிட்டவற்றைப் போதிக்கும் திரைப்படக் கல்லூரியைத் தொடங்க கலைஞானி கமல்ஹாசன் திட்டமிட்டுள்ளார்.

நடிப்புலக இமயமாக விளங்கிய சிவாஜி கணேசனின் நினைவாக சென்னை அடையாறு பகுதியில் மணிமண்டபம் கட்ட தென்னிந்திய நடிகர் சங்கம் முடிவு செய்தது. இதற்காக நிலம் ஒதுக்கக் கோரி தமிழக அரசையும் நடிகர் சங்கம் அணுகியது. பல கால இழுபறிக்குப் பின்னர் தமிழக அரசு நிலத்தை ஒருவழியாக ஒதுக்கித் தந்தது.

ஆனால் மணிமண்டபம் கட்டுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுதொடர்பாக சில வதந்திகள் உலா வரத் தொடங்கின. சிவாஜி கணேசன், என்னதான் நடிப்புலகில் யாரும் எட்ட முடியாத சிகரத்தைத் தொட்டவர் என்றாலும் அரசியலில் அவர் அதலபாதாளத்தைப் பார்த்தவர்.

இது நடிகர் சங்கத் தலைவராக இருந்து தற்போது அரசியல் தலைவராக மாறியிருக்கும் விஜயகாந்த் தரப்பினருக்கு ஒரு விதமான நெருடலை ஏற்படுத்தியுள்ளதாம்.

சிவாஜி கணேசன் தொடர்பான பணிகளில் இப்போது ஈடுபட்டால், அவரது 'அரசியல் ராசி', நம்மையும் பற்றிக்கொள்ளலாம் எனப் பயந்த சிலர், இப்போதைக்கு சிவாஜி கணேசன் மணிமண்டபம் தொடர்பான பணிகளில் தீவிரம் காட்ட வேண்டாம் என கேப்டனுக்கு அறிவுரை வழங்கினார்களாம்.

கூட்டிக் கழித்துப் பார்த்த கேப்டன், அதுவும் சரிதான் என்று சற்றே நிதானப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறாராம். ஆனாலும், பல்வேறு முனைகளிலிருந்தும் நெருக்கடி வந்த காரணத்தால் சில மாதங்களுக்கு முன்பு அவசர, அவசரமாக பூமி பூஜை போட்டனர்.


அத்தோடு சரி, மணி மண்டபம் குறித்த எந்தத் தகவலையும் காணோம்.

இந்நிலையில் சிவாஜியின் கலை வாரிசாக அறியப்படும் கமல்ஹாசன் சப்தம் போடாமல் ஒரு காரியத்தைச் செய்து வருகிறார். ஊட்டி அல்லது கொடைக்கானலில் சிவாஜி கணேசன் பெயரில் நடிப்புக் கல்லூரியைத் தொடங்க அவர் திட்டமிட்டுள்ளார்.

இதற்காக இரு இடங்களிலும் தோதான இடத்தைப் பார்த்து வருகிறார். பல கோடிகள் முதலீட்டில் இந்தக் கல்லூரி உருவாகப் போகிறதாம்.

இந்தக் கல்லூரியில், நடிப்பு, இயக்கம், ஒளிப்பதிவு, எடிட்டிங் உள்ளிட்ட திரைத் துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் கற்பிக்கப் போகிறார்கள்.

கல்லூரியை தனது சொந்தச் செலவிலேயே நிறுவ கமல் முடிவு செய்துள்ளார். இருப்பினும் பிறருடைய உதவி கிடைத்தால் அதையும் ஏற்க கமல் ரெடி என்கிறார்கள். ஆனால் உதவி கேட்டு யாரிடமும் போய் நிற்க மாட்டாராம்.




# சினி விசிட்

முகப்பில்
விஜய்
படம் சிவகாசி



ஆர்த்தி அ
பம்பரக்



ர்யா - த்ரிஷா
ஆறு

## சம்திங் சம்திங்... த்ரிஷா...

ஒரு வழியாக த்ரிஷாவுக்கு 'அண்ணன்' கிடைத்து விட்டார்.

ஜெயம் ரவி, த்ரிஷா நடிக்கும் புதிய படம் தான் 'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்' (என்ன பேருப்பா இது?). இந்தப் படத்தில் த்ரிஷாவின் அண்ணன் கேரக்டரில் நடிக்க பெரிய நடிகர் ஒருவரைத் தேடி வந்தார்கள்.

முதலில் சுப்ரீம் ஸ்டார் சரத்குமாரை அணுகினார்கள். நானே இன்னும் ஹீரோவாக நடித்துக் கொண்டிருக்கிறேன். அதற்குள் அண்ணனா என்று கடுப்பான அவர், தயாரிப்பாளர் தரப்பை கேவலமாகத் திட்டி விரட்டி விட்டார்.

இதையடுத்து பிரபுவைப் போய்ப் பார்த்தார்கள். நானும் ஒரு ஹீரோதான் என்று பிரபுவும் முறைத்தாராம். (சந்திரமுகியின் வெற்றியால் அதைத் தயாரித்த பிரபுவின் கையில் இப்போது பல பல கோடிகள் புரண்டு கொண்டிருப்பதை நினைவில் கொள்க.)

இதைத் தொடர்ந்து, அந்தக் காலம் டு இந்த காலம் வரை ஆக்ஷன் கிங் அர்ஜுனிடம் ஓடினார்கள். த்ரிஷாவுடன் ஜோடி போட ஏதாவது வாய்ப்பு வராதா என்று நானே எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறேன். இந்த நேரத்தில் அவருக்கு அண்ணனாக நடிக்க கேட்கிறீர்களா என்று அர்ஜுனும் சீறினாராம்.

இதனால், சரி இங்கே வேண்டாம், மலையாள நடிகர்களை அணுகுவோம் என்று கேரளாவுக்குப் போய் மம்முகாவை (அதாங்க, மம்முட்டி) பார்த்துள்ளார்கள்.

நான் நடித்தால் ஹீரோவாக மட்டுமே நடிப்பேன். மற்ற கேரக்டருக்கு இங்கே வராதீங்க என்று அடிக்குரலில் மலையாளத்தில் பேசி விரட்டி விட்டுவிட்டாராம் மம்முட்டி.

அங்கே இங்கே முட்டி எங்கேயும் சரிப்பட்டு வராததால் என்ன செய்யலாம் என்று ஹோட்டலில் ரூம் போட்டு ரொம்ப நேரம் டிஸ்கஸ் செய்துகொண்டிருந்த படக் குழுவினரைத் தேடி வந்து மாட்டிக் கொண்டாராம் பார்த்திபன்.

படத்தின் கதை குறித்து அகஸ்மாத்தாகக் கேள்விப்பட்டுள்ளார் பார்த்திபன். பட வாய்ப்புக்களே இல்லாமல், ஷூட்டிங் ஏதும் போகாமல் சும்மா இருப்பதற்குப் பதில் இந்தக் கேரக்டரில் நடிக்கலாமே என்ற யோசனையில், நானே நடிக்கிறேன் என்று படத்தின் இயக்குநருக்கு போன் போட்டுள்ளார் பார்த்திபன்.

ஆஹா, அண்ணனே நம்மைத் தேடி வருகிறாரே என்று மகிழ்ந்து போன இயக்குநர், த்ரிஷாவின் சம்மதத்தைப் பெற ஓடினார்.

ஆனால், பார்த்திபன் என்றவுடன் முதலில் யோசித்துள்ளார் த்ரிஷா. ஆனால், அண்ணனைத் தேடி பல வீடுகளில் ஏறி இறங்கி வாங்கிய திட்டுக்களை த்ரிஷாவிடம் எடுத்துச் சொன்ன தயாரிப்புத் தரப்பார் பார்த்தியை ஏற்கச்சொல்லி கேட்டுக் கொண்டார்களாம்.

சரி, அண்ணன் கேரக்டர்தானே என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்ட த்ரிஷா, ஓ.கே. சொல்லி விட்டார்.

அதனால் த்ரிஷாவின் அண்ணனாக நடித்து வருகிறார் பார்த்திபன்.

'செல்லமே' படத்திற்குப் பிறகு செல்லமாய் ரீமாசென் பெரிதும் எதிர்பார்க்கும் படம் 143-தில் இருந்தா சொல் படமாகும். ஓம் நமோ நாராயணா பிலிம்ஸ் என்.எஸ்.மூர்த்தி தயாரித்துள்ள இப்படத்தை அஜய்குமார் இயக்கியுள்ளார். 143-ன்னா ஐ லைக் யூ (ஐ-1, லைக்-4, யு-3) என்று அர்த்தமாம். படத்தைப் பார்க்கும் இரசிகர்கள் ரீமாவிடம் 143 சொன்னா சரி.

## நம்பர் ஒன் போட்டியில் நான் இல்லை : அசின்

அசின் இப்பல்லாம் ரொம்ப முதிர்ச்சியோடு பேச ஆரம்பித்துள்ளார். கவர்ச்சி காட்டுவது, முத்தக் காட்சி, குடும்பப் பாங்கான கேரக்டர் போன்ற கேள்விகளுக்கெல்லாம் அசின் இப்போது ரொம்ப திறமையாகப் பதில் அளிக்கக் கற்றுக் கொண்டு விட்டார்.

மஜா ஷூட்டிங் ஸ்பாட்டில் சிக்கிய அசினிடம் சில கேள்விகளைத் தூக்கிப் போட்டோம். எல்லாவற்றுக்கும் டக்கு டக்கென பதில் தந்தார் 'சிக்' அசின்.

*இன்னக்கி லெவல்ல நீங்கதான் அனைத்து முன்னணி ஹீரோக்களோடும் நடிக்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது?*

ரொம்பப் பெருமையாக இருக்கு. விக்ரம், விஜய், அஜித், சூர்யா என அத்தனை டாப் ஸ்டாருடனும் ஒரே நேரத்தில் ஷூட்டிங் போய்க்கொண்டிருக்கிறேன். ஒரே த்ரில்லாகவும், ஜாலியாகவும் இருக்கிறது. நன்கு என்ஜாய் செய்கிறேன். நிறை கத்துக்க முடிகிறது.

*சரி, இப்போ தமிழ் சினிமாவில் நீங்கள் தான் நம்பர் ஒன் நடிகையாமே?*

அதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. எனக்கு முதலில் போட்டி போடவே தெரியாது. நான் ஒரு நல்ல நடிகை என்ற பெயரை மட்டுமே வாங்க விரும்புகிறேன். நம்பர் ஒன், டு இதிலெல்லாம் எனக்கு உடன்பாடு இல்லை. அதேபோல, நிறையப் படங்களில் நடிப்பதால் மட்டும் நாம் நம்பர் ஒன் ஆகி விட முடியாது.

*கஜினியில் உங்களை விட நயன்தாராவுக்கு கிளாமர் கூடுதலாமே?*

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நானும் நடித்திருக்கிறேன். அவரும் நடித்திருக்கிறார். அவர் கூடுதல் கிளாமர் காட்டி நடித்திருக்கலாம். என்னைப் பொறுத்தவரை எனக்கு கொடுத்த வேலையை ரொம்ப நன்றாகவே செய்திருக்கிறேன். அதேபோலத்தான் நயன்தாராவும். (நல்ல சமாளிப்பு)

என்னைப் பொறுத்தவரை கிளாமர் காட்டி நடிப்பதில் ஒரு தவறும் இல்லை. எனக்கு கிளாமர் வேடங்களில் நடிக்கவும் பிடிக்கும், குடும்பப் பாங்கான வேடங்களில் நடிக்கவும் தெரியும். அளவை மீறி கிளாமர் காட்டினால் ஆபாசம் தலை காட்டும்.

அதேபோலதான் முத்தக் காட்சிகளும், அருவருப்பு இல்லாமல், அடுத்தவரை தவறு செய்யத் தூண்டாத அளவுக்கு முத்தம் கொடுப்பதாக இருந்தால் (அது எப்படி) அப்படிப்பட்ட காட்சியில் நடிக்க நானும் தயார்தான். அதேசமயம், உதட்டோடு உதடு வைத்து கிஸ் கொடுப்பது, கவ்வி இழுப்பது என்றெல்லாம் வந்தால் நோ சான்ஸ்!


நடிப்பதை விட பின்னாளில் அந்தப் படங்களை நமது குழந்தைகளுடன் உட்கார்ந்து பார்க்கும்போது பெருமையாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட படங்களில் நடிக்கத்தான் நான் விரும்புகிறேன் என்று கூறி நிறுத்தினார் அசின்.



பிரசன்னா - கார்த்திக் - லைலா
கண்ட நாள் முதல்



மாதவன் - பூஜா
தம்பி



ஜெயம் ரவி
மழை

# ஷகீலாவுக்கு கல்யாணம்?

'ஹாட் ஸ்டார்' ஷகீலா இரசிகர்களே, சற்றே உங்களது மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்! உங்கள் அபிமான ஷகீலாவுக்கு விரைவிலேயே கல்யாணம் நடைபெறப் போகிறது. மாப்பிள்ளை ரெடி, டும் டும் மட்டும்தான் பாக்கி!

ஒல்லிக் குச்சி உடம்புக்காரியாக இருந்தபோது தமிழ் சினிமாவில் பாட்டுகளுக்கு மட்டும் வந்து ஆடிப் போகும் கவர்ச்சி நடிகைகளில் ஒருவராகத்தான் இருந்தார் ஷகீலா. அவரது ஆட்டம் தமிழ் இரசிகர்களால் அவ்வளவாக இரசிக்கப்படவில்லை, கவனிக்கப்படவில்லை.

ஆனால் மலையாளத் திரையுலகினர் ஷகீலாவை சரியாகப் புரிந்துகொண்டு அவரை அங்கு இழுத்துக் கொண்டனர். மிட்நைட் மசாலா படங்களில் ஷகீலா தனது திறமையைக் காட்டத் தொடங்கினார். அவரது கிளாமருக்கு அங்கு படு கிராக்கி ஏற்படத் தொடங்கியது. பூச்சி மாதிரி இருந்த ஷகீலா பூசணிக்காய் மாதிரி உப்பி, கவர்ச்சித் திலகமாக மாறி ஏகப்பட்ட 'ஏ' படங்களில் நடித்து கலக்கத் தொடங்கினார்.

'பிரமாண்ட' ஷகீலாவின் கவர்ச்சிப் புயலில் சிக்கி இரசிகர்கள் திக்குமுக்காடிப் போய், அவரது படங்கள் திரையிடப்பட்ட தியேட்டர்கள் முன்பு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கிடந்தது ஒரு காலம். இப்போதும் ஷகீலா படம் என்றால் இளசுகள் முதல் பெருசுகள் வரை கிளுகிளுக்கத்தான் செய்கிறது.

மலையாள சூப்பர் ஸ்டார் படங்களையே ஓரம் கட்டத் தொடங்கியது ஷகீலாவின் சாப்ட் போர்னோ 'ரக' படங்கள். மற்றப் படங்களைப் போடுவதை விட ஷகீலா நடித்த படங்களைப் போட்டு 'சல்லிசாக' காசு பார்க்கத் தொடங்கினர் கேரள தியேட்டர்காரர்கள்.

ஷகீலாவின் வியாபித்த ஆக்கிரமிப்பைப் பார்த்து அரண்டு போன மலையாள திரையுலகினர் ஷகீலாவின் படங்களுக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்குவதில் கடும் கட்டுப்பாடுகளை விதிக்க தணிக்கைக் குழுவினரைக் கேட்டுக் கொண்டனர். அரசுக்கும் கோரிக்கை விடுத்தனர்.



எஸ்.ஜே. சூர்யா - நிலா
அ.... ஆ....

இதனால் ஷகீலா பலமுனைத் தாக்குதலுக்கு ஆளானார். தொடர்ந்து மலையாளப் படங்களில் நடிப்பதை விட்டுவிட்டார். தனது வளர்ச்சியைப் பொறுக்க முடியாத சில நடிகர்கள் என்னை விரட்டுவதில் குறியாக உள்ளனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார். பின்னர் சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பிய அவர், தமிழ்ப் படங்களில் காமெடியுடன் கூடிய கிளாமர் வேடங்களில் நடிக்க ஆரம்பித்தார். ஆனால் 'யானைப் பசிக்கு சோளப் பொறி' போல, 'பிசி'யாக இருந்து பழக்கப்பட்ட அவருக்கு தமிழ் திரையுலகம் தந்த வாய்ப்புகள் திருப்தியைத் தரவில்லை. இருந்தாலும் தொடர்ந்து குட்டி குட்டி ரோல்களில் நடித்து வந்தார்.

இந்நிலையில் ஷகீலா தன்னுடன் மலையாள படங்களில் நடித்த ஸ்டண்ட் நடிகர் ஒருவரைக் காதலிப்பதாகவும், ஒரே வீட்டில் குடும்பம் நடத்துவதாகவும்

இருவரும் சேர்ந்து 'குறும்படங்கள்' தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் கூட செய்திகள் வந்தன. என்ன மாதிரியான குறும்படங்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்த செய்தி கொஞ்ச காலம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இப்போது இன்னொரு செய்தி ஷகீலா பற்றி உலவத் தொடங்கியுள்ளது. காதலித்து வரும் ஸ்டண்ட் நடிகரையே ஷகீலா திருமணம் செய்துகொள்ளப் போகிறார் என்றும், விரைவில் அவர்களது திருமணம் முறைப்படி நடக்கவுள்ளதாகவும் இந்த லேட்டஸ்ட் செய்தி கூறுகிறது.

இந்தக் கல்யாணத்துக்கு காதலரின் வீட்டில் கடும் எதிர்ப்பு இருப்பதாகவும், ஆனால் அதை காதலர்கள் இருவரும் பொருட்படுத்தவில்லை என்றும் கூறப்படுகிறது. விரைவில் தனது கல்யாண அறிவிப்பை ஷகீலா வெளியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தனை காலம் உழைத்தது போதும், இனிமேலாவது நிம்மதியாக குடும்ப வாழ்க்கையை நடத்தலாம் என்ற முடிவுக்கு ஷகீலா வந்து விட்டார் என்பதையே இது உணர்த்துவதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கிறார்கள்.

எப்படி இருந்தாலும் வாழ்க! என்று வாழ்த்துவோம்!



அகர்வால்
ண்ணாலே



ஸ்ரேயா

## ஊரைச் சுற்றுகிறது ஒரு ஜோடி!

இந்தியாவில் ஐந்து நபர்கள்தான் அந்தக் காரை வைத்திருக்கிறார்கள். அதில் ஒருவர்... 'திருடிய இதயத்தை' படத்தின் ஹீரோ ரோஹன்!இவர் நடிகை ஷெரீனின் முன்னாள் காதலரும் கூட! அப்படியானால் இந்நாளில் ரோஹன் யாரைக் காதலிக்கிறார்?

படத்தில் தனக்கு ஜோடியாக நடிக்கும் சுபாபுன்ஜாவைத்தான்.

சினிமா தியேட்டர், பார் வசதிகளுடன் கூடிய அந்தக் காஸ்ட்லி காரில்தான் இந்த ஜோடி ஊரைச் சுற்றுகிறது.

இது காதலா? தற்காலிகக் காதலா? என்றெல்லாம் நமக்குத் தெரியாது சாமி!

ஆனா ஊர் சுற்றும் இவர்கள் இருவரும் ஒரே ஊர்க்காரர்கள்...பெங்களூர். அதனால் ஒட்டுதல் அதிகமாக இருக்கிறது.

## கேட்டார் சேரன், மறுத்தார் கோபிகா

2 முறை கால்ஷீட் கேட்டும் கோபிகா மறுத்து விட்டதால் இயக்குநர் சேரன் வருத்தமாக இருக்கிறாராம். அதைவிட வருத்தத்தில் கோபிகா இருக்கிறார்.

கேரளத்து கோபிகா வர்மாவை (தமிழில் கோபிகா) தனது ஆட்டோகிராப் படம் மூலம் அறிமுகப்படுத்தி தமிழ் சினிமாவில் வாழ்க்கை கொடுத்தவர் சேரன்.

ஆட்டோகிராப் மூலம் புகழின் உச்சிக்குப் போன அவர் அதிலிருந்து இன்னும் இறங்கவில்லை. நடிப்போடு கிளாமரையும் இப்போது அளவாக கலந்து தமிழிலும் தெலுங்கிலும் கலக்கி வருகிறார்.

ஆனால், ஆட்டோகிராப் படத்திற்குப் பிறகு இரண்டு புதிய படங்களில் நடிக்க கோபிகாவின் கால்ஷீட்டை சேரன் கேட்டபோது, கோபிகா படு பிசியாக பல படங்களில் புக் ஆகியிருந்தார். இதனால் சேரன் கேட்ட திகதிகளை அவரால் கொடுக்க முடியவில்லை.

கோபிகா கிடைக்காததால் சோகமாகி வருத்தமாகி விட்டாராம் சேரன். இது கோபிகாவுக்கும் பெரும் வருத்தத்தையும், சங்கடத்தையும் கொடுத்துள்ளதாம். இதுபற்றி நம்மிடம் கோபிகா கிசுகிசுத்ததாவது :

"சே, இரண்டு முறை சேரன் சார் கால்ஷீட் கேட்டும் என்னால் தர முடியாமல் போய்விட்டது. இரண்டு படங்களும் அருமையான கதை, எனக்கு ரொம்ப சூட் ஆகும். அதில் நடிக்க முடியாமல் போனது இன்னும் வருத்தமாக உள்ளது.

நான் கால்ஷீட் கொடுக்காததால் சேரன் சார் ரொம்ப வருத்தமாகி விட்டார். அதைப் பார்த்து எனக்கும் ரொம்ப வருத்தம். ஆனாலும் என்னால் கமிட் செய்த படங்களை விட்டு வர முடியாத நிலை. இதை சேரன் சார் புரிந்து கொண்டு, பரவாயில்லை, அடுத்த படத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று ஆறுதல் கூறினார்" என்று மூக்கை சிந்தினார்.

## பிரிகிறது ஒரு ஜோடி!

'ஏப்ரல் மாதத்தில்' படத்தில் நடிக்கத் தொடங்கிய பிறகு ஸ்ரீகாந்திற்கும், சிநேகாவிற்கும் காதல் பற்றிக்கொள்ளத் தொடங்கியது.

சிநேகா தி.நகரில் வீடு வாங்கியதும், ஸ்ரீகாந்தும் தி.நகரில் வீடு வாங்கினார். சிநேகா சாலிகிராமம் பகுதியில் ஆபீஸ் போட்டதும், ஸ்ரீகாந்தும் தன் ஜாகையை சாலி கிராமம் பகுதிக்கு மாற்றினார்.

அப்படி இருந்த காதலில் இப்போது விரிசல்! சிநேகாவின் போக்கு பிடிக்காமல் ஸ்ரீகாந்த் விலகி விலகிப் போகிறார்!

திடீரெனக் கழற்றிவிட்டால் ஏதாவது விபரீதமாகிவிடும் என்பதால் மெல்ல மெல்ல கழற்றி விட்டுக் கொண்டிருக்கிறார் ஸ்ரீகாந்த்.



## காதலும்... காமெடியும்.. கலந்த பிரமாண்டமான படம் 'பம்பரக்கண்ணாலே'

அண்ணாமலை பிலிம்ஸ் (பி) லிட்., பட நிறுவனம் சார்பில் செந்தில் - கணேஷ் இருவரும் இணைந்து, தங்களின் முதல் தயாரிப்பாக, மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் பம்பரக்கண்ணாலே. ஸ்ரீகாந்த் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தின் கதை, திரைக்கதை எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார் பார்த்திபாஸ்கர். இவர் இளையராஜாவின் அண்ணன் 'பாவலர் க்ரியேஷன்ஸ்' பாஸ்கர் அவர்களின் மகன்.

'பம்பரக்கண்ணாலே' படத்தில் ஸ்ரீகாந்துக்கு ஜோடியாக ஆர்த்தி அகர்வால் நடிக்கிறார். தெலுங்கில் நம்பர் ஒன் நாயகியான இவர், இப்படத்தின் மூலம் தமிழுக்கு வருகிறார். மற்றொரு நாயகியாக நடிப்பவர் நமீதா.

இதுவரை காதல் மற்றும் ஆக்ஷன் கதைகளில் மட்டுமே நடித்த ஸ்ரீகாந்த், பம்பரக்கண்ணாலே படத்தில் முதன் முறையாக முழு நீள நகைச்சுவை வேடத்தில் நடிக்கிறார். அதே சமயம், காதல், ஆக்ஷன் நடிப்பிலும் தன் முத்திரையை அழுத்தமாகப் பதித்திருக்கிறார். பம்பரக்கண்ணாலே படம் ஸ்ரீகாந்தின் திரையுலக வாழ்க்கையில் குறிப்பிடத்தக்கப் படமாக இருக்கும் வகையில் அவரது கதாபாத்திரம் மிகச்சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது. கதாபாத்திரத்தின் தன்மையை உணர்ந்து ஒவ்வொரு காட்சியிலும் அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார் ஸ்ரீகாந்த்.



விஜய்- அசின்
சிவகாசி



# தேன் கிண்ணம்

## எண்ணங்கள் இலவசம்

கம்பவுண்டர் வைத்தியனாவான்.
எடுபிடி என்ஜினியராவான்.

உதவியாள் உயரதிகாரியாவான்.
ஊதாரி பணக்காரனாவான்.

பணக்காரன் ஏதிரியாவான்.
பரம ஏழையும் தெய்வம் போலாவான்.

காதலன் உயர்ந்த மனிதனாவான்.
காதல்
அத்தியாவசியமானதாக்கப்படும்.

தபால்காரன், பால்காரன்,
கூலிக்காரன், வேலைக்காரன்,
வேட்டைக்காரன், ரிக்ஷாக்காரன்,
ரோஷக்காரன், காவல்காரன்,
எல்லோரும் தங்க
மனசுக்காரனாவர்.

ஜாதி பேதங்கள் அழிக்கப்படும்.
சமதர்மம் உச்சமாகும்.

டாக்டர், என்ஜினியர்,
கம்பியூட்டர் மேதாவி,
உயர் உத்தியோகஸ்தர்
ஒட்டுமொத்தமாய் விரோதியாவர்.

சீதனம் சமூக விரோதச் செயலாகும்.
பதிவுத் திருமணம் வரவேற்கப்படும்.

ஓடிப்போதல்
உத்தியோகப்பூர்வமாக்கப்படும்.
இப்படி இன்னும் இன்னும்
ஏராள எண்ணங்கள்
இலவசமாய்க் கிடைக்கும்,
உனக்கும் கல்யாண வயதில்
நான்கைந்து பெண்ணிருந்தால்.....!

*–மெய்யன் நட்ராஜ், டோஹா கட்டார்.*

## பிரிவுத் துயர்

என்
இருண்ட இருதயக்
குகையினுள்
ஒளியாய்
நீ - வந்த போது
நான் கொண்ட
ஆனந்தம்...
இன்று
எனக்கிருந்த ஒரே
ஒரு
இருதயத்தையே
தொலைத்து விட்டு
நடைப்பிணமானேன்....

உன்னைப்
பிரிந்திட்ட துயர்
பொறுக்க
முடியாமல்
என்
கண் குளத்தில்
நிரம்பிய
கண்ணீர் வெள்ளம்
தினமும்
என் கன்னமேட்டை
நனைக்கின்றது.....

நீ
என்னைப் பிரிந்த
துயரைச் சகிக்க
முடியாத
என் ஆத்மா
இன்னும்
விழித்துக்கிடக்கு...
சில வேளை
உறங்கினாலும்
நட்ட நடு
இராத்திரியில்
திடுக்கிட்டு
முழிக்கின்றேன்.
அப்பொழுதும்
என்
இருதயம்
உன்னையே
தேடுகின்றது....

உன்னைப்
பிரிந்திட்ட என்னுடல்
உணர்விழந்து,
உதிரமுறைந்து
உப்பிய உடலுமாய்த்
தவிக்கின்றேன்
(தவிக்கின்றது)
நீ
என்னருகினில்
வந்துவிட்டால்
என்னுடல்
வாழ்ந்திருக்கும்.
இல்லையெனில்
என்னுயிர்
மூர்ச்சையற்று
வீழ்ந்திருக்கும்.

*–சஜாஹர் முகைடீன்,*
*நிந்தவூர் – 18.*

## மனசுகளைக் கொத்தாதே!

குருட்டு மொழி பேசி
எனை
குஜராத்தாய் ஆக்காதே!

தீப்பிழம்பு கசியும்
உன் பார்வையில்
சாம்பல்களை ஊதி
சவங்களைத் தேடுகிறேன்!

ஹேலியின் வால் வெள்ளியாய்
காலம் கடந்து
ஒரு கருப்புப் புன்னகை
செய்தாய்.

ரத்த வேகம்
புத்தி சொல்கிறது - அவள்
செங்குருதி
சிறு துணிக்கைக்குள்
சேர்ந்து வாழ
வேண்டுமென்று!


வௌவாலாய்
அலைகிறேன்
கலியொலிகள்
காதில் கேட்கவில்லையா?

ஜிம்னாஸ்டிக்கில்
மனசு வளையும்
துளி இடுக்குள்
நினைவு பிறக்கும் - பின்
குறை மாதத்தில்
சாகத் தவிக்கும்!

கொஞ்சும்
மரம் கொத்தியே....!
மரங்களைக் கொத்து
பரவாயில்லை;
மனசுகளைக் கொத்தாதே!

*–புத்தளம், நஸீம் ரூமி.*

## போதுமாகிப்போன காதல்



முன்பு
என் இரத்த
வீதியெல்லாம்
உன் நினைவு
ஊர்தியாக
ஊர்சுற்றும்.

பதில் கேட்டால்
புதிரான உன்னிடமிருந்து
பதில் எட்டாது;
'பதில் நாளை' என்பது
போல
பார்வை ஒன்று கிட்டும்.

உனக்குத் தெரிந்திருக்கும்
நான் அதிகம் பார்த்தது
உன்னையல்ல - உன்
பார்வையை என்று.

பார்க்காமல் மட்டும்
என்பாட்டுக்கு - நீ
என்னை விட்டிருந்தால்....
என் காட்டுக்குள்
இந்தக் காதல் மிருகம்
பசியோடு அலைய
வாய்ப்பேயில்லை.



உன்
பதிலாகாத பார்வைகள்தான்
உன்னை எனக்கு
மோப்பம் பிடிக்கச் செய்தன
அன்று....



உன்
பதில்கள்
எப்படி இருக்குமென்று
எப்படி எப்படியெல்லாமோ
எண்ணிப்பார்த்தேன்.

உனது 'நாளை'கள்,
எனது வாழ்வை...
முதிரும் படியும்
எனது வாலிபத்தை
உதிரும் படியும்
கடமையாற்றின.

நீ தீர்ப்பளிக்கும்.....
'நாளை'கள் இன்னும்
'இன்றா'கவில்லை - நான்
மன்றாடியும் - அவை
இன்றாகவில்லை.

போதும்...உனது
நாளைகளுக்காக - எனது
இன்றுகள் இனி பொறுத்திருக்காது.
அவை எனக்காகட்டும்!!

*–யூ.எம்.முனீர், நிகொள்ள.*

## புன்னகையை பூக்க வை!

சகுனக் கண்களோடு
உன்னை நான்
தரிசிக்க வருகிறேன்.

நீயோ உன் வீட்டுப்
பூனையை குறுக்கே
விட்டுவிட்டு
பூரித்து நிற்கிறாய்.

பதுங்கிப்போன எலியின்
மனசாய் - நான்
எரிச்சலடைகிறேன்.

ஏமாற்றங்களைச் சுமந்த
கணங்களைப்போல - நீ
என் உயிர் வாங்கி
ஜீவனழித்துப் போகிறாய்.

சம்மதங்களற்ற - உன்
பிசகல் வார்த்தைகளால்
என் மனசின்
சலனங்கள் ஏளம்.

உன்னால்
ஓரங்கட்டப்பட்ட
ஈரப்பொழுதுகளாய்
காய்ந்து கிடக்கின்றன
தெருமூளைச் சந்திகளில்
- என்
காத்திருப்புகள்.

என் மனதின் பரப்புகளில்
விரவிக் கிடக்கும் - உன்
நினைவுகளை
கிளறிக்கிளறி
அள்ள வெளிப்படும்
பிசிறுகள்.

கனவுகள் அலைகளாய்
பொங்கி வரும் - அதில்
உன் நினைவுகள்
குமிழ்களாய்ப் பூத்து
உடைப்படையும்.
மர்மங்களைப் பேசுகின்ற
உன் கள்ள விழி
பள்ளங்களில் வீழ்ந்தே
கரைந்துபோனது - என்
கவிதையும் காதலும்.



இன்னொரு சந்திப்பு
சாத்தியமென்றால்
உனக்கும்
எனக்குமாய்
காதல் ஒத்துறவாட
முன்கொண்டு பூக்கவை
உன் முகத்தில்
புன்னகையையும்
என் முகத்தில் புரிப்பையும்

*–பெரியசாமி விக்னேஸ்வரன்,*
*ஹட்டன்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*"ஒரு கவிதை மேன்மையான ஒன்றாக இருக்கும் பட்சத்தில் என்றும் அழிவதில்லை. அது முடிவற்று நிகழ்காலத்தில் தன் இருப்பை நிறுவிக்கொள்கிறது. மற்ற எந்த இலக்கிய வடிவங்களை விடவும் குறைவான அளவிலேயே அது வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது. அவ் வார்த்தைகளும் கூட மொழியுடன் என்றைக்குமான நிலையான அர்த்தத்தால் பிணைக்கப்பட்டிருப்பதில்லை. கவிதையைப் பொறுத்தவரையிலும் சொற்கள் மொழியின் வெறும் பாவனைகள் மட்டுமே. அதற்கு அப்பால்தான் கவிதை தன் வாழ்தலுக்கான நியாயத்தைக் கொண்டிருக்கிறது. எனவே ஒரு நல்ல கவிதையை வாசிப்பது என்பது ஒருவகையில் ஒரு கலாசாரத்தின் உயிர்ப்பான ஒரு பகுதியுடன் உறவுகொள்வதே ஆகும்!" அது கவிஞர் மோகனரங்கன் கவிதை பற்றிக் கூறியிருப்பது.*

*இவ்வாரம், நம் அவலச் சூழலோடு தொடர்புடைய இரு கவிதைகள். எங்கோ யாராலோ, எப்போதோ எழுதப்பட்டிருந்தாலும் என்றென்றைக்குமான மனித அவலத்தைப் பேசுபவை இந்தக் கவிதைகள்.*

## கொல்வது குறித்து

நீங்கள் அஞ்சுவதைப் போல
அவ்வளவு கடினமான, மோசமான காரியமேயில்லை
ஒரு கொலையைச் செய்வது.

பழுதடைந்த பண்டமொன்றை எறிவது போல
தேவையற்ற பொருளொன்றை வீட்டிலிருந்தே
அகற்றுவது போல
உடம்பிலிருந்து உயிரை அகற்றும்
மிகச் சாதாரண செயலையே
கொலை என்கிறார்கள்.

அறம் சார்ந்த மதிப்பீடுகள் போலியானவை;
வஞ்சகம் நிறைந்தவை; உங்கள் கரங்களைப்
பிணிப்பவை.

முதலில் அகற்றப்பட வேண்டியவை
அவைதான்.
தூக்கியெறியுங்களவற்றை.
கிழிந்த உள்ளாடையொன்றைப் போல.

உங்கள் பாட்டன், முப்பாட்டன்
கரங்களிலிருந்தவை
இந்தக் கத்திகள்.
கீழே போடுங்களவற்றை.
ஒரு ஏகே - 47 இன் விசை வில்
காத்திருக்கலாம்
உங்கள் சுட்டுவிரலின் தீண்டலிற்காக.
உங்கள் செயலை எளிதாக்கவல்லன
கைத்துப்பாக்கிகள்.
இன்னும்,
அனேக நாடுகளால் தயாரிக்கப்படுகின்றன
வகை வகையான
கையெறி குண்டுகள்.

திடீரெனத் தோன்றி
கொல்லப்பட வேண்டியவன் நெற்றியில்
பதியுங்கள் கைத்துப்பாக்கியை.
வெலவெலத்துப் போனவன் முகத்தில்
காறி உமிழட்டும் உங்கள் குரூரம்.
சமயங்களில்
எப்போதோ பார்த்து மறந்த
ஆங்கிலப் பட நாயகனையும்
உங்கள் செயல் நினைவூட்டலாம்.

உங்கள் தனித்துவங்களை நிரூபிக்கலாம்
ஒரு கொலையைச் செய்யும் முறையிலேயே.
உறங்கும்போது, உரையாடும்போது,
விளையாடும் போது.....
தடுக்க முயலும்
அம்மாவை மீறி, சகோதரியை மீறி,
மனைவியை, காதலியை மீறி....
பலர் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்
அருமையான கொலைகளை.
கற்பனையின் அதி பொழுதுகளில் திளைத்து
நீங்கள் செய்ய வேண்டியது
மிகப் பழைய செயலான கொலையை
மிகப் புதிய முறைகளில்.

சுய மைதுனம் செய்பவனையோ
புணர்வின் உச்சத்தில் கிறங்கியிருப்பவனையோ
கொல்வது
கேட்பவரைக் கிளர்ச்சியுற வைக்கலாம்.
முக்கியமான விடயம்,
அனேக கொலைகளின் பின்
இனங்காணப்படுகிறார்கள் கொலையாளிகள்.
உறைவதற்கு முதல் கணத்தில் கூட
உங்களைப் பிரதி எடுக்கக் கூடும்
ஒரு இரத்தத் துளி.
ஆகவே,
சாமர்த்தியசாலிகளான நீங்கள் செய்யவேண்டியது
இனந்தெரியாதோரால் செய்யப்படும் கொலைகளை.


*–யோ.கர்ணன்.*

## அடையாளமற்றது


இரத்தத்தின் அறிகுறியே எங்குமில்லை
எந்த இடத்திலும் இல்லை
எல்லா இடத்திலும் தேடிப் பார்த்துவிட்டேன்
கொலையாளியின் கரங்கள் சுத்தமாக
உள்ளன
அவனது நகங்கள் கூட பளிச்சென்று
இருக்கின்றன.
எந்தவொரு கொலையாளியின் உடையிலும்
இரத்தக் கறை படியவில்லை
எங்கேயும் இதற்கான எந்த அடையாளமும்
இல்லை
சிவப்பு நிறத்தின் சுவடே இல்லை
கத்தியிலும் இல்லை.
வாளின் கூர்முனையிலும் இல்லை
தரையிலும் கறைகள் இல்லை.
விதானமும் வெண்மையாகவே இருக்கிறது.
எங்குமே இரத்தத்தின் சுவடுகள் இல்லை
எந்த இடத்திலும் இல்லை
தன் அடையாளம் எதையுமே விட்டு
வைக்காமல்
மறைந்து போயிருக்கும் இந்த இரத்தம்
இதுவரை எழுதப்பட்ட வரலாற்றின்
பகுதியல்ல;
பேரரசர்களின் சேவைக்காக இது
சிந்தப்பட்டதல்ல,
பலிச் சடங்குகளுக்காகப்
படைக்கப்பட்டதல்ல,
போர்க்களங்களில் சொரியப்பட்டதல்ல.
இதற்கு எந்த வெகுமதியும் கிடைத்ததில்லை
எந்த விருப்பமும் நிறைவேறியதில்லை
எந்தக் கடவுளும் இதை ஆசீர்வதித்ததில்லை
இது தியாகியின் இரத்தமும் அல்ல.
இது வெற்றிப் பதாகைகளில்
பொறிக்கப்பட்டதும் அல்ல
இன்னமும் கேட்கப்பட்டதே இல்லை;
கேட்கப்பட வேண்டுமெனக் கதறுகிறது -
யாருமற்ற இந்த அநாதை இரத்தம்
எவருக்கும் இதைக் கேட்க நேரமில்லை,
விருப்பமும் இல்லை.
அது கதறிக்கொண்டே இருக்கிறது.
ஆனால் இதற்கு சாட்சியுமில்லை,
ஆதாரமும் இல்லை.
வழக்கும் தொடுக்கப்படவில்லை.
முக்கியமற்றவர்களின் இந்த இரத்தம் -
ஆரம்பத்திலிருந்தே புழுதியினால்
வழங்கப்பட்ட
இந்த இரத்தம் புழுதியினாலேயே
வளர்த்தெடுக்கப்பட்டது.
முடிவில் இது புழுதிக்குள்ளேயே
தன்னை மறைத்துக் கொள்கிறது -
கதறிக் கொண்டே.

*–ஃபைஸ் அஹமட் ஃபைஸ்*
*தமிழில் : சாரு நிவேதிதா.*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : எ.வி. ஜீவகன் அமலதாஸ்
வயது : 20
முகவரி : அடப்பங்குளம், 1/4A, நலன்புரி நிலையம், நேரிய குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: பத்திரிகை.



பெயர் : எம். ரபீக் ஸகிரியா
வயது : 32
முகவரி : P.O.Box - 601, Fujairah, U.A.E.
பொழுதுபோக்கு : பத்திரிகை



பெயர் : வ.தவராஜன்
வயது : 23
முகவரி : 04, வீரபடி வீதி, வினாயகபுரம், திருக்கோவில்.
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி.




பெயர் : க.பத்மநாதன்.
வயது : 22
முகவரி : 209, மத்திய வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு : கவிதை, சினிமா, கிரிக்கெட்.




## ஆயிரம் வண்ணங்களில் கூந்தலை அழகுபடுத்தலாம்!

நிறங்களில்தான் எத்தனை எத்தனை வகைகள். ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகை. அப்படிப்பட்ட நிறங்களை இப்பொழுது விதவிதமாக நமது கூந்தலிலும் போட்டுக் கொண்டு அழகாக வலம் வரலாம்.

அப்படிக் கூந்தலில் போட்டுக் கொள்ளும் வகைகளில்



இப்பொழுது கிட்டத்தட்ட 76 வகைகளைக் கொண்டு 1000த்திற்கும் மேற்பட்ட நிறங்கள் உருவாக்கலாம்.

முதன்மை வண்ணங்களான ஊதா, சிவப்பு, மஞ்சளில் இருந்துதான் பலவிதமான நிறங்கள் உருவாகின்றன.

இப்படிப்பட்ட ஒவ்வொரு நிறத்தையும் அவர்களது கூந்தல் தன்மைக்கு மற்றும் நிறத்திற்கு ஏற்றவாறு கம்பியூட்டர் மூலம் தேர்வு செய்து போட வேண்டும்.


இப்படிப் பண்ணக்கூடிய கலர் அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

மேலும் கலர் போடும்போது அது நல்ல தரமானதாக இருக்க வேண்டும். இது நமது கூந்தலுக்கு எந்தவிதத் தீங்கும் விளைவிக்காது.

டை வகைகளில் நல்ல தரமான வகைகளை உபயோகிக்கவில்லை என்றால் அது கூந்தலுக்கும் நல்லது கிடையாது. சருமத்திற்கும் நல்லது கிடையாது. குறிப்பாக தலைக்கு மருதாணியைத் தொடர்ந்து தேய்த்து வருகிறவர்கள் அதனை சரியான முறையில் பதப்படுத்தி தேய்க்க வேண்டும்.

மேலும் மருதாணியைத் தொடர்ந்து கூந்தலுக்குப் போட்டுக் கொண்டால் கூந்தல் வறண்டு விடும். இப்படி வறண்டு விட்ட கூந்தலுக்கு ஆயுர்வேத சிகிச்சை செய்து கொள்ளலாம்.


பல விதமான பேஷன் கலர்கள் மற்றும் வெள்ளை முடியை மறைக்கக்



கூடிய கலர்களின் வகைகள் :-

மாஜுரேல் கலர் வகைகள், மாஜு ருஜ் கலர் வகைகள், மாஜு காண்டிராஸ் வகைகள், மாஜு பிளான்ட் வகைகள், மாஜு லிப்ட் வகைகள், டயா கலர்கள் என்று பல வகைகள் உண்டு.

அதில் கறுப்பு, டார்க் பிரவுன், சாக்லெட் நிறம், பர்கண்டி, காப்பர், கோல்டிஜ், ஜல்போக்கிரே, மாவறகளி சிவப்பு, பிளான்ட், தங்க நிறம் என்று பல உண்டு.




இவை ஒவ்வொன்றையும் தேவையானபடி சப்ளை செய்து அதற்குத் தேவையான நேரம் வரை விட்டு பிறகு ஜுட்டிரையர் எனப்படும் மெஷின் உபயோகப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு நிறத்திற்கும் ஏற்ப அதன் நேரம் 35இல் இருந்து 45 நிமிடம் வரை ஆகும்.

இப்படி அழகழகாகக் கலர் செய்துகொண்டு நீங்களும் ஜொலிக்கலாம்.

## ஆரோக்கியமாய் இருக்க ஆசைப்படுங்க; இயற்கை உணவுகளைச் சாப்பிடுங்க!

உடல் பராமரிப்பைப் பற்றி எந்நேரமும் கவலைப்படும் பெண்கள் ஏராளம். கவலைப்பட்டுப் பலனில்லை தோழிகளே! நீங்கள் சாப்பிடும் உணவு, உங்கள் மன ஓட்டம், உங்கள் சுற்றுச்சூழல் ஆகியவை உங்கள் உடல் பராமரிப்பை நிர்ணயிக்கின்றன. மன அமைதி கெட்டு, தூக்கமும் வராமல் சோம்பிக் கிடத்தல், "வெறும் ரசம் சோறு



போதும்...என்ன வேண்டிக் கிடக்கு சாப்பாடு....'என்ற எண்ணம், உங்களைச் சுற்றிலும் கந்தல் உடைகள், அழுக்குப் பேப்பர்கள், தேவையே இல்லாத பொருட்களைப் பரப்பி வைத்தபடி அமர்ந்து உணவு உண்பது, தூங்குவது ஆகியவை உங்களை புரட்டிப் போட்டு விடும். சீக்கிரமே வயதான தோற்றத்தை ஏற்படுத்திவிடும்.

இயற்கை உணவுக்கு உள்ள சிறப்பு குறித்து டாக்டர் நிக்கோலஸ் பெர்ரிகோன் என்பவர் சொல்வதைக் கேளுங்க :

வெளியில் பூச்சு பூசி நம்மை அழகாகக் காட்டுவதை விட, ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தால் உடல் பொலிவு பெறும். அழகும் கூடும். இதை விட்டு விட்டு மற்ற வழிமுறைகளை நாடுவது நல்லதல்ல. நாம் உண்ணும் உணவு நம் வெளித்தோற்றத்தையும் சீரமைக்கிறது. வயதான தோற்றம் ஏற்படுவது ஏன் தெரியுமா? சர்க்கரையும், ஸ்டார்ச்சும் கலந்த் உணவைச் சாப்பிட்டு, மன அழுத்தத்துடன் வாழும் முறைதான். நல்ல நிறமுடைய பழங்கள், பச்சைக் காய்கறிகள், ஒமேகா 3 அமிலம்



நிறைந்த மீன் வகைகள் சாப்பிடுவது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவும். பச்சைக் காய்கறிகள், எண்ணெய் அதிகம் கலக்காத உணவு வகைகள், ஒரு கப் நிறைய பழங்கள் சாப்பிட்டு வந்தால், நாளடைவில் நீங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.

'சத்தான காய்கறிகள், பழங்கள் சாப்பிடுவது பணக்காரர்களுக்கு மட்டுமே உரித்தான உணவு முறைகள். நமக்கெல்லாம் பழம், காய்கறி வாங்கிக் கட்டுப்படி ஆகாது' என்று யோசிப்பவர்களே...தினமும் ஒரே ஒரு காய்கறி வாங்க முடியாவிட்டால் உங்களால்? மாத பட்ஜெட்டில் இதற்கென சிறு தொகை ஒதுக்க முடியா விட்டால் மற்ற செலவுகளைக் குறையுங்களேன். ஒரே ஒரு மாதம் முயற்சித்துப் பாருங்களேன். வித்தியாசம் தெரியும். பச்சை கரட், ஆப்பிள், பீன்ஸ், வாழைத்தண்டு ஆகியவற்றைச் சாப்பிடுவது மிகச் சிறந்தது.


இப்போதெல்லாம் உடல் பருமனைக் குறைக்க டாக்டர்கள் மேற்கொள்ளும் சிகிச்சை முறையே, கலோரி அளவு அடிப்படையில்தான்.

நீங்கள் எந்த உணவு உட்கொண்டாலும் 'அதிகமாய் சாப்பிட்டுவிட்டேன்...உடல் ஊதிப்போய் விட்டது' என்று குத்துமதிப்பாய் நீங்கள் புகார் கூறினால், நீங்கள் என்ன உணவு சாப்பிட்டீர்கள் என்பதை வைத்து அதில் உள்ள கலோரி அளவைக் கொண்டு தான் டாக்டர்கள் சிகிச்சையை மேற்கொள்கின்றனர்.

எனவே, உணவு சாப்பிடுவதில் இயற்கை முறையை நாடினால், அதிகம் சிக்கல் இல்லாத வாழ்க்கை வாழலாம்.

## துறுதுறுன்னு இருக்கனுமா உங்க குட்டீஸ்? அறிவை வளர்த்துக்குங்க தோழிகளே!


குழந்தை பிறக்கும்போது களிமண் போல பெற்றோருக்குக் கிடைக்கிறது. அதை எப்படி உரு வாக்க வேண்டும் என்பது பெற்றோர் கையில்தான் இருக்கிறது. கருவை வயிற்றில் சுமக்கும்போதே குழந்தை



யின் அறிவு வளர்ச்சி துவங்கி விடு கிறது. குழந்தைகளின் உடல் நல னில் ஆர்வம் காட்டும் பெற்றோர், அவர்களின் அறிவு வளர்ச்சியிலும் அதிக ஆர்வம் காட்டவேண்டும்.

குழந்தை தன்னிச்சையாகச் செயல்படுவதைத்தான் விரும்புகிறது. பெற்றோர் அவ்வாறு இருக்க அனுமதிப்பதில்லை. இதனால் சமுதா யத்துடனான உறவு நிலை களில் குழந்தை பின்தங்கியே உள்ளது. சில குழந்தைகள் பெற்றோரை டி.வி பார்க்கக் கூட விடாமல் தொந் தரவு செய்கின்றன. புதியவர்கள் யாரை யேனும் பார்த்தால் பயந்து பெற்றோ ருடனேயே ஒட்டிக் கொள்கின்றன. இதற்கெல்லாம் காரணம் என்ன? குழந்தை பிறந்தது முதல் தங்களைச் சார்ந்தே வளரும்படி ஆக்கி விடு கின்றனர் பெரும்பாலான பெற்றோர்.

சாலையில் போகும்போது கூட அம்மாவும், அப்பாவும் குழந்தையின் கையை ஆளுக்கொரு பக்கம் பிடித்த படி செல்கின்றனர். இந்தப் பிடியி லிருந்து விடுபட குழந்தை தவியாய் தவிக்கிறது. பஸ்ஸில் அடிபட்டு விடுமே என்று நீங்கள் பதறுகிறீர்கள். குழந்தைகளை அதன் போக்கில் செல்லவிடுங்கள்...அதற்குரிய ஆலோசனைகளை குழந்தைக்குப் புரியும் படியாக விளக்குங்கள்.



ரயில் தண்டவாளம் அருகில் ஏராளமான குடிசைப் பகுதிகள் இருக் கின்றன. அவர்கள் குழந்தைகளைக் கையைப் பிடித்து அழைத்துச் செல்வதில்லை. தாங்களாகவே அவை விளையாடுகின்றன. அந்த குழந்தை களில் யாராவது ரயிலில் அடிபட்டு இறந்ததாக செய்தித்தாளில் படித்திருக்கிறீர்களா?

குழந்தைகள் சுதந்திரமாக, தன்னிச்சையாகச் செயல்பட அனுமதி யுங்கள். அதே நேரம் கண்காணிப் புடன் இருங்கள். இந்தச் சுதந்திரம்தான் குழந்தையின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக விளங்கி, அவர்களின் கற்பனைத் திறனை அதிகரிக்கும். 'டிவி'யை தொடாதே என்று சொன்னால் அதை ஏதாவது செய்து உடைத்து விடுகிறது. எதிர்மறை யாகவே செய்கிறது. காரணம் என்ன? தொடக்கூடாத அளவிற்கு அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம்தான். முதலில் அந்த குழந்தைகளுக்கு 'டி.வி.' பொம்மையை வாங்கிக் கொடுங்கள். விளையாட்டுப் பொருட்களை ஆய்வு செய்து அறிவை வளர்த்துக்கொள்ளும்.

இன்னும் சொல்லப் போனால் திருமணத்திற்கு முன்பே குழந்தை வளர்ச்சி துவங்கி விடுகிறது என்று கூறலாம். எப்படி....? குழந்தையின் பண்புகளை தீர்மானிப்பது ஜீன்கள் தான். சிறந்த அறிவு படைத்த மனைவியை தேர்ந்தெடுத்தால் பிறக்கும் குழந்தையை நல்ல அறிவுடன் வளர்க்க முடியும்.

இதன் மூலம் குழந்தை வளர்ப்பில் அதன் பண்புகளை இன்னும் மேம் படுத்த முடியும். குழந்தையின் சந்தேகங்களுக்குப் பதிலளித்து அதன் அறிவு வளர்ச்சிக்கு துணை புரிய வேண்டும். அப்போதுதான் அதன் ஐ.கியூ வளரும். குழந்தையின் ஐ.கியூ 135 இருந்தால் நல்ல அறிவுத் திறனுடைய குழந்தை. ஐ.கியூ 70 இருந்தால் சராசரி; 70க்கும் குறைவு என்றால் சுமார்தான்.

குழந்தைப் பருவத்தில் எப்படிச் சேமிக்கலாம் என்றும் நன்னடத்தைகள் பற்றியும் சொல்லிக் கொடுக்க வேண் டும். எப்படிச் சொல்கிறோம் என்பது மிக முக்கியமானது. உங்கள் குட்டீஸ் நல்ல செயல்களைச் செய்யும்போது பாராட்டுங்கள்; பரிசளியுங்கள்...அதே நேரத்தில் தவறு செய்தால் தண்டிக்கத் தவறாதீர்கள். அந்தத் தண்டனை உடல் சார்ந்த தண்டனையாக இருக்கக் கூடாது. அதிக பாதுகாப்பும் கூடாது; அதிக சுதந்திரமும் கூடாது.

தோழிகளே...டி.வி. சீரியலில் மூழ்காமல், அறிவு சார்ந்த புத்தகங் களை நிறையப் படியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு உங்கள் படிப்பு உதவும்.

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது –ஷோபா–

### சர்க்கரை வள்ளி குலாப்ஜான்

**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு | - 1/4 கிலோ |
| சர்க்கரை (அஸ்கா) | - 150 கிராம் |
| ஏலக்காய் | - 5 |

**செய்முறை :-**

சர்க்கரைவள்ளிக் கிழங்கை வேக வைத்துக் கொண்டு, (குக்கரில் வேக வைக்க வேண்டாம்) தோலை அகற்றி மாவாகப் பிசைந்து கொண்டு சிறு சிறு உருண்டைகளாக உருட்டவும். இந்த உருண்டைகளை நெய்யிலோ, டால் டாவிலோ பொரித்தெடுத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு பங்கு சர்க்கரையில் (அஸ்கா) இரண்டு பங்கு நீர் ஊற்றிச் சூடேற்றவும். சர்க்கரை கரையும் பதத்தில் இறக்கி, ஏலக்காய் பொடியைத் தூவிய பின், பொரித்தெடுத்த உருண்டைகளைப் போட்டு ஊற வைக்கவும். கால் மணி நேரம் கழித்து எடுத்துச் சாப்பிடவும். குலோப்ஜான் மிக ருசியாகவும், அருமையாகவும் இருக்கும்.

# ஒரு தாய் மகள் 51

ஒருமுறை அவள் இமைகள் அசைகிற மாதிரி தோன்றியது பேஜுக்கு. இல்லை. வெறும் பிரமை சில சமயங்களில் மனம் எதற்காக ஏங்குகிறதோ அது நடைபெறுகிற மாதிரி பிரமை உண்டாகிறது.

கைகளிலும் கால்களிலும் ரத்த ஓட்டம் சீராக இருப்பதற்காக ஒரு டாக்டர் தினசரி வந்து ஆலிஸனுக்கு மஸாஜ் செய்து விடுவது வழக்கம் அவர் வருகைக்காகக் காத்திருந்திருந்த போது, "மிஸஸ் பிராட், உங்களுக்கு போன் வந்திருக்கிறது" என்று ஒரு நர்ஸ் அழைத்தாள்.

யாராக இருக்கும்? பேஜ் ஆச்சரியப்பட்டாள்.

இந்த நேரத்தில் அவள் ஆஸ்பத்திரியில் இருப்பது ஜேனுக்கும் பிராடுக்கும்தான் தெரியும். பிராடுதான் ஒருவேளை ஆலிஸனுக்கு எப்படி இருக்கிறது என்று கேட்பதற்காகக் கூப்பிடுகிறாரோ?

கூப்பிட்டவர், ஆண்டி படிக்கும் பள்ளி நிர்வாகி "உங்கள் பிள்ளைக்கு ஒரு அடி பட்டு..." என்று அவர் சொன்னதுமே காலோடு தலை கலவரம் பற்றிக் கொண்டது பேஜுக்கு.

"என் பிள்ளையா?" என்றாள் ஏதோ தனக்குப் பிள்ளையே கிடையாதே என்பது போல, "என்ன... என்ன சொல்கிறீர்கள்?"

"ஸாரி மிஸஸ் பிராட். ஒன்றுமில்லை. ஒரு சின்ன விபத்து. ஆண்ட்ரு விளையாடிக் கொண்டிருந்தபோது உயரத்திலிருந்து விழுந்து..."

'விழுந்து?' என்று பேஜ் கேட்கவில்லை. கேட்க முடியவில்லை. கழுத்து முறிந்திருக்குமோ? அவனுக்கும் தலையில் காயப்பட்டிருக்குமோ? கடவுளே! இதற்கு மேல் என்னால் தாங்க முடியாது.

"என்ன... என்ன ஆயிற்று?" என்றாள்

"தோள் பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்குமென்று தோன்றுகிறது. உடற்பயிற்சி ஆசிரியர் அவனை அங்கே - நீங்கள் இருக்கும் ஆஸ்பத்திரிக்குத்தான் அழைத்து வருகிறார். ஒன்றும் பெரிதாக இருக்காது. கவலைப்படாதீர்கள்" என்று சொல்லி போனை வைத்து விட்டாள் பள்ளிக்கூட நிர்வாகி.

நர்ஸிடம் சுருக்கமாக விஷயத்தைச் சொல்லிவிட்டு எமர்ஜென்ஸி அறைக்கு ஓடினாள் பேஜ். அங்கே ஆண்டி இன்னும் வந்துசேரவில்லை.

தான் ஒண்டியாக இந்த நிலைமையைச் சமாளிக்க முடியாது என்று பயம் பிடித்துக் கொண்டது அவளை. போனுக்கு ஓடினாள். அவரை.... அவரைத்தான் கூப்பிட வேண்டும்.

அங்கே மணி அடித்தது.

"ஸாரி... உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டியிருக்கிறது ஸ்கூலில் ஒரு விபத்து...."

அவள் கூப்பிட்டது தாரென்ஸனைத்தான்.

முதலில் அவனுக்கு யார் கூப்பிடுகிறார்கள் என்றே புரியவில்லை. புரிந்ததும், "என்ன விஷயம் பேஜ்?" என்றான் கவலையுடன்.

"ஆண்டி..... கீழே விழுந்து விட்டானாம்.... இங்கே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருகிறார்கள்.... எனக்கு ஒன்றும் புரியவில்லை.... எமர்ஜென்ஸி அறையிலிருந்து பேசுகிறேன்...." அழத் தொடங்கிவிட்டாள் அவள். விபரீதமான கற்பனைகளும் அச்சங்களும் மறுபடி முளைத்தன அவள் மனதில்.

"அங்கேயே இரு வருகிறேன்", என்ற தாரென்ஸன், உடனே காரை எடுத்துக் கொண்டு தலை தெறிக்கும் வேகத்தில் ஆஸ்பத்திரியை அடைந்தான். அவன் அங்கே போவதற்கும் ஆசிரியரொருவர் காரிலிருந்து இறங்கி ஆண்டியைத் தூக்கிக் கொண்டு வருவதற்கும் சரியாக இருந்தது. உடற்பயிற்சி வகுப்பு நடந்து கொண்டிருந்தபோது அப்படியே ஓடி வந்தார் போலும். ட்ராக் சூட் உடையில் கழுத்தில் தொங்கும் ஊதலுடன் இருந்தார்.

ஆண்ட்ருவின் முகத்தில் வலியும் பயமும் தென்பட்டன. ஆனால் முழு நினைவோடு இருந்ததால் அபாயமாய் எதுவும் நேரவில்லை என்று புரிந்தது.

"என்னடா பையா, இது நோயாளிகள் வருகிற இடமாயிற்றே? இங்கே எங்கே வந்தாய்? உன்னைப் பார்த்தால் ஜம்மென்று இருக்கிறாயே?" என்று வேடிக்கையாய் பேச்சுக் கொடுத்தவாறு ஆண்டியை உள்ளே அழைத்துக் கொண்டு போனான் தாரென்ஸன்.

ஆண்டியைப் பார்த்ததுமே பேஜுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. ஆலிஸன் விஷயத்தில் அவள் கொண்டிருந்த தைரியமெல்லாம் இப்போது பறந்து விட்டது.

தாரென்ஸன் ஆண்டியை நர்ஸிடம் ஒப்படைத்து அனுப்பிவிட்டு, உடல் பதற நின்றிருந்த பேஜைத் தன் பக்கம் மெல்ல அணைத்துத் தைரியம் சொன்னான்.

எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தபின், வலி தெரியாதிருக்க மருந்து கொடுத்து விட்டு, எலும்பு முறிவை இழுத்து 'டெஸ்ட்' பண்ணி, மாவுக் கட்டுப் போட்டார்கள். "நாளை ஒருநாள் ரெஸ்ட் இருந்தால் போதும். ஆனால் கட்டைப் பிரிக்க ஆறு வார காலமாகும். மோசமான எலும்பு முறிவு. சின்னப் பையனாகையால் சீக்கிரமே சரியாகிவிடும்" என்றார் டாக்டர்.

"வா, உங்கள் இரண்டு பேரையும் நானே வீட்டில் கொண்டு போய் விடுகிறேன்" என்று அழைத்துப் போனான் தாரென்ஸன். பேஜ் இருந்த மனநிலைமையில் அவளை நம்பி மூன்று சக்கர சைக்கிளில் போகக் கூட அனுமதிக்கக் கூடாது என்று அவனுக்குத் தோன்றியது.

வீட்டுக்குப் போகும் வழியிலேயே ஆண்டி தூங்கி விட்டான். அவனைப் படுக்க வைத்த தாரென்ஸன், "நீயும் கொஞ்ச நேரம் தூங்கு. எது உன் படுக்கை அறை?" என்றான்.

அவள் வழிகாட்ட, அவன் பின்னாலேயே வந்து "ஏதாவது ட்ரிங் குடி" என்றான்.

படுக்கையில் உட்கார்ந்த பேஜ் கண்களில் கண்ணீர் மல்க அவனை ஏறிட்டு நோக்கினாள். என்ன வேலை இருந்ததோ என்னவோ, அத்தனையையும் தூக்கி எறிந்து விட்டு ஓடி வந்திருக்கிறாரே....

"எனக்கு ஒரே கலவரமாகி விட்டது. உடனே உங்களைத்தான் கூப்பிடத் தோன்றியது... ஸாரி...." என்றாள். ஏன் கணவனைக் கூப்பிடத் தோன்றாமல் இவனைக் கூப்பிடத் தோன்றியது என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"ஸாரியெல்லாம் சொல்லாதே. நீ கூப்பிட்டது பற்றி எனக்கு வருத்தம் கிடையாது. இப்படி நேர்ந்து விட்டதே என்றுதான் வருத்தம்" என்றான் தாரென்ஸன், படுக்கைக்கு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு.

(தாய் தொடர்வாள்.....)


**சென்ற வாரம்**

**வீட்டிற்கு வந்த பின் ஆண்டி பேஜிடம் ஸ்டிபானி யார் என்று விசாரிக்கிறான். அவனை அடக்குமுகமாக அவனுக்கு பேஜ் பேசுகிறாள். எதிர்பாராமல் பிராட் அன்று இரவு வீட்டிற்கு வருகிறான். வந்து தன் உடைகளை அடுக்கிக் கொண்டு சிக்காக்கோவிற்கு ஏதோ வேலை விடயமாக போவதாக கூறிச் செல்கிறான்**



எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும் 10



**இப்படி** வறுமைகளையும், சிறுமைகளையும் ஒவ்வாரு நிலையிலும் கடந்து கொண்டேயிருப்பதால் புகழ் என்ற ஒன்றைப் பூரணமாய்த் தூய்க்கும் மனநிலையை நான் இழந்துவிட்டேன்.

புகழ் என்பது தனிமனிதனின் உரிமையல்ல. அது செயல்களின் உரிமை என்று புரிந்துகொண்ட போது என் குழப்பம் குறைந்தது.

புகழ் என்பது செயல்களின் எச்சம். உழைப்பின் உடன் விளைவு. அதில் வியந்து கொள்ள என்ன இருக்கிறது?

நடந்தால் கூட வரும் நிழலுக்கு நான் ஏன் ஆச்சரியப்பட வேண்டும்?

உடல் சுக்காக, உள்ளம் சுடராக இடமறிந்து, காலமறிந்து உழைத்துக்கொண்டே இருந்தால் மண்புழுவுக்கும் மகுடாபிஷேகம் நடக்கலாம். எனவே லண்டன் விழாவில் புலன்கள் பூப்பூக்கும் புளகாங்கிதம் எனக்கில்லை.எங்கள் கரட்டுக்காடு லண்டனில் கௌரவம் பெறுகிறதே என்ற பெருமிதம் மட்டுமே நிறைந்து நின்றது நெஞ்சில்.

"உங்களில் யார் மிஸ்டர் வாயரமுது?" கூட்டத்தை ஊடறுத்துக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் இங்கிலாந்து நாட்டின் பள்ளிக் கல்வி அமைச்சர் ஸ்டீபன் டிம்ஸ்.

ஒல்லியான தேகம்; உயரமான மனிதர்: திருத்தமான முகம்; தீர்மான சொற்கள்.

என்னையும் என் எழுத்துக்களையும் செழித்த ஆங்கிலத்தில் கம்பீரமாக அறிமுகம் செய்து விழாவின் திசையைத் தீர்மானித்துக் கொடுத்தார் டாக்டர். ராமசுப்பிரமணியம். அவர் சேது நாட்டுச் சிங்கம் 'கடைசிப் பகல்' என்ற என் கவிதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெள்ளையர்களுக்கு விநியோகித்து அவர்களின் கவனத்தை ஈர்த்தார். அவர் மட்டும் மருத்துவத்துறைக்குச் செல்லாமலிருந்தால்



லண்டனில் காரல்மார்க்ஸ் கல்லறையில் மலரஞ்சலி

அளவான புன்னகையில் அழுத்தமான கைகுலுக்களில் அறிமுகமானோம்.

"இந்தியா வந்ததுண்டோ?" என்றேன்.

பத்து வினாடிகள் யோசித்த பிறகே Sadly No என்றார்.அந்தப் பத்து வினாடிகள் Sadly என்ற நாகரிகமான அடைமொழி தேட ஆன நேரம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

தமிழர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வீரரத்தினம் விழாவிற்குத் தலைமையேற்றார். கொள்கையில் பழுத்த கறுப்புத் தங்கம் அவர். கவிஞர், தன் பேரன், பேத்திகள் வரைக்கும் தனித் தமிழ்ப் பெயர் சூட்டித் தடம் மாறாதிருப்பவர்.

செயல்வீரர் வீரா வரவேற்புரையாற்றினார். தஞ்சை பரவாக் கோட்டையில் பிறந்த காவிரித் தமிழன் வீரா. ஓர் எளிய வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்து தன் மேலாண்மையால் வெற்றி பெற்ற வீரத் திருமகன் வீரா.

அந்த விழாவின் அச்சாணியாக இலக்கியத் துறை இன்னும் சுகப்பட்டிருக்கும்.

பொங்கி வழிந்தது அரங்கம்.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் தமிழர்கள், வெள்ளையர்கள், கறுப்பர்கள் என்ற வித்தியாசமான கலவையில் முன்னெப்போதும் கண்டிராத திருக்கூட்டம் அது.

இங்கிலாந்து நாட்டு கல்வி அமைச்சர் ஸ்டீபன் டிம்ஸ், மேனாட்டுப் பண்பாட்டின்படி அணிவித்த மாலை கழற்றாமல், அப்படியே ஒலி பெருக்கி முன்னால் வந்து எவரும் எதிர்பாராமல் 'வணக்கம்' என்று தமிழில் தொடங்கியதும், மொத்த அரங்கமும் கரை புரண்டு கரவொலி செய்ததில் விழா உற்சாகத்தின் உச்சத்துக்குச் சென்றுவிட்டது.

*(தொடரும்...)*

*நன்றி :– திருமதி வைரமுத்து*

# மீன்கள் தொட்ட உடல்கள்



'மொடலிங்' கண்காட்சிகள் தரையில்தான் நடத்தப்படுவதுண்டு. தண்ணீருக்குள் இப்படியான ஒரு கண்காட்சி நடத்தப்படுமானால், மீன்களும் கூட அதில் கலந்து கொள்ளும். மீன்களை விரட்டிவிட்டு நீருக்குள் அவ்வாறானதொரு கண்காட்சி நடத்த இயலாது.

தென் கொரியாவின் சியோல் நகரில் நீருக்கடியில் நடந்த 'மொடலிங்' கண்காட்சியின் ஒரு கட்டம் இது. விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்காக ஆடைகளைத் தயாரிக்கும் ஒரு நிறுவனம் இதற்கான அனுசரணையை வழங்கி இருந்தது.

மீன்களுக்குப் பெரும் கொண்டாட்டத்தை ஏற்படுத்திய இந்தக் கண்காட்சியில் பல அழகிகள் கலந்து கொண்டனர்.

# அரசியல் படுகொலையும் படுகொலை அரசியலும்

அமிர்தலிங்கம், பத்மநாபா, ராஜீவ் காந்தி, பிரேமதாசா என்று அரசியல் பின்னணி கொண்டவர்கள் முதல் ராஜினி திரணகம, கருணா அணியினர், பத்திரிகை விற்ற பையன் வரை என பல்வேறு பின்னணிகளில் இருந்து வந்தவர்கள் புலிகளால் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டுக் கொல்லப்பட்ட போது ஏற்பட்ட அதிர்வுகளும் 'இன்ப அதிர்ச்சிகளும்' ஆறிய கஞ்சியாகப் பழங்கதையானது போல, தற்போதைய கதிர்காமரின் படுகொலையும் சில வாரங்களிலேயே மறக்கப்பட்டு விட்டது.

வழமைபோல, புலிகளின் 'புலன்' பெயர்ந்த ஆதரவாளர்கள் 'துரோகி ஒழிந்தான், இலட்சியத்துக்கான தடை நீங்கி, தமிழீழம் இதோ மலர்ந்து விட்டது' என்ற 'இன்ப அதிர்ச்சியில்' இருந்து சுதாகரித்துக் கொண்டு 'சொன்ன வாய்க்கு இனிப்புக் கொடுத்து' புல்லரித்து முடிந்து, அடுத்த படுகொலைக்காய் ஆவலாய்க் காத்திருக்கிறார்கள். அது கருணா அல்லது டக்ளஸ், முடியாவிட்டால் சங்கரியையாவது என்ற எதிர்பார்ப்புடன். 'காதில் தேனாய் வந்து பாயும்' இந்த 'இன்ப அதிர்ச்சி'யின் உச்சம் இவர்களின் 'மென்மையான இதயங்களை' அதிர வைத்து, மாரடைப்பு வந்து இவர்களின் உயிருக்கு ஆபத்து வந்து விடுமோ என்று நாங்கள் பயப்பட வேண்டியதாயிருக்கிறது!

முப்பது வருடங்களுக்கு முன்னால் துரையப்பா கொலையுடன் (அல்லது அதற்கு முன்னான ஆரம்ப கால உறுப்பினரான மைக்கேல் கொலையோடு) ஆரம்பித்த அரசியல் படுகொலைகள் இன்று வரை தொடர்கின்றன. ஆனால் இந்த முப்பது வருடப் படுகொலைகள் தமிழ் மக்களின் விடுதலைக்கு எந்த விதத்தில் வழி வகுத்தது என்பதை கேள்விக்குள்ளாக்கும் பகுத்தறிவு இல்லாத படித்த யாழ்ப்பாணம், இந்திய சினிமாவின் நாயகர்கள் வில்லர்களைப் பந்தாடும் போது கைதட்டும் பாமர ரசிகர்கள் போல மெய் சிலிர்க்கிறது. இயலாமையால் மௌனமாக இருக்க வேண்டிய பார்வையாளர்கள் விசில் அடிக்கும் ரசிகர்களாகி, அண்ணனுக்கு ஜே! போடும் போது (அல்லது 'தம்பி'க்கு ஜே!) நாயகர்கள் புகுந்து விளையாடுவதில் என்ன தான் தப்பு?

முப்பது வருட அரசியல் படுகொலைகள் மூலம் தமிழ் மக்களின் போராட்டம் சாதித்தது என்ன? 'ஏகே தூக்கினாயா? களத்துக்கு வந்தாயா?' என்று வெளிநாட்டிலிருந்து வருவோரிடம் பதிவிலக்கம் கொடுத்து 'கிஸ்தி, திரை, வரி, வட்டி' என கறக்கும் கேவலமான நிலைக்குத்தான் எமது போராட்டம் இறங்கி வந்திருக்கிறது.

பிணந்தின்னிக் கழுகுகள் போல கொலைகளைக் கண்டு கூத்தாடுகின்ற கேவலமான நிலைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்ட இனத்தைப் பற்றி, 'அடுத்த கொலை எப்போது நடக்கும்' என இரத்தவெறி கொண்டு நாக்கைத் தொங்கப் போட்டபடி அலையும் நரிகள் போலக் காத்திருக்கும் இனத்தைப் பற்றி நம்பிக்கை கொள்வதற்கு என்னதான் இருக்கிறது?

இந்தப் படுகொலைகளை ஏற்றுக் கொள்ளும் எங்கள் சமூகம் அன்றைக்கு இந்தக் கொலைகளைத் தட்டிக் கேட்டிருந்தால் புலிகள் இந்த நிலைக்கு எங்கள் சமூகத்தைக் கொண்டு சென்றிருக்க மாட்டார்கள்.

யூதர்கள் யூதர்களைக் கொல்வது என்பது யூத சமூகத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. இன்று கூட, அது ஒரு மகா குற்றமாக, சாவான பாவமாகத் தான் அந்த சமூகத்தில் கருதப்படுகிறது. இஸ்ரேலியப் பிரதமர் ராபினை யூத தீவிரவாதி சுட்டுக் கொன்ற போது தொலைக்காட்சிக்குப் பேட்டி கொடுத்த முன்னாள் பிரதமர் நெத்தனியாகூ, யூதர் தூதரைக் கொல்வது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று கூறியிருந்தார்.

அரசியல் படுகொலைகள் அது நாட்டின் தலைவராக இருந்தால் என்ன, சாதாரண இயக்கத் தொண்டனாக இருந்தாலென்ன, கண்டிக்கப்பட வேண்டியது.

ஆனால் எங்கள் சமூகத்தில், சமூக விரோதிகள் ஒழிப்பு என்று மின்கம்பத் தண்டனைகள் வழங்கும் போது சமூகம் அதைக் கண்டும் காணாமல் விட்டது. பின்னர் சிங்கள அரசின் பிரதிநிதிகளைக் கொல்லும்போது மகிழ்ச்சி தெரிவித்தது. இப்படி ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்தபோதெல்லாம் காட்டிய மௌனமும் மகிழ்ச்சியும் தான் இன்று மனிதர்களைக் கடிப்பதற்கான துணிச்சலைப் புலிகளுக்குக் கொடுத்திருக்கிறது.

கொல்லப்படுவது தமிழர்கள், தமிழ் இனத்தில் அரசியல் உணர்வுள்ள தமிழர்களை இராணுவம் கொன்றதை விட புலிகள் கொன்றது அதிகம் ஒரு இனத்தில் மேன்மைக்கு பல்வேறு அரசியல் கருத்துக்கள் அவசியம் என்பதை எங்கள் இனம் மறந்தது தான் இன்று ஒரு ஆயுதக் குழுவுக்கு அடிபணிய வைத்திருக்கிறது. துரோகி என்ற புலிகளின் முத்திரை குத்தல் மட்டுமே ஒரு கொலையை நியாயப்படுத்துவதற்கான காரணமாக, அந்தக் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளாமலேயே எங்கள் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

புலிகளையும் 'சும்மா சொல்ல' முடியாது. ஒரு புறத்தில் 'கொலைக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை' என்று வெளிநாடுகளுக்கும் அரசாங்கத்துக்கும் 'பாவ்லா' காட்டிக் கொண்டு, மறுபுறத்தில் தங்களுடைய புலம் பெயர்ந்த ரசிகப் பெருமக்களுக்கு கொலையை தாங்கள் நுணுக்கமாக திட்டமிட்டுச் செய்ததை பெருமையாகச் சொல்லி புலிலரிக்க வைப்பது ஒன்றும் சுலபமான விடயம் இல்லை. தமிழ்நெட் மூலமாக வெளிநாடுகளையும் 'சுத்தி', நிதர்சனம் மூலமாக தமிழர்களையும் 'சுத்துவது' சாதாரணமானதல்ல.

புலிகளின் அவதூறு இணையத்தளங்களினதும் சார்பு பத்திரிகைகளினதும் நகைச்சுவை உணர்வும் கற்பனைத் திறனும் (மோசமான எழுத்துப் பிழைகளுடன் என்றாலும்!) மாற்றான் வீட்டு மல்லிகையென பாராட்டப்பட வேண்டியன. ஒரு புறம் 'கொலம்பியா' வகைத் தாக்குதல் என்று எங்குமே கேள்விப்பட்டிராத பெயர் ஒன்றைச் சூட்டி திகைக்க வைத்து, கொலையில் அந்நிய உளவுச் சக்திகளின் சதி பற்றி புலனாய்வும் செய்து, கதிர்காமர் பற்றி மஞ்சள் பத்திரிகைக் கணக்கில் கிசுகிசுவும் எழுதி, மறுபுறத்தில் 'கதிர்காமரின் மகளை மாற்றாந்தாய் புறக்கணித்ததை'யிட்டு மனம் நொந்து கண்ணீர் விடும் இந்த 'நவரசத் திலகங்கள்' பற்றி எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்?



அரசியல் உணர்வுள்ள தமிழகளை இராணுவம் கொன்றதைவிட புலிகள் கொன்றதே அதிகம். கொலைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என சர்வதேசத்திற்கும் அரசிற்கும் கூறிக்கொள்ளும் புலிகள் மறுபுறம் தமது ரசிகப் பெருமக்களுக்கு, கொலையை எவ்வாறு நுணுக்கமாக திட்டமிட்டு செய்தோம் எனச் சொல்லி புல்லிரீக்க வைப்பது சுலபமான விடயம் அல்ல.

போதாக்குறைக்கு நோர்வேயும் புலிகளின் ரசிகர்களாகி விட்டது. புலிகள் தாங்கள் செய்யும் படுகொலைகளுக்கு விடும் மறுப்பறிக்கைகளை, 'நாங்கள் சொல்வதெல்லாம் உண்மையைத் தவிர வேறு ஒன்றுமில்லை' என்று புலிகள் அரிச்சந்திர சத்தியப்பிரமாணம் செய்தது போல, வேதமாய் நம்பி மற்றவர்களுக்கு ஒலிபரப்பு செய்கின்ற புலி ரசிகர்கள் போல, நோர்வேயும் 'புலிகள் தாங்கள் செய்யவில்லை என்று கூறியிருக்கிறார்கள், விசாரணை முடியும் வரையில் கொலையாளிகளைத் தெரியாது' என்று ஐரோப்பிய சமூகத்திற்கு பிரசாரம் செய்து கொண்டிருக்கிறது. ஒருவேளை தராக்கி சிவராமின் இடத்தை தற்போது எரிக் சொல்ஹெய்ம் நிரப்பியிருக்கக் கூடும். அடுத்தது, எரிக் சொல்ஹெய்முக்கு மாமனிதர் பட்டமாகக் கூட இருக்கலாம்.

குற்றச்செயல்கள் நடைபெறும் போது பொலிசார் 'வழமையான சந்தேகநபர்கள்' என்று முன்னாள் குற்றவாளிகளைச் சுற்றி வளைக்கும் வழமையான நிலை போல, அரசியல் படுகொலை என்றதும் புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது என்றால், அதற்கான காரணம் புலிகளின் முன்னைய நடவடிக்கைகள் தான். அமிர்தலிங்கம், ராஜீவ் போன்றோரின் 'துன்பியல் சம்பவங்களின்' கைங்கரியம் அது. வழமையாக 'குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் சுற்றவாளி' என்ற கருத்து புலிகளுக்குப் பொருந்தாது. தாங்கள் குற்றவாளி அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு புலிகளிடம் இருக்கும் அளவுக்கு அவர்களின் கடந்த கால நடவடிக்கைகள் உள்ளன.

தமிழ்ச்செல்வனின் முகத்தில் காரண காரியமில்லாமல் சதா தவழும் சிரிப்பு மூலமாக முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சி நடந்தாலும், புலிகளின் ஊடகங்கள் வரிந்து கட்டிக் கொண்டு 'கொலை செய்யப்பட்டவர்களைக் கொலை செய்ய வேண்டியதற்கான காரணங்களைப் பட்டியலிட்டு நியாயப்படுத்துவது' மறுபுறத்தில் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதை புட்டுக் காட்டிக் கொண்டே இருக்கும்.

இன்னொரு புறத்தில் அரசியல் ஆய்வாளர்களும் வெளிநாட்டு ராஜதந்திரிகளும் புலிகள் படுகொலையை 'இந்த நேரம்' செய்ததற்கான காரணத்தை அறிவதற்காக மூளையை உலுப்பிக் கொண்டிருக்கிறார்கள். புலிகள் ஏதோ சுபநேரம் பார்த்து கொலை செய்கிறார்கள் என்ற நினைப்பில்.

ராஜீவ் கொலைக்கான திட்டம் ஏற்கனவே போடப்பட்ட பின்னர், காசி ஆனந்தன், லண்டனில் இருந்து ஒருவர் என ராஜீவுடன் புலிகள் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். பிரேமதாசாவுக்கும் இதே நிலைதான். கதிர்காமருக்கும் தங்களுக்கு வேண்டிய வர்த்தகர் மூலமாக தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். 'அவர்கள் என்னோடு தொடர்புகளைக் கொண்டிருக்க விரும்புகிறார்கள்' என்று கதிர்காமர் பேட்டியில் சொன்னதெல்லாம் இதன் அடிப்படையில்தான்.

இதெல்லாம், கொலைகள் திட்டமிடப்பட்டு கொலையாளிகள் அனுப்பப்பட்ட பின்னால், கொலை செய்யப்பட உள்ள இலக்குகளுக்குப் பொய்யான நம்பிக்கை ஒன்றை ஏற்படுத்தி அவர்களின் அவதானத்தையும் கவனத்தையும் திசை திருப்புவதற்கான முயற்சி.... அதில் 'உங்களைக் கொலை செய்ய மாட்டோம்' என்ற உறுதி மொழிகளும் அடங்கியிருக்கும்.

எப்போதோ திட்டமிடப்பட்டு எவ்வளவோ காலம் முயற்சி பண்ணி இப்போது நடந்த கொலைக்கு, ஏதோ நேற்று திட்டமிட்டு இன்று கொலை செய்த கணக்கில் இவர்கள் எல்லாம் 'புலிகள் கொலை செய்வதற்கு இந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்த காரணம் என்ன?' என்று வியாக்கியானம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

சுருக்கமான விடை. எப்போதோ நடந்திருக்க வேண்டியது, இப்போது சாத்தியப்பட்டிருக்கிறது! அவ்வளவுதான்.

சர்வதேச சமூகம் வழமை போல, 'சமாதான முயற்சி தொடர வேண்டும்' என்று சொல்லியிருக்கிறது. அது கதிர்காமரைக் கொன்றாலும் அதைத்தான் சொல்லும். சந்திரிகாவைக் கொன்றாலும் அதையே சொல்லும். இலங்கைப் பாராளுமன்றத்தை புலிகள் குண்டு வைத்துத் தகர்த்தாலும் அதைத் தான் சொல்லும். சர்வதேச சமூகத்திற்குப் 'பயங்கரவாதம்' என்பது தன் வீட்டுப் படலையைத் தட்டும் போதுதான் உறைக்கும். அதே பயங்கரவாதம் அடுத்த வீடுகளுக்கு கொள்ளி வைக்கும் போது அதற்கு அக்கறை கிடையாது.

அரசாங்கமும் தன் கையாலாகாத் தனத்தை அப்பட்டமாக வெளிக்காட்டியிருக்கிறது. புலிகளின் படுகொலை முயற்சியில் கண்ணை இழந்த பின்பும், தீர்வு காண்பதற்காக, தன்னைக் கொல்ல முயன்றவர்களுடன் சந்திரிகா பேச்சுவார்த்தை நடத்துவது பாராட்ட வேண்டிய ஒன்றுதான். ஆனால், பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் நடக்கும் போதே வெளிநாட்டமைச்சரைக் கொன்ற பின்பும் பேச்சுவார்த்தை தொடரும் என்பது புலிகளுக்கு கொடுக்கும் செய்தி என்ன? எதைப் பற்றிய கவலையும் இல்லாமல் புலிகள் படுகொலைகளைத் தொடரலாம் என்பதுதானே!

பலஸ்தீனியர்கள் எந்த விதமான தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாலும், உடனடியாக இஸ்ரேலியர்கள் செய்வது இரண்டு விடயங்கள். ஒன்று, குண்டு வைத்தவர்களின் வீடுகளை இடித்து தரை மட்டமாக்குவது, மற்றது கொலைகள் நிறுத்தப்படும் வரை பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்துவது.

இதில் உள்ள அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் ஒருபுறம் இருக்க, விடுவிக்கப்படும் அழுத்தமான செய்தி முக்கியமானது. அரசாங்கம் உடனடியாகவே பேச்சுவார்த்தைகளை ரத்துச் செய்து 'கொலைகள் நிறுத்தப்படும் வரைக்கும் பேச்சுவார்த்தை இல்லை' என்றிருந்தால், கொலை நடந்த உடனான சர்வதேச எதிர்ப்புணர்வைச் சாதகமாக்கி ஆதரவைப் பெற்றிருக்கலாம் என்பதுடன் புலிகள் மீது அழுத்தத்தையும் பிரயோகித்திருக்கலாம்.

நோர்வேயும் ஓடிப் போய் புலிகளின் காலில் விழுந்து மன்றாடி, எப்படியாவது பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்க வசதியாக 'தற்காலிகமாகவேனும்' கொலைகளை நிறுத்துங்கள் என்று கெஞ்சியிருக்கும். பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம் என்று உலகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கும் புலிகளும் உடனடியாகவே எதையாவது செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருப்பார்கள்.

புலிகள் 'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடிக்கும்போது'ம் பேச்சுவார்த்தை தொடரும் என்றால், புலி மனிதனைக் கடிக்காமல் என்ன செய்யும்?

அரசாங்கத்தில் ஜனாதிபதியும் புதிய வெளிநாட்டமைச்சரும் நோர்வே பற்றி குறை சொல்லிக் கொண்டே, தொடர்ந்தும் நோர்வே மூலமாகத் தொடர்புகளை ஏற்படுத்துவது என்பது அரசாங்கத்தின் இந்த கையாலாகாத் தனத்தையே காட்டுகிறது. இந்தக் கையாலாகாத்தனத்தை சரியாகவே தெரிந்து கொண்ட புலிகள் தொடர்ந்தும் கொலைகளை எந்த வித கவலையுமில்லாமல் நடத்துவதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. போதாக்குறைக்கு வெளிநாடுகள் புலிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதுகாக்க இருக்கவே இருக்கிறது நோர்வே.

இதில் நோர்வேயின் அப்பட்டமான புலி ஆதரவுப் போக்கு முக்கியமானது. புலிகளின் விருந்தோம்பலில் 'நக்கி நாவிழந்த நிலையில்' உள்ள நோர்வே, எப்பாடுபட்டாவது புலிகள் கையில் அதிகாரத்தை வாங்கிக் கொடுப்பதில் மிகவும் அக்கறையாகத் தான் உள்ளது. புலிகளின் இயல்பை அறிந்து கொள்ளாமல், புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவார்கள் என்ற பகல் கனவுடன் செயற்படும் நோர்வேக்கு தனது முதுகில் புலி சவாரி செய்யும் உண்மையை உணர்ந்து கொள்ள நாள் பிடிக்கும்.

இதில் கதிர்காமர் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டாரா? புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டாரா? என்ற முடிவில்லாத வாதப் பிரதிவாதங்களுக்குள் தலையைப் புகுத்துவதை விட இந்தப் படுகொலை அரசியல் எங்கள் சமூகத்தைப் பாதித்தது பற்றிய ஒரு ஆன்ம பரிசோதனை இன்றைக்கு அவசியமானது.

அரசியல் படுகொலைகள் என்பதற்கான வரைவிலக்கணமே ஆளுக்காள் வேறுபடுகின்ற ஒன்று. புலிகளுக்குக் கூட, கருணா அணியினரால் கொல்லப்படும் போராளிகள் 'வீரச்சாவு', ஆனால் கௌசல்யன் 'படுகொலை', அமிர் கொலை 'துரோகி ஒழிப்பு' அதேசமயம் ராஜீவின் கொலை 'துன்பியல் சம்பவம்'.

அரசியல் நோக்கங்களுக்காக நடந்த இந்தக் கொலைகள் கூட, வெவ்வேறு நாமகரணங்களைத் தாங்கி வருகின்றன. சம்பந்தப்பட்டவர்களின் நலன்களையும் மற்றவர்களின் ஆதரவு, எதிர்ப்புத் தன்மையையும் பொறுத்து ஒரே கொலை பல்வேறு பெயரீடுகளைப் பெறலாம்.

பொதுவாக, அரசியல் காரணங்களுக்காகத் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும் திட்டமிட்டுக் கொல்வது 'அரசியல் படுகொலை'யாக விவரிக்கப்படுகிறது. யூலியஸ் சீஸர் கொலை முதலாக அரசியல் கொலைகள் நஞ்சூட்டுவதிலிருந்து முதுகில் குத்துவது வரை காலம்காலமாய் நடந்துதான் வந்திருக்கின்றன. முதலாவது உலக மகாயுத்தத்தின் ஆரம்பமே சேர்பிய தீவிரவாதி நடத்திய அவுஸ்திரிய முடிக்குரிய இளவரசரின் படுகொலை. அந்த யுத்தம் பல்வேறு சாம்ராஜ்யங்களுக்குச் சாவு மணி அடித்தது.

அரசியல் படுகொலை என்பது சட்டத்திற்கு அப்பாற்பட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு மட்டுமல்ல, ஜனநாயக அரசாங்கங்களுக்கும் பொதுவான நடவடிக்கை. அதிலும் முக்கியமாக உளவுப்பிரிவுகள் மேலோங்கி நிற்கும் எந்த அரசாங்கத்திலும் அரசியலில் இது இன்னொரு வழிமுறை.

மூன்றாம் உலக நாடுகளில் அதிகாரத்தில் உள்ளவர்கள் எதிர் கட்சிகளின் தலைவர்களையும் சுயாதீன ஊடகவியலாளர்களையும் கொல்வது என்பது சாதாரண விடயம். ஆனால் மேற்கு நாடுகளில் ஜனநாயக நடைமுறைகளும் சுதந்திர ஊடகங்களும் இவ்வாறான அரசியல் கொலைகளை மிகவும் அபூர்வமாகவே வைத்திருக்கின்றன. ஆனாலும் இந்த மேற்கு நாடுகள், முக்கியமாக பலம் வாய்ந்த வல்லரசுகள், தங்கள் நாட்டில் நடத்த முடியாத அரசியல் கொலைகளை வளங்கள் நிறைந்ததும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமான இடங்களில் தங்கள் நலன்களுக்காகவும் தலையிடுவதற்காகவும் தங்கள் கையாட்கள் மூலமாக நடத்துவதில் பெயர் பெற்றவை.

சிலியின் அலண்டே, கொங்கோவின் லுமும்பா, இந்தோனேஷியாவின் சுகர்ணோ போன்ற ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் அமெரிக்க உதவியுடன் அந்தந்த நாடுகளின் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட வரலாறுகள் உண்டு. சமீபத்தில் அமெரிக்க மதப் பிரசாரகரான பற் றொபேட்சன் எண்ணெய் வளம் நிறைந்த வெனிசூலா ஜனாதிபதியை இவ்வாறாகக் கொல்ல வேண்டும் என்றது பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி, அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கும் பத்திரிகையாளர்களும் படுகொலை செய்யப்படுவது இன்றைய கிழக்கு ஐரோப்பிய அரசியலில் சாதாரணமானதொன்று. உக்ரேய்ன் ஜனாதிபதி வேட்பாளருக்கு நஞ்சு வைத்து அவர் முகத்தை அகோரமாக்கியதும், ரஷ்யாவில் பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதும் இந்த அரசியல் படுகொலைகளின் ஒரு அம்சம்தான்.

சமீபத்தில் இவ்வாறாக நடத்தப்பட்ட கொலைகள் இரண்டு மிகவும் பெரிய அதிர்வுகளையும் எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தியிருந்தன. லெபனானில் நிலை கொண்டிருந்த சிரியா அங்கு தன் நலன்களைப் பேண, சிரியாவை வெளியேற்ற வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்த லெபனானியப் பிரதமரைக் கார்க் குண்டு வெடிப்பு ஒன்றில் கொன்றிருந்தது. அத்துடன் சிரியாவின் வெளியேற்றம் பற்றிக் கடும் போக்கைக் கொண்டிருந்தது. அதை விமர்சித்து வந்த பிரபல பத்திரிகையாளர் ஒருவரும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டிருந்தார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க...)

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ஜே.ஆரின் சகோதரர் பற்றி இந்தியா சந்தேகம் கிளப்பியது

அதிகாரப் பரவலாக்கலுக்கான அடிப்படை அலகு மாவட்ட மட்டத்திலேயே இருக்க வேண்டு மென்று விடாப்பிடியாக வலியுறுத்தி வந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு ராஜீவ் காந்தி மேற்கொண்ட தனிப்பட்ட முயற்சிகளே முக்கிய காரணமாகும். இதற்கு ராஜீவ் காந்தி புதுடில்லியில் ஜெயவர்த்தனாவுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள் மட்டுமல்ல, ராஜீவின் உத்தியோகபூர்வ விமானத்தில் இரு தலைவர்களும் நடத்திய சம்பாஷணைகளும் காரணமாகும். 'சார்க்' என்றழைக்கப்படும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பின் முதலாவது உச்சி மாநாடு பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் 1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இதற்குச் சில மாதங்கள் முன்னதாக பங்களாதேஷின் சிட்டாகொங் கழிமுகப் பகுதி சூறாவளியின் தாக்கத்துக்கு இலக்காகிப் பெரிதும் சேதமுற்றிருந்தது. இந்தப் பேரழிவு குறித்து ஜனாதிபதி எர்சாத்திடம் நேரடியாக ஆறுதல் தெரிவிக்கும்




**தமிழீழம் பெறுவதற்கான ஆணையைத் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கியிருந்தார்கள். தமிழீழத்துக்கான அரசியல் யாப்பை ஏற்படுத்துவதற்குத் தேவையான சபையை உருவாக்க கூட்டணி தவறி விட்டது. எனவே கூட்டணியை மாநாட்டுக்கு அழைக்கத் தேவையில்லை என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி வாதிட்டது. புளொட், தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து விட்டதால் அந்த அமைப்பை அழைக்கத் தேவையில்லை என்றும் அவர்கள் வாதிட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியென்றும் புளொட் அமைப்புக்கு தமிழ் மக்கள் மத்தியில் கணிசமான செல்வாக்கு உண்டென்றும் கூறிய இந்திய தரப்பினர், ஈழ தேசிய விடுதலை முன்னணிப் பிரதிநிதிகளின் கோரிக்கையை நிராகரித்தனர்.**

வகையில் டாக்காவுக்கு நல்லெண்ண விஜயமொன்றினை மேற்கொள்ள ராஜீவ் காந்தி விரும்பினார். தனது விசேஷட விமானத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் அழைத்துச் செல்ல விரும்பிய ராஜீவ் காந்தி, அதற்கான அழைப்பை விடுத்தார். தெற்காசிய நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பையும்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்புவதற்கு அயல் நாடுகளின் தலைவர்களென்ற வகையில் இருவரும் அங்கு செல்வது நல்லதென்று ராஜீவ் காந்தி கருதினார். இதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இணக்கம் தெரிவித்தார். இந்திய விமானப் படையின் விசேட விமானத்திலுள்ள ராஜீவ் காந்தியின் தனிப்பட்ட அறையில் கணிசமான நேரம் இரு தலைவர்களும் பேசினர். புதுடில்லியிலிருந்து டாக்கா சென்றபோதும் திரும்பி வரும்போதும் இரு தலைவர்களும் நெருக்கமாக உரையாடினர்.

மாவட்டங்களுக்குப் பதிலாக மாகாணங்களை அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படை அலகாக ஏற்றுக் கொள்ள ஜனாதிபதி ஜெயவர்த்தனா விரும்புகிறா

(அரசியல் தொடர்)

ரென்பதை விமானத்தில் நடத்திய உரையாடலின்போது தான் ராஜீவ் காந்தி உணர்ந்து கொண்டார். ஆயுதந் தாங்கிய சகல தமிழீழக் குழுக்களும் அவை பயங்கரவாத அமைப்புகளாக விருந்தாலென்ன தீவிரவாத அமைப்புகளாக விருந்தாலென்ன அவற்றுடன் பேசித்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று இந்த விமானப் பயணத்தின் போதும் ராஜீவ் ஜே.ஆருக்கு வலியுறுத்தினார்.

இக் கால கட்டத்தில் நியூயோர்க் மாநிலத்திலுள்ள ரொசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றி வந்த ரால்ப் புல்ஜன்ஸ் என்பவர் இலங்கை - இந்திய இரு தரப்புகளுக்கும் உதவத் தாமாகவே முன் வந்தார். பேராசிரியர் புல்ஜன்ஸுக்கு ராஜீவ் காந்தியிடமும் பண்டாரியிடமும் நல்ல செல்வாக்கிருந்தது. அத்துடன் இலங்கை அரசியல் தலைவர்களுடனும் அவருக்கு நெருக்கமிருந்தது. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் நல்லுறவுகளைக் கொண்டிருந்த பேராசிரியர் புல்ஜன்ஸ், அவருக்கூடாக திருமதி இந்திரா காந்திக்கும் அறிமுகமானார். திம்புப் பேச்சுவார்த்தைக்கு முன்னரும் பின்னரும் கூட பேராசிரியர் புல்ஜன்ஸ் புதுடில்லிக்கும் கொழும்புக்குமிடையில் பறந்து பல முக்கிய விடயங்களைக் கையாண்டார்.

பூட்டானின் தலைநகரான திம்புவில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரு தரப்புகளும் இணக்கம் தெரிவித்தன. பூட்டான் அரசாங்கமும் இதற்கு வரவேற்பு வழங்கியது. ஜனாதிபதி ஜெய வர்த்தனா தனது இளைய சகோதரனான எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனா தலைமையில் இலங்கை அரசாங்கத்தின் தூதுகோஷ்டியை அனுப்பத் தீர்மானித்தார். எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனா ஓர் சட்டத்தரணி. அரசியல்யாப்பு விவகாரங்களில் புலமையுடையவர். ஜனாதிபதி ஜெயவர்த்தனா இலங்கை அரசாங்கத் தூதுகோஷ்டிக்கு அமைச்சர் மட்டத் தலைவரை நியமிக்காதது குறித்து இந்தியாவுக்குப் பெரும் சந்தேகம் ஏற்பட்டது. வழமைபோல் ஜனாதிபதி ஜெயவர்த்தனா பேச்சுவார்த்தை முயற்சிகளைக் குழப்பியடிக்க முயற்சி செய்கிறாராவென்று இந்தியாவுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இந்திய உயர் ஸ்தானிகராகக் கொழும்பில் அப்போது பணிபுரிந்த ஜே.என்.தீக்சித் இது குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் நேரடியாகவே கேள்வியெழுப்பினார்.

தனது சகோதரர் மீது நம்பிக்கை கொண்டிருப்பதால் அவரையே தலைவராக நியமித்ததாக ஜே.ஆர். கூறினார். அத்துடன் அவர் அரசியலமைப்பு விவகாரங்களில் நிபுணரென்றும் தெரிவித்தார். அவர் மீது தனக்கு மிக உயர்வான நம்பிக்கை இருப்பதாகவும், ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே அவர் அனுப்பி வைக்கப்படுகிறாரென்றும் எனவே எச்.டபிள்யூ. குறித்து எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என்றும் ஜே.ஆர் விளக்கினார். ஆனால் உண்மையிலேயே பேச்சுக்களைக் குழப்பும் நோக்குடனேயே தனது சகோதரரை ஜே.ஆர். அனுப்பியுள்ளாரென்பது பின்னர் திம்புப் பேச்சுவார்த்தையை தோல்வியுற வைத்த சம்பவங்கள் நிரூபித்தன. இலங்கை அரசின் தூது கோஷ்டியில் வெளிவிவகார அமைச்சின் சில சிரேஷ்ட அதிகாரிகளும் இரண்டொரு பிரபல்யமற்ற அரசியல் பிரமுகர்களும் உள்துறை மற்றும் அரசியல் விவகாரத்துறையைச் சேர்ந்த சில அதிகாரிகளும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இலங்கை அரசின் தூதுகோஷ்டியில் பத்துப் பேர் அங்கம் வகித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அமிர்தலிங்கம், சம்பந்தன், எம்.சிவசிதம்பரம் ஆகிய மூவரும் கலந்து கொண்டனர். புலிகள் இயக்கம், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, ஈரோஸ் ஆகிய ஐந்து தமிழீழக் குழுக்களும் தலா இரண்டு பேர் வீதம் மொத்தம் பத்து உறுப்பினர்களை அனுப்பி வைத்தன. இலங்கை அரசாங்க தரப்பில் பத்துப் பேரும் தமிழர் தரப்பில் பதின்மூன்று பேர்களும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

திம்புப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் புதுடில்லியில் இந்திய அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள், தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் இயக்கமும் திம்புப் பேச்சுகளில் கலந்து கொள்ளக்கூடாதென்று வலியுறுத்தினர். ஆனால் இந்த இரு அமைப்புகளும் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டுமென்று இந்தியா வற்புறுத்தியது.

தமிழீழம் பெறுவதற்கான ஆணையைத் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கியிருந்தார்கள். தமிழீழத்துக்கான அரசியல் யாப்பை ஏற்படுத்துவதற்குத் தேவையான சபையை உருவாக்க கூட்டணி தவறி விட்டது. எனவே கூட்டணியை மாநாட்டுக்கு அழைக்கத் தேவையில்லை என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி வாதிட்டது. புளொட், தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து விட்டதால் அந்த அமைப்பை அழைக்கத் தேவையில்லை என்றும் அவர்கள் வாதிட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியென்றும் புளொட் அமைப்புக்கு தமிழ் மக்கள் மத்தியில் கணிசமான செல்வாக்கு உண்டென்றும் கூறிய இந்திய தரப்பினர், ஈழ தேசிய விடுதலை முன்னணிப் பிரதிநிதிகளின் கோரிக்கையை நிராகரித்தனர். 1985ஆம் ஆண்டு ஜுலை மாத மத்தியில் திம்புப் பேச்சுவார்த்தைகளின் முதற் சுற்று நடைபெற்றது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் திம்புப் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. பூட்டான் வெளிவிவகார அமைச்சர் வியோன்போ டாவா ற்செரிவ் மாநாட்டை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

(தொடர்ந்து வரும்....)




**குமார் பெரும் அதிர்ச்சியடைந்தவராக எலும்புக் கூட்டில் அதைப் பொருத்தி விடுகிறார். இரவு அதை யார் வைத்திருப் பார்கள் என்று யோசிக்கையில் ஸ்ரீதேவி அதற்குக் காரணம் தான் என்கிறாள். பின் ஸ்ரீதேவி தனது முழுக்கதையையும் அவரிடம் சொல்கிறார்......**

"புரியலை!"

"நான்தான் வேற ஒரு மண்டையோட்டைக் கொண்டு வந்து வச்சுட்டேனே. அதோட உங்க பிரின்சிபாலுக்கு இருந்த சந்தேகமெல்லாம் தீர்ந்து போயிடுச்சே!"

"உண்மைதான். நல்ல வேலை செஞ்ச! இல்லேன்னா பிரச்சினை ரொம்பப் பெரிசாப் போயிருக்கும்."

"அப்படியெல்லாம் நீங்க நிம்மதியடைறதுல அர்த்தமே இல்லை"

"அப்படின்னா"

"அந்தச் சந்துநாயர் இப்போ உங்களைத் தொலைச்சுடுற முயற்சியில ஈடுபட்டிருக்கார். அப்படிச் செஞ்சுட்டா சொத்துக்களைக் கைப்பற்ற முயற்சி செய்யுற எதிரிகளே அவருக்கு இருக்கமாட்டாங்களே இல்லையா? எல்லாமே நிரந்தரமா அவருக்கே சொந்தமாயிடும்!"

"உண்மையாவா சொல்ற? நான் அந்த ஆளுக்கு என்ன கெடுதல் பண்ணினேன்? இதுவரைக்கும் நான் அப்படி எதையும் பண்ணலையே?"

"நீங்க அப்படி நினைக்கிறதா இருந்தா நான் என்ன சொல்ல? நீங்க உயிரோட இருக்கிற வரைக்கும், சொத்து எப்போ நம்ம கையை விட்டுப் போகுமோன்னு ஒவ்வொரு நிமிஷமும் அவர் பயந்துட்டே நாளைக் கடத்தணும் அதைவிட உங்களைத் தொலைக்கிறதுதானே அவருக்கு சுலபம். அதனால், நாம

**எழுதுவது**
**சிவன்**

முந்திக்கிட்டா அவரைத் தோல்வியடைய வச்சுடலாம்!"

"நீ சொல்றது உண்மையாகத்தான் இருக்கும்னு தோணுது. நான் ஊருக்குள்ள காலெடுத்து வச்சதைத் தெரிஞ்சுக்கிட்ட நிமிஷத்துலேர்ந்து அவர் எனக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பிச்சுட்டா. அதுக்கு ஏற்ற மாதிரி பொருத்தமான ஒரு மந்திரவாதியையும் அவர் கண்டுபிடிச்சுட்டார். ஆமாம், நான் எப்படி இந்த விஷயத்துல எதுத்து நிற்க முடியும்."

"தைரியமா எதிர்க்க வேண்டியதுதான். மந்திரத்தை மந்திரத்தாலேயே ஜெயிக்கணும்!"

"காலேஜ்ல வேலை செய்யுற ஒரு லெக்சரர் இதையெல்லாமா செஞ்சுட்டிருக்க முடியும்?"

"இப்படியெல்லாம் யோசிச்சா, அதுக்கு ஒரு முடிவே கிடையாது.



இந்தச் சூழ்நிலையில் அவரை எதிர்த்தே ஆகணும். ஒரு வகையில அது என்னோட லட்சியமும் கூட, நான் வெற்றியடையறதுக்காகவாவது எனக்கு நீங்க உதவணும்!"

"நான் நிறைய யோசிக்க வேண்டியிருக்கும்!"

"யோசிச்சா மட்டும் போதாது. லீவெடுத்து உடனே ஊருக்குப் போகணும். இதுக்கு சரியான ஒரு பரிகாரம் செஞ்சே தீரணும்" அவள் வற்புறுத்தினாள்.

"முயற்சி பண்றேன்...."

"அப்ப நான் கிளம்பட்டுமா?" அவள் கட்டிலிலிருந்து எழுந்தாள்.

"இந்த நேரத்துல எங்கே போற ஸ்ரீதேவி?"

"இங்கேயிருந்து அவ்வளவு சீக்கிரமா நான் எங்கேயும் போயிடமாட்டேன். உங்களுக்குத் தேவைப்படுற நேரத்துல எல்லாம் நான் உங்ககிட்ட இருப்பேன்" பேசியவாறே மெதுவாக நடக்கத் தொடங்கியவள் இருட்டில் மறைந்தாள்.

ஒரு கனவில் ஆழ்ந்திருப்பதைப் போல் குமார் அப்படியே கட்டிலில் படுத்திருந்தார்.

நடக்கிற எதையுமே நம்ப முடியவில்லை. இப்படிப்பட்ட செயல்களும், உருவங்களும் உலகத்தில் இருக்க முடியுமா என்கிற வியப்பு அப்போது அவரிடமிருந்து அகலவே இல்லை.

தன்னுடைய இல்லத்தின் வராந்தாவில் உட்கார்ந்திருந்தபோது துளசி மாடத்தின் அருகில் எரிந்தவாறே வந்து விழுந்த பாம்பு, கருகிச் சாம்பலானது சாதாரணமான சம்பவமல்ல என்பது அவருக்குப் புரிந்தது.

இப்படிப்பட்ட சம்பவங்களை கதைகளில் படித்திருக்கிறோம். அதெல்லாம் உண்மைதான் என்று பறை சாற்றுவது போல் ஒவ்வொரு சம்பவமும் அடுத்தடுத்து.. அந்த அனுபவங்கள் மறக்க முடியாததாகவும் இருக்கிறது.

உறக்கம் கண்ணிமைகளை நெருங்க மாட்டேன். என்று அடம் பிடித்தது. எவ்வளவோ முயற்சி செய்தும் உறங்கவே முடியவில்லை.

கட்டிலிலிருந்து மெதுவாக எழுந்தவர் லேப்பின் கதவைத் திறந்து கொண்டு வந்தார். படிகளில் இறங்கிக் கீழ்த் தளத்தை அடைந்தார்.

காலேஜ் காம்பௌண்டில் வளர்ந்து நிற்கும் மரங்களின் குடைபோன்ற. அகன்ற மேற்பரப்பு தரைப் பகுதியை இருட்டாக்கியிருந்தது.

நீண்ட வராந்தாவிலிருந்து குமார் வெளியே வந்தார். இருட்டுப் பரப்பின் ஊடாக நடந்தார்.

"யாரது?" சட்டென்று ஒரு பெண் குரல் இருட்டிலிருந்து குதித்து வந்தது.

முன்பின் கேட்டறியாத - பழக்கமில்லாத குரலாக இருந்தது அது.

குமார் சட்டென்று நின்றார்.

"யாருன்னு தெரியலையே?" குமார் கேட்டார் தெரிந்து கொள்ளும் ஆவலுடன்,

"என்னை உங்களுக்கு நல்லாவே தெரியும். நான் தான் சார் ஷைலஜா, பி.எஸ்.ஸி செகண்ட் இயர்" குரலுக்கு உரியவள் இருளின் நன்றாகவே மறைந்தவாறே பேசினாள்.

"சுத்தமா முகமே தெரியலையே கொஞ்சம் வெளி பக்கமா வந்து நில்லுமா. ஆளையாவது அடையாளம் தெரிஞ்சுக்கிறேன்." குமார் கேட்டார்.

"வேண்டாம் சார். யாராவது பார்த்துடுவாங்க" அவள் குரல் மட்டும் இருளை ஊடுருவியது.

"மணி பன்னிரண்டுக்கு மேல ஆயிடுச்சு. இதுக்கு மேல யாரு விழிச்சிட்டிருக்கப் போறாங்க? அதுவும் இந்த நேரத்தில, இந்த இடத்துல யாருக்கு என்ன வேலை இருக்கப் போகுது?"

(வாசனை வீசும்....)

# பார்வை 1... 2... 3...

அவன் மீன் விற்பதற்காக முதன்முதலாகக் கடைவீதிக்கு வந்தான்! ஒரு கூடை நிறைய மீன்களுடன் சந்தடி உள்ள ஓர் இடமாகப் பார்த்துக் கூடையை வைத்துவிட்டு, அதற்கு மேலே உள்ள சுவரில் ஒரு பலகையை மாட்டி, 'இங்கே புது மீன் விற்பனை செய்யப்படும்!' என்று எழுதி வைத்தான். வாசகம் சரியாக இருக்கிறதா என்று அவனுக்குச் சந்தேகம். தான் எழுதியதைத் தானே ஒரு முறை படித்துப் பார்த்தான். 'யாராவது பழைய மீனை விற்பார்களா என்ன?' என்று அவனுக்குள்ளே கேள்வி எழ... 'புது' என்ற வார்த்தை தேவையில்லை என்று அவனுக்குப் பட்டது. அந்த வார்த்தையை அழித்துவிட்டு, எஞ்சி உள்ள வார்த்தைகளைப் படித்துப் பார்த்தான்.

"இங்கே மீன் விற்பனை செய்யப்படும்' என்றிருந்தது! 'சரிதான்..... மீனைத் தானம் செய்வதற்காகவா கடை வீதிக்குக் கொண்டு வருவார்கள்' என்று தோன்றியது. 'விற்பனை செய்யப்படும்' என்ற வார்த்தைகளும் தேவையில்லை என்றே அவனுக்குப் பட்டது. அதையும் அழித்துவிட்டு இப்போது படித்துப் பார்த்தான்.

'இங்கே மீன்' என்று இருந்தது. அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. பார்த்த மாத்திரத்திலேயே மீன் இங்கே இருக்கிறது என்றுதான் தெரிகிறதே. அப்புறம் எதற்கு வீணாக 'இங்கே' என்ற வார்த்தை. 'இங்கே'யையும் அவன் அழித்தான். இப்போது 'மீன்' என்ற வார்த்தை மட்டுமே இருந்தது. மீனை சுவைத்துத் தின்னத் தெரிந்தவர்களுக்கு, பார்த்ததுமே தெரிந்து விடாதா அது 'மீன்' என்று, என்ற எண்ணம் உருவாக... அந்த ஒரு வார்த்தையையும் அவன் அழித்துவிட்டான்! இப்போது பலகையில் எந்த வார்த்தையும் இல்லை!

மீன் விற்பனை செய்தவன் பலகையில் எழுதி வைத்த வாக்கியத்தைப் போலத்தான் நமது பல பிரச்சினைகளும்! பிரச்சினைகளை நாம் சரியாகப் பார்க்கக் கற்றுக் கொண்டால், பலகையில் எழுதி வைத்த எழுத்துக்களைப் போலப் பிரச்சினைகளும் படிப்படியாக மறைந்துவிடும்! ஆனால், இதில் வருத்தத்துக்குரிய விஷயம் என்னவென்றால், நம்மில் பலருக்குப் பார்க்கவே தெரிவதில்லை!

Philosophy என்ற ஆங்கில வார்த்தையைத் தமிழில் 'தத்துவம்' என்று சொல்லலாம். சமஸ்கிருத மொழியில் இதற்கு 'தரிசனம்' என்று பெயர். ஆம் - 'பார்ப்பது' என்று பொருள் . பார்ப்பதற்கு என்னவெல்லாம் தேவை? கண்கள் மட்டும் இருந்தால் போதுமா? விழிகள் இருந்தால் போதாது..... 'விழிப்பு உணர்வு தேவை' என்கிறார் பகவான் கிருஷ்ணர்!



இந்த விழிப்பு உணர்வு இருந்தால்தான், பொருட்கள், மனிதர்கள், நாம் - இந்த மூன்றையும் எப்படி வித்தியாசப்படுத்திப் பார்ப்பது என்பது நமக்குப் புலப்படும்.

'எத்தனை வீடு வைத்திருக்கிறாய்? அது எவ்வளவு மதிப்பு?' 'என்ன கார் வைத்திருக்கிறாய்? எத்தனையாவது ஆண்டு மாடல்?' என்றுதான் பொருட்களைப் பற்றிப் பேசும்போது குறிப்பிடுவோம். மேலும், பொருட்கள் எல்லாமே கருவிகள். அதனால், பொருட்களைக் கணித ரீதியாகப் பார்க்கவேண்டும். பொருட்களைக் கருவியைப் போலத்தான் பார்க்க வேண்டும்! பயன்படுத்த வேண்டும்!

சரி, அடுத்து மனிதர்களை எப்படிப் பார்ப்பது? பொருட்களைப் பார்க்கப் பயன்படுத்தும், அதே அளவுகோலை வைத்து மனிதர்களைப் பார்க்கக் கூடாது. அன்புள்ள அப்பா, பாசமுள்ள அம்மா, நேசம் மிகுந்த சகோதரி, நன்றி மிக்க நண்பன் என்று மனிதர்களைப் பார்க்கும்போது உறவுமுறை என்ற அன்புதான் இங்கே அளவுகோல்!

ஆனால், நடைமுறையில் நாம் என்ன செய்கிறோம்?

கருவியாகப் பயன்படுத்த வேண்டிய வீடு, கார், டி.வி. போன்ற பொருட்கள் மீது உறவுமுறை வைக்காத குறையாக, உணர்வு ரீதியாகப் பற்றுதல் வைக்கிறோம். அன்பு வைக்கவேண்டிய அம்மா, அப்பா, மனைவி, குழந்தைகள், சகோதரன், நண்பர்கள் போன்ற மனிதர்களை, நமக்கு வேண்டியவற்றை நிறைவேற்றித் தரும் கருவிகளாகப் பயன்படுத்துகிறோம்!

பொருட்களைக் கணித ரீதியாகப் பார்க்கவேண்டும். மனிதர்களை அன்போடு பார்க்க வேண்டும். சரி, நம்மை நாமே உள்நோக்கிப் பார்ப்பது எப்படி? நம்மை எப்படிப் பார்ப்பது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், 'நாம்' என்று நாம் குறிப்பிடும் உடம்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நமது உடம்பில் மூன்று உடம்புகள் உண்டு. முதலாவது, ஸ்தூல சரீரம். சதையாலும் எலும்புகளாலும் ஆன உடம்பு! இரண்டாவது, சூட்சும சரீரம். அதாவது நமது அறிவு, சிந்தனை, எண்ணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நாம்! கடைசியாக எஞ்சி நிற்பது காரண சரீரம். சமஸ்கிருதத்தில் இதற்கு சாஷி என்று பெயர். தமிழில் விழிப்பு உணர்வு (Awareness) என்று சொல்லலாம்.

பார்த்தீர்களா? இப்போது நாம் ஆரம்பித்த இடத்துக்கே வந்துவிட்டோம். பிரச்சினையை எதிர்கொள்ள நமக்குத் தேவை 'பார்வை'! பார்ப்பதற்குத் தேவை 'விழிப்பு உணர்வு!'

பிரச்சினைகள் இல்லாமல் இருக்கவேண்டும் என்று நாம் நினைப்பது தவறு! ஏனெனில், பிரச்சினைகள் இல்லாத ஒரே இடம் சுடுகாடு மட்டும்தான். அதாவது மரணத்துக்குப் பிறகு, பிணங்களுக்கு மட்டும்தான் பிரச்சினைகள் எதுவும் இருக்காது! வாழுகின்ற மனிதர்கள் அனைவருக்கும் பிரச்சினைகள் நிச்சயம் இருக்கும். பிரச்சினைகள் இல்லை என்றால், வாழ்க்கையிலும் சுவை இருக்காது!

குப்புற வீழ்வது.....! அடி படுவது! வலியில் துடிப்பது! வலியோடு வெற்றியைத் துரத்திக் கொண்டு ஓடுவது! வெற்றி கிட்டப்போகும் தருணத்தில், எதிரி அதைத் தட்டி விடுவது! இதெல்லாம் வாழ்க்கையில் மட்டுமல்ல..... கால்பந்தாட்டத்திலும் நடக்கிறது! ஆனால், கால்பந்தாட்ட வீரனுக்கு அவன் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சினையும்தான் சவால்..... சுவாரஸ்யம்!

கால்பந்தாட்ட வீரன் ஒருவன் கால்பந்தை உருட்டிக்கொண்டு 'கோல்' போட ஓடும்போது.... கோல் கீப்பர் உட்பட, எதிர் டீமில் இருக்கும் யாருமே அவன் பந்தைத் தடுக்காமல் ஒதுங்கி நின்றால், அந்த விளையாட்டு களைகட்டுமா....? அவனுக்கும்தான் தொடர்ந்து விளையாட உற்சாகம் பிறக்குமா? அல்லது அப்படி ஒரு அசுவாரஸ்யமான ஆட்டத்தை யாராகிலும் ஏறெடுத்துத்தான் பார்ப்பார்களா?

யோசியுங்கள்.....!


**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 141



### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 11.10.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-141
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 139க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ஏ.எஸ்.பாகிமா சலாம், முனைச்சேனை வீதி, குறிஞ்சாக்கேணி - 03, கிண்ணியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எஸ்.நவநீதன், சின்ன தெய்வகந்தை, சாமிமலை.
2. வ. மகேஸ்வரன், கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை.
3. திருமதி. சோதி கருணநாயகம், செட்டிபாளையம், மட்டக்களப்பு.
4. க. கீர்த்திகா. வங்களாவடி, வேலணை வடக்கு வேலணை.
5. ஜோதிலட்சுமி, 3, மொல்லிகொடவீதி, கம்பளை.
6. கே.எம்.எம். கலீல், 21, குளியாப்பிட்டிய வீதி, ஹொறம்பாவ.
7. கு.ரஜந்தினி, 40, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை.
8. சிவநாதன் மயூரன், தெற்கிலுப்பைக் குளம், சின்னப்புதுக்குளம், வவுனியா.
9. எம். ருத்ரா, சின்ன செல்வ கந்த, பிட்டகந்த, மாத்தளை.
10. எஸ்.கே. ஸ்ரீராஜ், 47, அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.

### இடமிருந்து வலம்

1. கிழமை நாட்களில் ஒன்று. நிலவு என்றும் பொருள்படும்.
5. ஆசான் என்று கூறலாம். (திரும்பியுள்ளது).
6. பகைவன்.
8. தசரதனின் மனைவிகளுள் ஒருத்தி. இவள் இராமனின் தாய்.
10. உணர்வுகளில் ஒன்று வயிற்றுடன் தொடர்புடையது. (திரும்பியுள்ளது).
12. குன்று என்றும் சொல்லலாம்.
14. ஆயுதம் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
15. ஒரு நாட்டின் அல்லது கூட்டத்தின் நிர்வாகியை இப்படியும் கூறலாம் (குழம்பியுள்ளது).

### குறுக்கெழுத்துப் போட்டி 139 விடைகள்



### மேலிருந்து கீழ்

1. இலங்கையில் கன்னியாய் வெந்நீரூற்று காணப்படும் மாவட்டம்.
2. கடலிலிருந்து கிடைப்பது. பூஜைகளில் பயன்படுத்தப்படும் (குழம்பியுள்ளது).
3. நல்லெண்ணெயின் மூலப் பொருள்.
4. யானை என்றும் சொல்லலாம். அணைந்த தணலையும் இப்படிக் கூறுவர்.
7. வேகம் என்று பொருள்.
9. பதுமை என்று சொல்லாம். சிற்பிகளால் வடிக்கப்படுவது.
10. இதனை பலர் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். உத்தியோகநிலை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது).
11. இரக்கம் என்று கூறலாம். (குழம்பியுள்ளது).
13. மீன் பிடி உபகரணங்களில் ஒன்று. (தலை கீழ்)

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# இதயத்தின் பார்வையில்.....

அச்சமாக அடித்துக் கொண்டிருந்த அலைகளை அன்றுதான் முதன் முதலில் பார்ப்பவன் போல கடல்நீரை கரைகளில் இருந்தவாறே கண்களால் பருகிக் கொண்டிருந்தான் ரொஷான்.

தலை துவட்டிக் கொள்ளாமல் ஊர் வலம் போகும் மேகங்களையும், தூரி கையில்லாமலேயே தூரத்து வானுக்கு நீண்ட காலமாகவே நீல வர்ணம் அடித்துக் கொண்டிருக்கும் கடலையும், காதலியின் மடியில் தலை சாய்த்து ரசிப்பதுதான் அவனுக்கு மாலை நேரத்து உலக மகா சந்தோஷம்.

நுஸ்லா! அவள் அழகின் நவீனம்! கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை யொன்றின் மாணவி. ரொஷானின் மனசின் மர்மங்களைக் கூட விழிகளால் தீண்டிவிடும் கண்கள் அவளுக்கு!

அந்தக் கண்கள் இன்று கலங்கி யிருந்தன. அவளது மடியின்று ரொஷா னுக்கு 'சாய்க்கட்டிலாக' மறுத்திருந் தது. அவளுக்குப் பக்கத்தில் இருந்த வாறே கடலை கொறித்துக் கொண்டி ருந்த அவன் பார்வைகளை அவை களிடமிருந்து வாபஸ்பெற்று நுஸ் லாவை நோக்கி வீசியவாறே.....

"நுச்சா..."என்றான்.

"ம்...."என்ற பதில்கூட இல்லை.

"நுச்சா உனக்கென்ன பிடிச்சிருக்கு இன்னிக்கு. வந்ததுல இருந்தே உம் முன்னு உக்காந்துக்கிட்டிருக்கே. இந்தா கடலை சாப்பிடு!" என்று தன் கரங் களுக்குள் பொத்தியிருந்த கடலைப் பக்கட்டை நீட்டினான் ரொஷான்.

"எனக்கு வேணாம் மீனுக்குப் போடுங்க" என்று கோபமாகக் கூறியவள்,

"மீனுக்கு பசியில்லையாம்" என்று ரொஷான் சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாதவளாய் தன் ஷல்வாரில் ஒட்டியிருந்த மணற்துகள்களைத் தட்டி விட்டவாறே தடயங்களை எண்ணிய வளாக கரையோரமாய் நடக்க ஆரம் பித்தாள்.

கையில் கிடந்த கடலையை உண்மையாகவே மீனுக்கு வீசிவிட்டு அவள் போகும் திசையில் அவளுக்குப் பக்கவாட்டில் நடந்து போய் வழி மறித்த ரொஷான்...

"நுச்சா....என்ன, என்னதான் செய்யச் சொல்ற" என்றான். ஒண்ணு மில்ல என்கூட பேசாதீங்க." என்றவள்




முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு தன்பாட்டில் நடக்க ஆரம்பித் தாள்.

நுச்சா....இன்று ஏன் தன்னுடன் அப்படி நடந்து கொள்கிறாள் என்று அவ னால் ஓரளவு ஊகிக்க முடிந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாதவனாய் காதலின் சந்நிதானத்தில் சரணடையும் சுகத்தை அனுபவிப்பதற்காகவே அவளது வேக நடைக்கு ஈடுகொடுத்தவாறே நடந்து கொண்டிருந்தான்.

கொஞ்சத்தூரம் நடந்தவளுக்கு கால் வலித்திருக்க வேண்டும்! அப்படியே தரையில் அமர்ந்தவள் ஆத்திரம் பொங்க ரொஷானைப் பார்த்து, "ஏன் என்கிட்ட அதபத்தி கேட்கல்ல" என்றாள் சிணுங்கி யவாறே. அவளது முகபாவத்தில் இருந்து இன்று காலை நடந்த சம்பவம் அவளது மனதை குழப்பியிருக்கிறது என்பதையும், அதைப்பற்றி எதுவுமே கேட்காமல் அலட்சியமாக (ரொஷான்) இருப்பது அதைவிட சங்கடத்தை ஏற்படுத் தியிருக்கிறது என்பதையும் ஊகிக்க அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. இருந்தாலும் ஒன்றும் அறியாத அப்பா வியைப் போல "எத பத்தி கேக்கணும்" என்றான் போலியான கேள்வியோடு.

"காலைல சுப்பர் மார்க்கட் புடவைக் கடையில...நீங்க வந்தப்போ...." என்றவள் முழுதும் சொல்லி முடிக்குமுன்....

"ஆ....அதபத்தி என்ன உன்கிட்ட விசாரணை வேண்டிக்கிடக்கு? நீயும் இன் னொரு போயும் அந்த சுப்பர் மார்க் கட்டுக்குள்ள ஏதோ புடவை செலக்ட் பண்ணிக்கிட்டிருந்தீங்க. அந்த வழியா வந்த நான் அத பார்த்தது உண்மை. அப்போ நீயும் என்ன பாத்த...எனக்கு 'பேங்'குக்கு போக இருந்ததால நான் அவசரமாக வந்துட்டேன். அவன் யாரு? அவன் கூட எங்க போன? இந்த மாதிரி கேள்வியெல்லாம் உன்கிட்ட கேட்கல்ல என்றதுக்குத்தான் இந்த கோபமா?" என்று மூச்சுவிடாமல் பேசிவிட்டு அவளது முகத்தைப் பார்த்தான் ரொஷான். அவள் 'ஆம்' என்பது போல தலையாட்டினாள் உதிர்வதற்கு ஆயத்தமாக இருந்த அவளது விழி நீர்த்துளியொன்றை தன் விரல்களால் ஒற்றியெடுத்து விட்டு தன் கரங்களை அவளது கூந்தலுக்குள் செலுத்தி மெல்ல வருடியவாறே நுச்சாவின் சிவந்திருந்த கண்களை நேராகப் பார்த்துச் சொன்னான்.

"இங்க பாரு நுச்சாகுட்டி! நீ யாரோ ஒருவர் கூட சுப்பர் மார்க்கட்ல இருந்து வந்த என்பதற்காக உன்ன கேள்வி மேல கேள்வி கேட்டு துளைக்கணும்னு கட்டாயமா என்ன? அந்த போய் உன் கிளாஸ் மேட்டா இருக்கலாம். உங்க ஸ்கூல் விழாவொன்றுக்காக ஏதாவது ட்ரெஸ் எடுக்க உங்க ரெண்டு பேருக் கும் ஒண்ணா கடைக்குப் போக வேண்டி ஏற்பட்டிருக்கலாம்!

இல்லைன்னா அவனது காதலிக்கோ, யாருக்கோ ஒரு நல்ல துணி செலக்ட் பண்ண ஒரு பிரண்ட் என்ற முறையில் உன்ன கூட்டிக்கிட்டு போயிருக்கலாம். அப்படியும் இல் லைன்னா உங்களுக்கு ரொம்பப்பிடிச்ச கெமிஸ்ரி ரீச்சருக்கு ஏதாவது பிரசன்ட், வாங்கிக் கொடுக்க இரண்டு வகுப்பு மாணவர்கள் என்ற வகையில் புடவைக் கடைக்குப் போயிருக்கலாம்... இப்படியெல்லாம் தான் உன்ன அவன் கூட கண்ட நேரத்துல நெனச்சிக் கிட்டேன். நீ வந்ததும் உடனே உன்ன சந்தேகமாக பார்த்து....மனசுக்குள் புகைந்து கொண்டு இருக்க வேண்டும் என்று நினைக்கவில்லை... (எனக்குத் தெரியும்) உன் மனசுல என்னைத் தவிர யாரையும் நினைக்க மாட்டே என்கிற நம்பிக்கை இருக்கு! உன் காதல உன் கண்களே சொல்லுது! நான் உன்மேல அன்பைப் போலவே நம்பிக்கையும் வைச்சிருக்கேன்.

நீ யார் கூட எங்க போயிட்டு வந்தாலும் சந்தேகப்படமாட்டேன்... ம்...இனியாவது கொஞ்சம் சிரி...." என்றவனை ஆவேசமாய் கட்டிப்பிடித்து அவன் முகத்தில் முள் குத்தாத இடங் களில் முத்த மழை பொழிந்த நுஸ்லா வின் கண்களுக்கு ரொஷானும் அவனுடைய காதலின் புனிதத்துவமும் தன்முன்னாலே இருக்கும் கடலின் ஆழமாகத் தெரிந்தது.

சந்தேகப் பேய் பிடித்த பார்வை களுடனேயே எதுவொன்றுக்கும் இதயங்கள் தீப்பற்றும் கேள்விகளால் கொல்லும் மனிதர்கள் நிறைந்த ஒரு சமூகத்தில் ரொஷானைப் போல ஒருவன் தனக்கு வாழ்க்கைத் துணை யாகக் கிடைக்கப் போவதையிட்டு உள்ளூர கர்வப்பட்டுக் கொண்டாள் நுஸ்லா.

# இயற்கை

உயர்நிலைக் கல்வியைக் கற்று பட்டம் பெற்ற பின்னும் பட்டதாரிகள் போராட்டம் நடத்தும் வேலையில்லாப் பட்டியலில் சுதாவும் அடங்கினாள். பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குதலில் பாரபட்சம் காட்டப்படுவதனால் போராட்டத்தில் குதித்தனர். வேலையில்லா பட்டதாரிகள் அனுபவித்த அவலங்கள் காரணமாகவோ என்னவோ சுதாவிற்கும் ஆசிரியர் வேலை கிடைத்துவிட்டது. சுதா குடியேற்றத்திட்ட வீடுகளில் வசிக்கின்றாள். அது சண்டை சச்சரவுகள் நிறைந்த இடம். பொதுக் கிணறு, பொது மலசலகூடங்கள். அதனால் மனிதருக்கு வருத்தங்கள்தான் ஏற்படும். சுதா அங்கு பட்டதாரி என்பதால் மிகவும் கண்ணியமாக அவதானமாக அந்த சனங்களுடன் பழகிக்கொள்வாள். ஆசிரியர் வேலை கிடைத்தது அவளுக்குப் பெரும் உதவியாக இருந்தது. முக்கால் நாளை பாடசாலைக்கு போய் வருவதில் கழித்து விடுவாள். மீதம் கால்வாசி நாளைத் தன் வீட்டில் செலவழிப்பாள்.

சுதாவின் பாடசாலை அவளின் சொந்த ஊரான வன்னி மாவட்டத்தில்தான் உள்ளது. இரண்டு பஸ் எடுத்து போக வேண்டியுள்ளது. கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலை தான் வன்னி மாவட்டத்தில் உள்ளது. அது சுதாவுக்கு வசதியாகப் போனது. பிள்ளைகளைக் கற்பிப்பதில் சுதாவுக்கு பிரியம். ஏழைப் பிள்ளைகளுடன் ஒன்றாகப் பழகுவாள். தான் இருக்கும் குடியிருப்பிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகக் கற்பித்துக் கொடுப்பாள். சுதா வேலை தேடி அலைந்து எட்டு வருடம் ஆகிவிட்டது. பட்டதாரியாகி எட்டுவருடமும் பல போராட்டங்களில் நியமனம் கோரி இறங்கியவள். அதன் பலனாக பல பாடங்களைக் கற்றுக் கொண்டாள். பல்கலைக்கழகத்தில் படிப்பதைவிட வேலைக்காக இறங்கிய அலைச்சல்களால் பல உண்மைகளைத் தெரிந்து கொண்டாள். அதனால் ஏழைகள், கஷ்டப்பட்டவர்களை முன்னின்று அரவணைப்பாள். பழகுவதற்கு ஏற்ற இடம் இல்லை என்றாலும் பண்பாக நடந்து கொள்வாள். அதுதான் அவளின் தலையெழுத்து. அங்கு அவள் கடமையாற்றினாலும் பிள்ளைகளின் வீடும் தேடிப்போவாள் அவசர அலுவலகளுக்கு. பிள்ளைகளுக்கு சுகயீனம் என்றால் உடனே போய்விடுவாள்.

இப்படி பழக்கப்பட்ட சுதாவுக்கு திடீர் விபத்து ஏற்படும் என்று யார் எண்ணினார்கள். சுதாவின் வாழ்வும் அந்த பாழ்பட்ட இடத்தில் பறிபோன அந்த நாளை எண்ணும்போது சுதாவுக்கு கவலை ஏற்படத்தான் செய்தது.

சமூக சிந்தனையுடன் எதிர்காலச் சமூகத்தினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இருந்த சுதாவுக்கு, பாடசாலை ஆசிரியர் நியமனம் கிடைத்து ஒரு மாதம் இருக்கும். அந்த நாள் சுதா மிகவும் பழகிவிட்டாள் பிள்ளைகளுடன். பிள்ளைகளுக்கு ஒன்று நடந்தால் தாங்கமாட்டாள். சமூகப்பற்றும் தேசிய சிந்தனையும் ஊறிக்கொண்டிருந்த வேளையிலும் கடமை, கட்டுப்பாடு, பண்பாடு, கலாசாரம், சுதந்திரமான சுயத்தோடு நடமாடிய நேரத்தில் சமூகச் சீரழிவும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

சுதா வழமைபோல் பாடசாலை போய்க்கொண்டிருக்கின்றாள். இரண்டாவது பஸ் தரிப்பில் இறங்கி பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள். காலை ஏழு முப்பது இருக்கும். மக்கள் எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் நேரம். பாடசாலை செல்வோர், வேலைத்தளங்களுக்குச் செல்வோர் என்று ஆரவாரங்களுடன் பொழுதுபோகும் அவ்வேளையில், ஆட்டோவில் இருந்து ஒருவன் வந்து "டீச்சர் என் பிள்ளை பாமா சீரியஸாக இருக்கின்றாள். உங்களைப் பார்க்க வேண்டுமென்று அழுது கொண்டிருக்கின்றாள். அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஒருக்கா வீட்டுக்கு வந்து பாருங்கள்" என்று கெஞ்சினான்.

சுதாவுக்கு முப்பது வயதிருக்கும். பார்ப்பதற்கு மெல்லிய தோற்றமுடையவள். மிகவும் பயந்த சுபாவம் உள்ளவள். ஆனால் ஆபத்துக்குப் பாவமில்லை என்பதில் சுதா தன்னை மறந்தாள். அவனைப் பார்ப்பதற்கு பயமாக இருந்தாலும் பிள்ளைக்கு ஆபத்து என்றவுடன் ஏறிப் போனாள். பாடசாலைக்குப் போவதையும் விட்டு விட்டு, பிள்ளையைக் காப்பாற்றத் துணிந்தாள். ஏழை எளியவருக்கு உதவி செய்யப்போய் இப்படி ஆபத்துக்கள் வரும் என்று யார் கண்டார்? நோய், நொடி, துன்பங்கள் அனைத்தையும் சகித்த சுதா பாலியல் வன்முறைக்கு உட்பட்டுவிட்டாள். சுதாவை கடத்திக் கொண்டு போய், ஒரு பாழடைந்த வீட்டில், மேல்மாடியில் இருப்பதாகக் கூறி அழைத்துச் சென்று வல்லுறவிற்கு உட்படுத்திவிட்டான். சுதா அக்கம் பக்கம் வீடுகளற்ற அந்த இடத்தில் இருந்து வீட்டுக்கு வந்து கூவி அழுதாள். அந்தக் குடியிருப்பிற்கும்



தெரியாமல் மூடி மறைத்தாள். தாயார் சுதாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று இரகசியமாக சிகிச்சை அளித்தாள். சிறிது காலம் வைத்தியசாலையில் ரெஸ்ட் எடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தாள். உண்மையை மூடி மறைத்து நெஞ்சு வருத்தம் என்று பொய் கூறி சமாளித்துவிட்டனர். தாயார் கனகம்மாவும் சேர்ந்துதான் மானத்தைக் காப்பாற்றினார். சுதாவைப் பற்றி யாருமே சந்தேகப்படமாட்டார்கள். அவ்வளவு நம்பிக்கைக்குரியவள் சுதா. அதனால் சுதாவில் சிறிதளவு அவமானங்களும் ஏற்படவில்லை.

இன்று ஒரு மாதம் கடந்துவிட்டது. அவளின் மனவேதனை இருக்கத்தான் செய்தது. ஆனால் சுதா எப்படியோ பாடசாலைக்குப் போவாள், வருவாள். முன்னைய கலகலப்பு இல்லாவிட்டாலும் சமாளித்துக் கொள்வாள். அதே பாணியில் பிள்ளைகளுடன் நடந்து கொள்வாள். அன்று தான் அவளுக்கு அந்தச் செய்தி எட்டியது.

யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்விற்கு வன்னியில் இருந்து சென்ற வாகனம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. ஒருவர் பலி. பலர் படுகாயம். அந்தச் செய்தியுடன் இறந்தவரின் புகைப்படமும் பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது. அந்தப் படத்தைப் பார்த்து சுதா திடுக்கிட்டே விட்டாள். அவன்தான். அவனேதான் நிர்மலமான என் வாழ்வை சீரழித்தவன். அவன் இன்று விபத்தில் மரணமடைந்துள்ளான்.

ஏதோ யோசனையில் அதே பத்திரிகையில் ஒரு மூலையைப் பார்த்தாள். அதில் வெளியாகி இருந்த அன்றைய பொன் மொழியைக் கண்டாள்.

*"அரசன் அன்று கொல்வான்;*
*தெய்வம் நின்று கொல்லும்."*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# அயலாரை மேன்மையுடன் நடத்துவோம்!

கட்டுப்பாடான பவித்திரமான நிலையிலும், உற்சாகமற்ற நிலையிலும், குறைந்த அளவே மகிழ்ச்சி காணப்படும். நற்பண்புகளை கடைப்பிடிக்க, அதிகமான கட்டுப்பாட்டுடன் கூடிய சோகமயமான வாழ்க்கை முறைதான் தேவைப்படும் என்று பழங்காலத்து பெரியவர்கள் கூறுவதுண்டு. துன்மார்க்கமாக இருந்தால், எவ்விதமான சந்தோஷமும் கிடைக்கப்பெறும் என்று இவர் யூகிக்க முடியும். நமக்கு கிடைத்திருக்கின்ற தகவல்களுக்கு மேலாக எதுவும் பெற முடியாது. இதை அப்படியே திருப்பிப் பார்ப்போமே! நேர்மையாக உள்ள இருதயங்களிலிருந்துதான், மகிழ்ச்சியும் ஆனந்தமும் மலர்கின்றது. நெறி தவறிய வாழ்க்கையானது, நம்ப முடியாத அளவில், துன்பங்களும் துயரங்களும் நிறைந்த ஒரு சோகமான வாழ்க்கையாகத்தான் அமையும். மனச்சோர்வு ஏற்படும் நிலையில் மனித நற்பண்புகள் குறைந்த அளவில்தான் வேலை செய்யும். இவைதான் வாழ்க்கையின் மகிழ்ச்சியான பக்கமாயும் அமையும்.

ஒருவர், தன்னைச் சுற்றியுள்ளவர்களை கீழ்க்குறிப்பிடும் நற்பண்புகளான நியாயத்தன்மை, விசுவாசம் எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் நல்ல மனம், பாரபட்சமின்மை, நேர்மை, அன்பு, பரிவுள்ள தன்மை, இரக்கம், சுய கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை, மன்னிக்கின்ற மனம், உதார குணம், நம்பிக்கை, மரியாதை, அமைதியான மனம், பெருந்தன்மை, வியந்து போற்றும் தன்மை, நட்புடன் உறவாடும் பண்பு, உள்ளார்ந்த அன்பு ஆகியவைகளைக் கொண்டு மிகுந்த மேன்மையுடன் நடத்த வேண்டும்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

# பெண்மையின் தனித்துமான தியாகம் அதுவே ஆண்மையின் மோகம்

"என்னைப் பற்றி நீ என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறாய்?"

நூதனாவைத் தழுவியபடி கிடந்த பதுமன் அவள் கழுத்துக்குள் உதடுகளை அசைத்துக் கேட்டான்.

அவள் பதில் எதுவும் சொல்லாமல் இவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

பதுமன் சிறிது நேரம் காத்திருந்த பிறகு முகத்தை



அவள் கன்னத்திற்கு உயர்த்தினான். "சொல்லேன்" என்றான்.

"என்ன சொல்வது?" என்றாள் நூதனா குழப்பத்தோடு.

"என்னைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயம் எதுவோ அதை ஒளிக்காமல் சொல்!"

## தருவது முழடில்யன்

அவள் மேலும் குழம்பியவளாக, "என்ன இது கேள்வி" என்றாள்.

பதுமன் தலையைச் சற்று நிமிர்த்தி, குழம்பிக் கிடந்த அவள் கண்களைப் பார்த்தான். பிறகு சோர்வடைந்தவனாக மல்லாந்து படுத்துக் கூரையை வெறித்தான்.

"நான் சுயநலக்காரனா? என்னுடைய வசதியையும் சந்தோஷத்தையும்தான் கருதுகிறேனா? ஆணாகிய என் கஷ்ட நஷ்டங்கள் சார்ந்ததுதான் நம்முடைய வாழ்க்கை..... அதாவது நம் இருவருடைய வாழ்க்கையும், எனக்காக உன்னைப் பூச்சியமாக்கிக் கொள்வதிலேதான் என் திருப்தியும் சந்தோஷமும்.... அதற்காக ஒவ்வொரு விஷயத்திலும் உன்னை மட்டம் தட்டிக் கொண்டிருக்கப் பிரயத்தனமெடுக்கிறேன், என்னை முதன்மைப்படுத்தியே எல்லாவற்றையும் சிந்திக்கிறேன்..... இது குறித்து நீ உனக்குள் சிரித்துக் கொள்கிறாயா? அல்லது எரிச்சலை மறைத்துக் கொள்கிறாயா? நீ என்மீது அன்பாயிருப்பது எனக்காக மட்டும்தானா அல்லது இந்த சமூகத்திற்குப் பயந்தா?"

நூதனா திரும்பி அவனைத் தன்னோடு இழுத்தணைத்துக் கொண்டாள்.

"அன்பு பயத்தில் வருவதில்லை, பேசாமல் படுங்கள்" என்றாள்.

"இல்லை, எனக்குப் புரிகிறது. எந்த மனித உயிருக்கும் சுதந்திர உணர்வு மிக முக்கியமானது. ஆனால் உன் சுதந்திரத்தை எனக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு எப்படி இயல்பாக இருக்க முடிகிறது? உன் மனதுக்குள் பாயும் காட்டாறுகளையும் நெருப்பாறுகளையும் எனக்குக் காட்டாமல்தானே வாழ்ந்து வருகிறாய்....."

"ஏன் அப்படி எல்லாவற்றையும் காட்டிக் கொண்டிருக்க வேண்டும்? அப்படி வாழ முடியாது. எல்லோர் மனதிலும் பிறருக்குக் காட்டாமல் வைத்திருக்கும் ஒரு மூலை இருந்துதான் தீரும். என் மனதிலும் இருக்கிறதுதான். ஆனால் உங்களைப் பற்றி இழிவாகவோ எரிச்சலாகவோ அது இல்லை. இந்த சமூகத்தின் நியதிகள் மீதுள்ள கோபமாகத்தான் இருக்கிறது. அந்த நியதிகளாலேயே உருவாக்கப்பட்ட நீங்கள், அதிலிருந்து மீள முடியாமல், ஆனால் அதன் தவறை உணர்ந்து திண்டாடுவதுகூட இன்றைய நிலையில் பெரிய விஷயம். விரைவில் இந்த நிலைமை மாறிவிடும். இப்போது நாங்கள் ஒருவரையொருவர் வதைத்துக் கொள்ள விரும்பாதவர்களாயிருக்கிறோம் என்பதே போதும்....."

"நீ முழுவதுமாய் உன்னை வெளிப்படுத்திக் கொள்ளவே தயங்குகிறாய். அதுகூட என்னை இன்னுமின்னும் சர்வாதிகாரியாகத்தான் எனக்கு உணர்த்துகிறது."

"இப்போதும் உங்களை மையப்படுத்தியே சிந்திக்கிறீர்கள். உங்கள் கேள்விகளையே எங்கும் பார்க்கிறீர்கள். அதுதான் உங்களை வேதனைப்படுத்துகிறது."

"உண்மைதான் என் அகந்தைதான் இப்படியெல்லாம் யோசிக்கத் தூண்டுகிறது. எனக்குத் தெரியாத ஒரு மூலை உன்னிடமிருக்குமென்பதை தாங்கிக் கொள்ள முடியாமல் ஓர் அதிகாரியைப் போல உன்னைக் குடைகிறேன். எனக்குத் தெரியாத எதுவும் உன்னிடமிருந்து விடக் கூடாது என்று நான் துடிப்பது என்னிடமிருக்கும் அகங்காரத்தின் விளைவுதான்."

"அகங்காரமிருந்தால் வாழ்க்கையின் சின்னச் சின்ன அடிகள்கூட மிகப் பெரிதாக வலிக்கும்."

பதுமன் அவளை வியப்புடன் பார்த்தான். "உண்மைதான்" என்று சொல்லிவிட்டு சற்றுநேரம் அமைதியாகப் படுத்திருந்தான்.

"என்ன சிரிக்கிறீர்கள்?" நூதனா அவன் மார்பில் தலையைச் சாய்த்தபடி கேட்டாள்.

"ஒரு கவிதை ஞாபகம் வந்தது. வரிகள் ஞாபகமில்லை. விஷயம் இதுதான். ஆயிரம் முறைக்கு மேல் ஆடை களைந்து ஊடாட இடம் தந்தவளுக்கும் மனக் கதவை முழுக்கத் திறந்து விட முடியவில்லை."

"அப்படித் திறந்தால் நரகம்தான். அதையெல்லாம் எதிர்பார்க்காமல் இருப்பதுதான் நல்லது."

"அப்படியானால் முழுமையான மனப் பகிர்வே கிடையாதா?"

"அப்படித்தான். எல்லா உறவுகளுக்கும் அதனதன் எல்லைகள் உண்டு. அதற்குமேல் பகிர்ந்து விட முடியாது. அதற்கு ஆசைப்படவும் கூடாது. இன்னும் சொல்வதென்றால், என்னையே எனக்குப் பல சமயங்களில் புரிந்துகொள்ள முடிவதில்லை என்பதுதானே உண்மை!" என்று சொல்லியபடி பதுமனை இறுக அணைத்துக் கொண்டாள் நூதனா.

அவன் காதுக்கருகில் ரகசியக் குரலில் சொன்னாள், "இந்தக் கணம் நான் மிகவும் சந்தோஷத்துடன் இருக்கிறேன் என்பதும் உண்மை. இது எனக்குப் போதும்."

"சரி, இதற்குப் பிறகு....." என்று எதையோ சொல்ல வந்தவனின் உதடுகளை மூடினாள். "மனசைக் கூறு போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தால் வலிதான் மிஞ்சும். சந்தோஷம் தருகிற பகிர்ந்து கொள்ளல்களே நமக்கும் போதும் என்றிருந்து விட்டால் சங்கடமெதுவுமில்லை" என்று அவன் உதடுகளுக்குள் சொன்னாள்.

அவன் வளைந்த கரங்களுக்குள் அவள் துவண்டு அடங்கிக் கிடந்தாள். அவன் எண்ணங்களை மூழ்கடித்து விடும் அவளது உடல் வாசனை அவனுக்குள் நிறைந்தது.

நூதனா குழந்தையைப் போல அரற்றத் தொடங்கினாள். எல்லா அவமதிப்புகளையும் தாங்கிக் கொண்டு ஆனந்தம் தருவதற்கும் ஆனந்தமடைவதற்கும் தயாராகி விடும் அவளது எளிமை அவன் குற்றவுணர்வை மேலும் அதிகப்படுத்தியது.

ஆனால், எல்லாவற்றையும் மறக்கடித்து அவனுள் மகிழ்வாய் நிறைந்துவிட அவளால் முடிகிறது.

இவ்வுலகில் கிடைக்கக் கூடிய இன்பங்கள் எல்லாவற்றிலும்..... ஏன் தேவருலகத்தில் கிடைக்கக் கூடிய இன்பங்கள் என்று சொல்லப்படுவனவற்றிலும் இவள் தரும் இன்பத்துக்கு இணையாகச் சொல்ல எதுவுமிருக்காது என்று நினைத்தான் பதுமன். மலர்க் குவியலாய் இழைத்த அவள் மேனியை இறுக்கும் போது பதுமனுக்கு துன்பங்கள் சஞ்சலங்கள் எதுவும் நினைவிலில்லை.

***விரிதிரைப் பெருங்கடல் வளைஇய***
***உலகமும், அரிதுபெறு சிறப்பின்***
***புத்தேள் நாடும், இரண்டும் தூக்கின்***
***சீர் சாலாவே; பூப்போல் உண்கண்***
***பொன்போல் மேனி, மாண்வரி***
***அல்குல் குறுமகள் தோள் மாறுபடூஉம்***
***வைகலொடு எமக்கே.***

(குறுந்தொகை: 101)

## சிந்தியா பதில்கள்

**✉ எஸ்.எம்.எஸ். மூலமான வாக்கெடுப்பில் மிகப் பெரும்பான்மையோர் இ.தொ.கா., மு.கா. ஆகியன ரணிலைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்களே?**

-அ.வாசன், கொழும்பு - 06.

அதுதான் குழப்பமாக இருக்கிறது. 1977க்குப் பின்னர் இந்த நாட்டில் பெரும்பான்மையினர் தெரிவு செய்து அமர்த்தும் ஆட்சிகள் எல்லாவற்றையுமே தமிழர்களாகிய நாம் எதிர்த்துத்தான் வந்திருக்கிறோம். பெரும்பான்மையினரின் ஆட்சியாளர்கள் சிறுபான்மையினருக்கு நீதியாக நடந்து கொள்வதில்லை என்பதே நம்முடைய குற்றச்சாட்டாக இருந்து வருகிறது. இப்போது இந்தப் பெரும்பான்மையினரின் தெரிவு எப்படி நமக்குச் சாதகமாகும்.... புரியவில்லையே.... (கூட்டமைப்பினர்தான் பாக்கியவான்கள்! வன்னி என்ன சொல்கிறது என்று தெரியாமல் வாயே திறப்பதில்லை என்றிருந்துவிட்டால் எந்தப் பிரச்சினையுமில்லை.)

**✉ காதலிக்குப் பரிசாக நகையா, சேலையா, ரோஜா மலரா, முத்தமா எதைக் கொடுப்பது சிறப்பு?**

-ஆர்.கோபிநாத், கம்பளை.

எல்லாவற்றையும் விட முக்கியமாய் முதலில் உங்கள் இதயத்தைக் கொடுக்க வேண்டும். ஆனால் துணிச்சலும் கிளுகிளுப்பும் அற்ற இந்தக் கஞ்சப்பயலின் இதயத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வதாம் என்று அவர் விரக்திப்பட்டுப் போய்விட்டால் அதைத் தாங்கும் மனோநிலையும் இருக்க வேண்டும்.

**✉ அ...ஆ...பார்த்தீர்களா?**

-ஆ.அசனார், திருகோணமலை.

ஒ.....ஓ....! அஜித், விஜயை வைத்துப் படம் எடுத்தபோதெல்லாம் தன்னையே அதிகம் நம்பிய எஸ்.ஜே.சூர்யா, தன்னை வைத்து எடுக்கும்போது செக்ஸை நம்புவது ஏன் என்று தெரியவில்லை. ஆனாலும், குஷியிலும் சரி, இந்தப் படத்திலும் சரி, படத்தின் கதையை முதலிலேயே சொல்லிவிட்டு 'எனது திரைக் கதை அமைப்பே உங்களைச் சுவாரஸ்யப் படுத்தும்' என்ற நம்பிக்கையைக் காட்டியிருப்பதைப் பாராட்டலாம்.

**✉ வீட்டுக்கு வீடு வாசற்படி என்று ஏன் சொல்லுகிறார்கள்?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

இருப்பதால்!

**✉ நடிகைகளின் இடுப்பு, உதடு, கண், மூக்கு, கன்னம் என்றெல்லாம் வர்ணித்துக் கேள்விகள் கேட்பது எதனால்?**

-முஹமட் மஜிஸ், மீராவோடை.

அவற்றைப் பார்த்ததில் நமக்கு ஏற்பட்ட குறுகுறுப்பு மற்றவர்களுக்கும் ஏற்பட்டதுதானா என்று அறிந்து ஆறுதல்பட்டுக் கொள்வதற்குத் தான்.

**✉ மண்ணெண்ணையார் மீது அவரது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறதாமே?**

-கே.விஜயேந்திரன், யாழ்ப்பாணம்.

பாயிலே கிடத்திக் கணக்குக் கேட்ட நடவடிக்கையிலிருந்தே உச்சி ஓடி வந்தவருக்கு.... இந்த ஒழுங்கு கிழங்கெல்லாம் சும்மா ஜுஜுபி!

**✉ இன்று, விடுதலைக்குத் தடையாக உள்ள ஒருசிலர் கொல்லப்படுவது பற்றிப் பெரிதாகப் பேசுகிறீர்களே.... நாம் எத்தனை பேரை இழந்தோம்; குண்டு வீச்சுகளுக்குள்ளும், குந்த ஒரு இடமில்லாமலும் உயிரைப் பிடித்துக் கொண்டு அலைந்தோமே.... இத்தனை அவலங்களும் அழிவுகளும் நம்மீது ஏவப்பட்டபோது நீங்கள் எங்கிருக்கிறீர்கள்? பெரும்பான்மைத் தமிழ் மக்களின் தளை நீக்கற் பயணத்தில் மிகச் சிறுபான்மையான ஒரு சில தமிழர் குறுக்கே நிற்பதை எந்த வகையில் பொறுத்துக்கொள்ள முடியும்?**

-எம்.விக்கி, கொழும்பு - 05.

முதலாவது, சுய இரக்கமும் பிறர் துன்பம் உணராத தன்முனைப்பான வேதனைப் புலம்பல்களும் மனிதநேயத்தின் பாற்பட்டவையல்ல; அவை பாசிஸ மனநிலையின் துவக்கம்.

இரண்டாவது, விரும்பியபடி கொலை செய்வதற்கும் விடுதலையின் பேரால் அச்சுறுத்தி வாய் மூட வைப்பதற்கும் நமது துன்பங்களைச் சாட்டாக வைத்திருப்பது எதேச்சாதிகாரத்தின் வழிமுறை.

மூன்றாவது, சிங்கள இனவாதிகளும் சிறுபான்மையினரான தமிழர்கள் அவர்களது நலன்களுக்குத் தடையாக நிற்பதாகவே நினைக்கிறார்கள்.



நான்காவது, நல்ல நோக்கம் எல்லாவற்றையும் நியாயப்படுத்தும் என்றே கருதிக் கொண்டிருக்கிறோம். அல்லது அப்படி நம்ப விரும்புகிறோம். ஆனால் வழி தூய்மையானதாக அல்லாதபோது சென்றடையும் இலக்கும் தூய்மையானதாக இல்லாமல் போய்விடுகிறது என்பதே வரலாற்றின் படிப்பினையாக உள்ளது.

ஐந்தாவது,...:வேண்டாம் போதும்!

**✉ தொலைக்காட்சித் தொடர்களில் நீங்கள் ரசிப்பது?**

-டேவிட் மொறின், கொட்டகலை.

ரசிப்பதை விட ஆச்சரியம்தான் முழுக்க முழுக்க! வேலியால் போகும் ஓணானைப் பிடித்து மடிக்குள் கட்டிக் கொண்டு, குடையுது குடையுது என்று கதையின் நாயகியர் பிழியப் பிழிய அரற்றிக் கொண்டிருப்பதை 500, 600 எபிசோட்களாக எப்படி எடுத்துத் தள்ளுகிறார்கள்!

**✉ வெற்றியடைவதற்குத் தேவை திறமையா, முயற்சியா?**

- கோபி பிரியா, வெலிமடை.

இரண்டும் இல்லை, கூட்டுத்தான் என்கிறார் மஹிந்த.

**✉ நாம் காணும் கனவுகளைப் படமாக்கும் கருவி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டால்?**

-எம்.வசீம், கண்டி.

ஐயையோ.... அடுத்த கேள்விக்கு வாருங்கள்.

**✉ ஆண்கள் கனவில் நடிகைகள் வருவது போல, பெண்கள் கனவிலும் நடிகர்கள் வருவார்களா?**

-வி.கோபாலன், தெஹிவளை.

கனவுகளைப் படம் பிடிக்கும் கருவிக்கு எதிர்ப்பு அங்கிருந்தும்தான்!

**✉ நீங்கள் பதில் சொல்வதற்குத் தேர்ந்தெடுக்க விரும்புவது சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகளையா, அரசியல் கேள்விகளையா, அறிவு பூர்வமான கேள்விகளையா?**

--மனோ கோபாலன், ஹப்புத்தளை.

ஏதோ நம்மால் முடிந்த எதையாவது சொல்லி ஒப்பேற்றிவிடக் கூடிய கேள்விகளை!

**✉ தெருத் தெருவாகவும் குப்பை மேடுகளிலும் தமிழர்கள் நாளாந்தம் சுட்டும் வெட்டியும் போடப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே.... தமிழர்களின் உயிர் வாழ்வில்**

## சிந்தியா பதில்கள்

**அக்கறை கொண்ட புத்தி ஜீவிகளும் கல்விமான்களும்(?) சிறு முணுமுணுப்புக்கூட காட்டாமல் இருக்கிறார்களே, எப்படி?**

-எம்.முருகநேசன், வவுனியா.

அரபுபடையினரும், விடுதலைக்கு எதிரான தமிழ்க் குழுக்களும் (?) தான் இந்தத் தமிழ் உயிரழிப்பைச் செய்து வருகின்றன என்று ஆவேசமாகக் கண்டனம் எழுவதற்குப் பொங்கு தமிழ்க்காரர்கள் ஒரு சிறு குறிப்பைத்தன்னும் தருகிறார்களில்லையே என்ற கவலையுடன் ஒரு சிலரும்; எதிரிகளின் கொலைகளிலிருந்து தமிழினத்தைப் பாதுகாப்பதற்காகவே தளை நீக்கல் என்ற வகையில் பல தமிழர்களை இல்லாமல் ஆக்க வேண்டியிருக்கிறது என்று மனச்சமாதானம் தர வேண்டிய பேராசிரியர்களும் மௌனமாயிருக்கிறார்களே என்ற திகைப்பில் வேறு சிலரும்; நம்மவர்கள் செய்யும் கொலைகளை அமுக்கி மேல் நின்று சன்னதம் கொண்டு கத்துவதற்கு எதிரி இப்போது ஒரு பிரபல கொலையைச் செய்து தொலைக்கமாட்டானா என்ற ஏக்கக் காத்திருப்போடு இன்னும் சிலரும்; "முப்படைகளிலும் வலிமை பெற்றுவிட்டோம். நம் கொல்லும் திறன் கண்டு குவலயமே மூக்கில் விரல் வைக்கிறது. ஏக தலைவனின் படை நடத்தலில் வீரத் தமிழினத்திற்கான விடுதலை இதோ வருகிறது. இந்த சமயத்தில் குறுக்கே, 'மாற்றுக் கருத்து, மக்களைக் கொல்லாப் பாதை' என்று புலம்பிக் கொண்டு வருபவர்களையெல்லாம் போட்டுத் தள்ளாவிட்டால் ஏது விடுதலை? சுத்தமான இனமே சுதந்திரக் கனியைச் சுவைக்கும் உரிமை கொண்டது. நம் வீரர்கள் விடுதலைக்காக சமூகத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்' என்ற புல்லரிப்பில் மிகப் பலருமாக...வீறுகொண்டு நடக்கிறது நம் விடுதலைப் பயணம்!




இந்திய அணியின் முன்னாள் தலைவர்களுள் ஒருவரான கபில்தேவ் 1982 - 83 களில் பாகிஸ்தான் அணிக்கு எதிராகக் கராச்சியில் நடந்த டெஸ்ட் போட்டி ஒன்றின் போது முப்பது பந்து வீச்சுகளில் அரைச் சதத்தைப் பெற்றுள்ளார். இந்த இன்னிங்ஸின் போது இவர் 73 ஓட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இருபத்தியோராவது வயதில் பெற்றதுடன் நூறு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். இதே நேரம் இரண்டாயிரம் ஓட்டங்களையும் இருநூறு விக்கெட்டு களையும் பெற்ற உலகின் இள வயது கிரிக்கெட் வீரராகவும் இவர் சாதனை படைத்துள்ளார்.

1982-83ஆம் வருடங்களின் போது இந்திய



நேதன் எஸ்டல்

இந்தியாவில் மட்டுமல்லாது, டெஸ்ட் போட்டி வரலாற்றிலேயே இதுவரை தோன்றியுள்ள சகல துறை ஆட்டக்காரராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கபில்தேவ் 1959ஆம் வருடம் ஜனவரி மாதம் 6ஆம் திகதி சண்டி காரில் பிறந்துள்ளார். 1978ஆம் வருடம் பாகிஸ்தான் அணிக்கு எதிரான தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்து கொண்ட கபில்தேவ், டெஸ்ட் போட்டிகளில் ஆயிரம் ஓட்டங்களை தனது

அணியின் தலைமைப் பொறுப்பு கபில் தேவிடம் ஒப் படைக்கப்பட்டது.

1978ஆம் வருடம் முதல் 1993 - 94 வரை 131 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள இவர் எட்டுச் சதங்கள், 27 அரைச் சதங்கள் அடங்கலாக 5,248 (சராசரி 31.05) ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டுள்ளார். இவர் பெற்ற ஆகக் கூடிய ஓட்ட எண் ணிக்கை 163ஆகும். இதே நேரம் 64 'கெச்'களையும் இவர் பெற்றுள்ளார்.

வேகப் பந்து வீச்சாளரான இவர் 434 (சராசரி 29.64) விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். இவரது சிறந்த பந்து வீச்சாகக் கருதப்படுவது 83 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளாகும். கபில்தேவ் 23 தடவைகள் 5 விக்கெட் அல்லது அதற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

2002ஆம் வருடம் நியூசிலாந்து அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் நியூசிலாந்து கிரை ஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின் போது நியூசிலாந்து அணியைச் சேர்ந்த நேதன் எஸ்டல், டெஸ்ட் போட்டி வரலாற்றில் பிரவேசித்து இரட்டை சதங்களைப் பெற்றுக் கொண்டார்.

இப் போட்டியின் போது அவர் 222 பந்து வீச்சுக்களில் 222 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இதில் பதினொரு சிக்ஸர்களும், 28 பவுண்டரிகளும் அடங்கும். நேதன் எஸ்டல் இப் போட்டியில் 153 பந்துகளில் தனது 200ஆவது ஓட்டத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

இதே நேரம் அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த விக்டர் டிரம்பர், 1902-03ஆம் வருடங்களில் தென்னா பிரிக்க அணிக்கு எதிராக ஜொஹென்னஸ்பர்க்கில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின் போது 22 நிமிடங்களில் 50 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

டொனல்ட் பிரட்மனுக்கு முன்னர் அவுஸ்திரேலிய அணியில் இடம் பெற்றிருந்த திறமை வாய்ந்த வலது கை துடுப்பாட்ட வீரரான டிரம்பர், 1877ஆம் வருடம் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பிறந்தவராவார். 1899ஆம் வருடம் முதல் 1911-12ஆம் வருடங்கள் வரை 48 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இவர், எட்டுச் சதங்கள், 13 அரைச் சதங்கள் அடங்கலாக 3,163 (சராசரி 39.04) ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

1977-78களில் பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் லாகூரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின் போது பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த முதாஸர் நஸார் 557 நிமிடங்களில் சத மொன்றைப் பெற்றுள்ளார். இந்த இன்னிங்ஸில் இவர் 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

இவர் பாகிஸ்தான் அணி சார்பில் 76 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 4.114 (சராசரி 38.09) ஓட்டங்களைப் பெற்றவராவார். இதில் 10 சதங்களும், 17 அரைச் சதங்களும் அடங்கும். இவர் பெற்ற ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை 231 ஆகும். பந்து வீச்சில் 66 (சராசரி 38.36) விக்கெட்டுகளை இவர் கைப்பற்றியுள்ளார்.

**- மைந்தன்**

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN

4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 2, கூட்டெண் - 2

2, 11, 20, 29 போன்ற திகதிகளில் பிறந்து, இவர் களது பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வந்தால் முழுமையான சந்திர ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். இவர்கள் பார்ப்பதற்கு அழகாகவும், குறைந்த உயரமுடையவராகவும் இருப்பர். எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் இவர்கள் பிடிவாதக்காரர்களே. சந்திரன் எவ்வாறு 15 நாட்கள் தேய்ந்து, 15 நாட்கள் வளர்ந்து வருகின்றதோ, அதைப் போன்று இவர்களது மனம் குழப்பமடைந்து பின் தெளிவடையும்.

இவர்களது திட்டங்கள் மாறிக் கொண்டே இருக்கும். பெண்களாக இருந்தால் ஆண்களால் குழப்பங்களும், ஆண்களாக இருந்தால் பெண்களால் குழப்பங்களும் உண்டாகும். இளகிய மனப்பான்மை கொண்ட இவர்களைப் பிடிவாத குணத்தார், வம்புக்காரர் என்று கூறிவிடுவர். இதனால் விட்டுக்கொடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சிலர் உத்தியோகமும், சிலர் சொந்தத் தொழிலும் செய்கின்றனர். அழகான பொருட்களை வியாபாரம் செய்வதாலும், பேரம் பேசுவதாலும் பொருளீட்டுவர்.

இவர்களுடைய பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக இயற்கையாகவே பெயர் அமைந்தி ருந்தால் செல்வம், செல்வாக்கு பெற்றவராகவே வாழ்ந்து கொண்டிருப்பர். அவ்வாறு பெயர் அமையாத மனிதர்கள், எப்பொழுதும் குழம்பிக் கொண்டே இருப்பர். அழகான இயற்கைக் காட்சிகள் இவர்கள் மனதைக் கவரும். தூரதேசப் பயணங்கள் செய்வதிலும், மலைப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்ப்பதிலும், மனம் நாட்டங்கொள்ளும். சிற்றின்ப விஷயங்களில் நிதானமாக நடந்து கொள்வது நல்லது. எதிலும் முன்யோசனை செய்யாது காரியங்கள் செய்து விடுவதால் தோல்வியுற்ற பின் மனவேதனை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால், வெற்றிகரமான வாழ்க்கை அமையும். இவர்கள் எதையும் பகிரங்கமாக வெளியிடாது மனதில் வைத்துக் கொண்டே புழுங்குவர். இவர்களில் சிலர் வழக்கறிஞர்களாகவும், இஞ்சினியர் களாகவும், டாக்டர்களாகவும், சிறந்த பேச்சாளர் களாகவும் இருக்கின்றனர்.

ஏதாவது ஒரு பழக்கத்தைப் பழகிவிட்டால் விட முடியவில்லையே என வருந்துவர். இதனால் மனக்கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும். எந்தக் கெட்ட பழக்கங்களையும் ஆரம்பத்திலிருந்தே பழகாதிருத்தல் நலம். இவர்கள் மேலே குறிப்பிட்டபடி பெயரை அமைத்துக் கொண்டால், வாழ்க்கை சிறப்படையும்.

### தொழில்

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு ஆடம்பரப் பொருள், அழகு சாதனச் சாமான்கள், சாப்பாட்டுப் பொருட்கள், விவசாயம், பச்சை நிறப் பொருட்கள் அனைத்தும் இலாபத்தைக் கொடுக்கும். இவர்கள் செய்யும் வியாபார விலாசத்தைத் தன் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்ளுவது முக்கியம்.

### நோய்

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு உடலுறவு சம்பந்தமான நோய், மனவியாதி, தோல் சம்பந்தமான வியாதிகள், வாயுக் கோளாறு, உஷ்ணக் கட்டிகள் வரும். பெயர் நன்றாக அமைந்துவிட்டால் நோய்கள் குறையும்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு முழுமையான சந்திர ஆதிக்கம் வருவதால், கேது ஆதிக்கமான 34, 43 போன்ற எண்களிலும், சுக்கிர ஆதிக்கமான 15, 24, 33, 42, 60, 69 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ள வேண்டும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் : 7, 6.
யோகமான திகதிகள் : 7, 16, 25; 6, 15, 24.
யோகமான நிறம் : பச்சை, வெளிர் நீலம்.
யோகமான மோதிரக்கல் : வைடூரியம், முத்து.
ஆகாத நிறம் : சிவப்பு.
ஆகாத திகதிகள் : 9, 18, 27.

அடுத்த வாரம் பிறப்பெண் 2, கூட்டெண் 3 பற்றிப் பார்ப்போம்

## அரசியல் படுகொலையும்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்கு வெளிநாடுகளுடன் இருந்த நேரடித் தொடர்புகள் காரணமாகவும் லெபனானிய மக்களின் எழுச்சி காரணமாகவும் சிரியா சர்வதேச நிர்ப்பந்தங்களின் பின்னால் லெபனானிலிருந்து படைகளைக் குறைக்க வேண்டி ஏற்பட்டதுடன் தற்போது ஐ.நா. விசாரணைகளில் லெபனானின் உளவுப் பிரிவின் அதிகாரிகள் விசாரணைக் குள்ளாகி இருக்கிறார்கள். சிரியா, அமெரிக்கா, ஐ.நா., ஐரோப்பிய சமூகம் போன்றவற்றினால் கடுமையான எச்சரிக்கைகளுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாகி யிருந்தது.

அரசாங்கங்களின் அரசியலில் படுகொலைகள் ஒரு அம்சமாக இருந்தாலும், தீவிரவாத இயக்கங்களின் வளர்ச்சியில் அது முக்கியத்துவம் அடைந்தது. பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் ஆரம்ப காலங்களில் அரசியல் படுகொலைகள் சர்வதேச கவனத்தை ஈர்க்கவும் பெரும் எதிரியை நேரடியாக எதிர்கொள்ள முடியாத இயலாமையிலும் நடத்தப்பட்டன. பலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்றான 'கறுப்பு செப்டம்பர்' இயக்கம் மியுனிச் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைக் கொன்றது இந்த வகையான படுகொலையே. இந்தப் படுகொலைகளும் எதிர்விளைவுகளையே பலஸ்தீனர்களுக்குக் கொண்டு வந்து சேர்த்தன. பின்னர், சர்வதேச அரங்கில் பலஸ்தீனியர்களின் நிலை தெரியப்பட்டு பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்த பின்னர் இந்தப் படுகொலைகள் ஓய்ந்திருந்தன. பின்னர் நடைபெற்ற கொலைகள் அதிதீவிர இஸ்லாமிய வாத இயக்கங்கள் நடத்தியவைதான். பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிந்திய படுகொலை சில வருடங்களுக்கு முன்னால் இஸ்ரேலிய அமைச்சர் ஒருவரைக் கொன்றதுதான்.

அல் அக்சா என்ற தீவிரவாத இயக்கத்தின் பெயரில் பயங்கரவாத நடவடிக்கைகள் நடைபெற்ற போதும், அரசியல் அழுத்தம் காரணமாக அவர்களையும் கட்டுக்குள் கொண்டு வர வேண்டிய கட்டாயம் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அரசுக்கு உள்ளது.

எனவே படுகொலை என்பது நவீன ஜனநாயக அரசியலில் வேண்டத்தகாத, ஆனால் தவிர்க்க முடியாத ஒரு பக்க விளைவுதான். இருந்தாலும் தனிமனிதர்களைக் கொல்வதன் மூலம் இலட்சியங்களை அடையலாம் என்ற கனவுடன் இருப்பவர்களுக்கு வரலாறுகள் தரும் பாடம், எதிர்பார்த்த விளைவுகள் எப்போதும் கிடைப்பதில்லை என்பதுதான்.

அலண்டேயைக் கொன்ற பினோச்சே வீட்டுக்காவலில், லுமும்பாவைக் கொன்ற மொபுட்டு நாட்டை விட்டே தப்பியோடி இறந்தது, சுகர்ணோவைக் கொன்ற சுகார்ட்டோ பதவியை இழக்க நேரிட்டது என, இந்தக் கொலைகள் மூலமாக அதிகாரத்தில் அமர்ந்து அரசோச்சியவர்கள் கடைசியில் தவிர்க்க முடியாத மக்கள் எழுச்சிகளில் அடிபட்டுப் போனவர்கள்தான். அரபாத்தின் மரணத்தின் பின்னால், அப்பாஸ் 'பயங்கர வாதத்தினால் நாங்கள் எதையும் சாதிக்கவில்லை' என்று ஒத்துக் கொள்ளும் அளவில் தான் நிலைமை இருக்கிறது.

ஆனால் புலிகளைப் பொறுத்தவரை அரசியல் படுகொலை என்பது புதிய பரிமாணம் ஒன்றைப் பெற்றது. புலிகளின் இயக்கத்தின் தோற்றமே அரசியல் படுகொலை நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றுதான். விடுதலையின் முதல் கட்டம் 'களை எடுப்பு' என்ற வகையில், தமிழ் மக்களுக்கு அநீதி விளைவித்த அரசுக்கு எதிரான போராட்டம் தொடங்க முன்பாகவே, தமிழ் மக்களுக்கு இடையில் உள்ள அரசாங்க ஆதரவாளர்களைப் படுகொலை செய்வதிலேயே புலிகள் அக்கறை காட்டினர். துரையப்பா கொலை முதல் பட்டியல் போட்டு பத்திரிகைக்கு அனுப்பி கொலை செய்த இயக்கம் அது. யாழ்ப்பாணத்தில் சிங்கள கட்சிகளின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் முதல் அவர்களைக் கொல்ல வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்த கூட்டணித் தலைவர்கள் வரைக்கும், மாற்று இயக்கத் தலைவர்கள் முதல் மற்ற நாட்டுத் தலைவர்கள் வரைக்கும் என, புலிகள் அந்தந்த நேரங்களில் கொண்டிருந்த அரசியல் போக்குக்கு முரண்பட்டவர்கள் எல்லாம் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் அந்தக் கொலைகளுக்கான தீர்ப்பை வழங்கும் 'வழுவா வரத்தைப்' பெற்ற மனுநீதி கண்ட சோழனாக தங்கள் தலைவரைக் கருதிக் கொண்ட இயக்கம் அது.

*நன்றி : 'தாயகம்'*

**உலக பதினொருவர் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையே 05.10.2005 நடைபெற்ற சூப்பர் தொடர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட முன்பு லாரா - ராவீட் - முரளிதரன் ஆகியோரைப் படத்தில் காணலாம். வெற்றி பெறுவோம் என்று கூறுவது தெரிகிறதல்லவா?**





**கிம்கிளிஸ்டர்ஸ் லக்சம்பர்க் டென்னிஸில் சாம்பியன் பட்டம் வென்றார். அவர் தன்னிடம் தோற்ற ஜெர்மனி வீராங்கனை அன்னலீனாவுடன் கைகுலுக்கும் போது கிளிக் செய்யப்பட்டது.**

# ஜோஹான் கூட்டன்பர்க் (1400 - 1468)

## உலகை வியக்க வைத்தவர்கள்

சென்றவாரத் தொடர்ச்சி

அவற்றுள் ஒரு வழக்கின் விளைவாக, இவர் தமது அச்சு எந்திரத்தை இழக்க நேரிட்டது. கூட்டன்பர்க் 1468ஆம் ஆண்டு மெயின்ஸ் நகரில் காலமானார்.


கூட்டன்பர்க்குக்குப் பிந்திய காலத்தில் சீனா, ஐரோப்பா இரண்டின் முன்னேற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, உலக வரலாற்றில் கூட்டன்பர்க்கின் சாதனை எத்துணை பாதிப்பை ஏற்படுத்தியது என்பது தெளிவாகும். கூட்டன்பர்க்கின் தோற்றத்திற்கு முன்புவரை சீனாவும், ஐரோப்பாவும் தொழில்நுட்பத் துறையில் சரி நிகராகவே முன்னேறியிருந்தன. ஆனால், நவீன அச்சுக் கலையைக் கூட்டன்பர்க் கண்டுபிடித்த பின்பு ஐரோப்பா மிகத் துரிதமாக முன்னேறியது. கூட்டன்பர்க் நவீன அச்சுக்கலையைக் கண்டுபிடித்த பின்பு நெடுங்காலம் வரையில் சீனாவில் பழைய அச்சுப்பாள அச்சுமுறையே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அதன் முன்னேற்றம் மிக மெதுவாகவே நடந்தது. சீனா இவ்வாறு பின் தங்கியதற்கு நவீன அச்சுக் கலையின் கண்டுபிடிப்பு ஒன்றை மட்டுமே காரணமாகக் கூற முடியாது. எனினும், அது ஒரு முக்கியக் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களில் மூவர் மட்டுமே கூட்டன்பர்க்குக்கு முந்திய 500 ஆண்டுகளில் வாழ்ந்தவர்கள் என்பதும், 67 பேர் அவருக்குப் பிந்தைய 500 ஆண்டுகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நவீன காலத்தில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்துவதில் கூட்டன்பர்க்கின் கண்டுபிடிப்பு மிகப் பெரிய பங்கினை - உயிரோட்டமான பங்கினை - வகித்திருக்கிறது என்பதை இது குறிக்கிறது.

அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் வாழ்ந்திராவிட்டாலும்கூட வரலாற்றில் அதே கால அளவின்போது தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் என்பது உறுதி. வேறு பல கண்டுபிடிப்புகள் குறித்தும் இதையே கூறலாம். ஆனால், கூட்டன்பர்க் தோன்றியிருக்காவிட்டால், நவீன அச்சு முறையின் கண்டுபிடிப்பு பல தலைமுறைகள் தாமதப்பட்டிருக்கும். பிற்கால வரலாற்றில் கூட்டன்பர்க்கின் கண்டுபிடிப்பினால் ஏற்பட்ட அளவிறந்த பாதிப்பினைக் கருதும்போது, இந்தப் பட்டியலில் உயர்ந்ததோர் இடத்தைப் பெறுவதற்கு அவர் முற்றிலும் தகுதியுடையவராவார்.



கூட்டன் பேர்க்கின் அச்சுக் கூடம்



**அடுத்த வாரம் எட்வர்டு ஜன்னர் வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

எல்லாரும் எலக்ஷன் பிஸியில காலில சக்கரத்தைக் கட்டிக் கொண்டு திரியேக்க, வடிவேல் சொல்லுமாப்போலை சொல்ல வேணுமெண்டால் ஐரோப்பிய ஒன்றியக்காரர் 'கிளம்பிட்டாங்கையா கிளம்பிட்டாங்கையா'. சும்மா கிளம்பினாப் பரவாயில்லையுங்கோ. அடிமடியிலேயே கையை வச்சுப் போட்டினம். இவ்வளவு நாளும் அது இதெண்டு சும்மா கதை விடுறாங்கள் எண்டுதானுங்கோ நானும் நினைச்சன், மற்றவையும் நினைச்சிச்சினம். கடைசியில பாத்தியளோ பென்னாம் பெரிய ஆப்பை சீவி அடிச்சுப் போட்டாங்களே. இப்ப என்ன செய்யிறது எண்டு தெரியாம எங்கட பெடியள் மண்டையைப் போட்டு சொறியிறதைப் பார்த்தால், இப்ப இருக்கிற முடியும் கொட்டிப்போயிடும் போல கிடக்கு. ஊருக்கு ஒரு எழுச்சி மாநாட்டையும் அவ்வப்போது ஒரு பொங்கு தமிழையும் நடத்தி, சர்வதேச சமூகம் தங்களை அங்கீகரிக்க வேணுமெண்டும், தங்களின்ர போராட்டம் சர்வதேசத்தின்ர கவனத்தை திருப்பியிருக்கெண்டும், எங்கட தமிழ்ச்சனத்துக்கு நல்ல நகம் வளர்த்த கரடியாப் பார்த்து விட்டுக் கொண்டிருந்திச்சினம். இப்பதானே தெரியுது, சர்வதேச சமூகம் இவையின்ர போராட்டத்தை என்ன விதமாக கவனத்தில எடுத்து தங்கட பார்வையை திருப்பியிருக்கெண்டு. அடி கழுவுற கைக்கு அடுத்த கையை நல்லா இழுத்து பளார் எண்டு கன்னத்தில அப்பிவிட்ட மாதிரியெல்லோ ஐரோப்பிய ஒன்றியம் அப்பிவிட்டிருக்குது. "நாம் உங்கட போராட்டத்தைப் பார்த்துக்கொண்டு தான் இருக்குறம். நீங்கள் பயங்கரவாதிகள், மனித உரிமையையும், சிறுவர் உரிமையையும், கருத்துச் சுதந்திரத்தையும் மதித்து நடக்கிறியளில்லை. அதுபோக படுகொலைகளைச் செய்து கொண்டு பேச்சுவார்த்தை மேசையில நம்பிக்கை தரக்கூடிய தரப்பாக நடந்து கொள்ளுறியள் இல்லை"யெண்டு டோஸ் குடுத்ததோடையில்லாம ஐரோப்பிய நாடுகளுக்கு போக்குவரத்துத் தடையையும் கொடுத்திருக்கினம்.

சர்வதேசத்தை ஒரு களிமண் எண்டு நினைச்சுக்கொண்டு பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காகிப் போட்டுது எண்டு பெடியள் இப்ப யோசிக்கினம். அது மட்டுமில்லாம, ஏதோ சொல்லிவைச்சு செய்யுமாப்போல ஐ.நா.சபையின்ர செயலாளர் நாயகம் கோபி அனானும் கொஞ்சம் கோபமா இருக்குறார் போலக் கிடக்கு. அதுதானுங்கோ, உந்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பீட்டர்சன்னிட்ட கோபி அனான் கேட்டிருக்கார், போர் நிறுத்தம் எண்டிறியள், சமாதானம் எண்டிறியள். ஆனால் படுகொலைகள்தானே அதிகமாகிக் கொண்டிருக்கு. அதுவும் புலிகள் மீதுதானே அதிகமான குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கு. அப்புடியெண்டால் நீங்கள் அங்க.... (உந்தக் கோடு போட்ட இடத்தைச் சொல்ல வாய் கூசுதுங்கோ) கொண்டா இருக்கிறியள். ஏன் நீங்கள் ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறியள் எண்டதுக்கு பீட்டர்சன் பிடரிப் பக்கமா கையை வச்சு ஆள்காட்டி விரலால சொறிஞ்சவராம். இதை எப்புடிச் சொல்லுறதுங்கோ. கழுதைக்கு வாக்கப்பட்டால் பொதி சுமந்துதானே ஆக வேணுமென்டிறதா? இல்லாட்டில் ஆப்பு இழுத்த கூனா - ரங்குப்பிள்ளையின்ர நிலைமை எண்டிறதா? என்னண்டுங்கோ சொல்லிறது. இப்ப அதைக் கண்டு பிடிக்காட்டில் எனக்கு தலையே வெடிச்சிடும் போல இருக்கு.

தலை வெடிக்கிறது ஒரு பக்கமிருக்கட்டும், உந்த ஐரோப்பிய அறிக்கைக்கு பெடியளின்ர சைட்டில இருந்து கொண்டு நான் ஒரு அறிக்கை எழுதுறன். அது எப்புடி இருக்கெண்டு பாருங்கோ. இதோ அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை.

தமிழரின்ர போராட்டத்தை கள்ளத்தராசில போட்டு அளவு பார்த்த சர்வதேச சமூகமே! ஓ, சொறி சொறி. ஐரோப்பிய ஒன்றியமே! உனது தராசின் அடிப்பாகத்தில நீ கள்ளக் களவாக ஒட்டி வைத்திருக்கும் காந்தத்தை தயவு செய்து கழட்டிப்போடு. எங்கள் நாட்டிலுள்ள இனவாதக் கட்சிகள் போல் உனது பெயரை ஐரோப்பிய உறுமய என்று மாற்றிக் கொள். எங்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்லும் நீ, உனது பூர்வீகம் பொலநறுவையில ஆரம்பமானதா? இல்லை அநுராதபுரத்தில் ஆரம்பித்ததா? என்பதை தயவு செய்து தேடிப்பார். ஏனெனில் அச்சொட்டாக உனது அறிக்கை இலங்கை இனவாதிகளுடையதாக அமைந்துள்ளது. ஒருவேளை எங்கள் நாட்டு தேரர்கள் யாராவது எழுதித் தந்ததையா அறிக்கையாக வெளியிட்டாய். ஒன்றை மட்டும் கவனத்தில் வைத்துக்கொள். நாங்கள் நினைத்தால் உனது ஐரோப்பிய ஒன்றியத்துக்குள்ளும் குண்டு வைப்போம், உனது சார்பு நாடுகளுக்கும் குண்டு வைப்போம். அதுவும் தற்கொலைப் பட்டியலில் முதலிடம் பெற்றவர்கள் என்பதால் தற்கொலை குண்டுதாரிகளையே அனுப்ப முடியும். ஆகவே எங்கள் குண்டுகள் உள்நாட்டில் வெடிப்பதையோ, நாங்கள் படுகொலை செய்வதையோ கண்டு கொள்ளாதே. ஏனெனில் இங்கு படித்தவர்களும், பயந்தாங்கொள்ளிகளும் கூட எங்கள் கொலைகளுக்கு கோரஸ் பாடும் வில்லுப்பாட்டையே பாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஒன்று போதும், உங்கள் கண்டனத்துக்குட்பட்ட எங்கள் நடவடிக்கைகள் தொடரும். அதை ஐரோப்பிய ஒன்றியமென்ன ஜுஜுபி - அந்த ஆண்டவனே வந்து மண்டியிட்டுக் கெஞ்சினாலும் எங்களால் மாற்றிக் கொள்ள முடியாது. இதுதான் எங்கட இறுதியும் உறுதியுமான தீர்மானம். உன்னால் செய்யக்கூடியதைச் செய் எங்களால் செய்யக்கூடியதை நாங்கள் செய்கின்றோம்.

என்னங்கோ..... எப்புடி இருக்கு என்ர அறிக்கை? 'அந்த மாதிரி' இருக்கோ இல்லையோ? கொமன்ஸ் பிளீஸ்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(06.10.2005 தொடங்கி 12.10.2005 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், புதன், கேது. துலாம் - வியாழன், வெள்ளி. மீனம் - இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. .
சந்திரன் துலாம், விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, உயர்ந்த நிலை, மேலோர் நட்பு, காரியானுகூலம், வெளியிடப் பயணம், செல்வாக்கதிகம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் மந்தம், செலவதிகம், அன்னியர் நட்பு, மனக்குறை நீங்கும், தூர இடப்பயணம், தேகசுகக் குறைவு, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, பணவரவு, உயர்ந்த நிலை, கௌரவம், இனசன மேன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் அலைச்சல், மனக் கலக்கம், பாரிய செலவு, உறவினர் துயரம், பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் மந்தம், பணச்செலவு, பெரியோர் உதவி, தேகசுகக் கஷ்டம், பிரயாண மிகுதி, அன்னியர் தொல்லை, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி மாற்றம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் குழப்பம், பங்காளர் பகை, மனக் கலக்கம், துயர் நீங்கும், முயற்சி பலிதம், குடும்பப் பொறுப்பு, செலவு மிகுதி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், மனக் கலக்கம், செலவதிகம், வெளியிட வாழ்க்கை, மனப்பயம், குடும்பத் தொல்லை, தேகசுகக் குறைவு, உத்தியோக மகிழ்ச்சி, புதிய பதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் சிறப்பு, பணவரவு, மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, இனசன மகிழ்ச்சி, பெரியோர் உதவி, குடும்பப் பாரம், திடீர்செலவு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், பணவரவு, உயர்ந்த நிலை, உறவினர் உதவி, மனமகிழ்ச்சி, உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் பயம், செலவு மிகுதி, கடன்படல், அன்னியரால் தொல்லை, குடும்பப் பகை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் நன்மை, பணவரவு, மனக் குறை நீங்கும், வெளியார் உதவி, பயனுள்ள செயல், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோக மேன்மை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் கலக்கம், பணக்கஷ்டம், கடன்படல், அன்னியர் உதவி, பிரயாண மிகுதி, குடும்ப நன்மை, முரண்பாடு நீங்கும், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 99.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....


இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## ரீட்டா






கடந்த மாதம் 27ஆம் திகதி அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளியான ரீட்டாவின் கொடூர முகங்களே இவை. சனிக்கிழமை காலையில் லூசியானா மாநிலத்தில் மிகவும் உக்கிரத்தோடு தாக்கிய ரீட்டா சூறாவளியானது, மில்லியன் கணக்கான குடியிருப்புக்களை அள்ளிச்சென்றுள்ளது. படத்தில் காணப்படுவது அவற்றில் சில தடயங்களே. மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய ரீட்டா சூறாவளி நமது நாட்டுப் பக்கமும் வீசினால் நம் நாடும் என்னவாகியிருக்கும்?



இசையில் சாதனை செய்வதற்குப் பலரும் முயன்று கொண்டிருக்கும் இந்நாளில் இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த சஞ்சிவ் பாபு எனும் கிட்டார் வாத்தியக் கலைஞர் தொடர்ந்து 24 மணித்தியாலம் 30 நிமிடங்கள் கிட்டார் வாத்தியத் தினை இசைத்து உலக சாத னைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவுசெய்துள்ளார். இச் சாத னையை இவர் 2003ஆம் ஆண்டு நிகழ்த்தியுள்ளார். இச் சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. சாதனைகளுக்கு அண்டை நாடும் துணிந்துவிட்டது பெருமையாகத் தான் உள்ளது.



## இடைவிடா இசைவேளை



## பல் பலம்

கையில் பலம், மூளையில் பலம் என்றெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இங்குள்ளவருக்கோ பல்லில் பலம். அதாவது, இவரின் பல் 61 கிலோ கிராம் நிறையைத் தாங்கக் கூடியதாம். இதனை நிரூபிக்க இவர் 61.8 கிலோ கிராம் நிறையையுடைய மோட்டார் சைக்கிள் ஒன்றை தனது பல்லில் 10 செக்கன்கள் தாங்கி உலக சாதனையைப் புரிந்துள்ளார். அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பிரான்ஸ் சீமன் எனும் இவர் ஒரு விவசாயி ஆவார். பல் பலத்துக்கு இவர் எவ்வகையான பற்பசையைப் பயன்படுத்தினாரோ தெரியவில்லை.

## பனிப் பாறை

படத்தில் உள்ளது உலகில் மிகப்பெரிய பனிப்பாறை எனப் பிரபல்யம் பெற்றது. அந்தாட்டிக்காவின் தென்துருவத்தில் காணப்படும் இப் பனிப்பாறையானது 31,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுடையது. இதன் நீளம் மட்டும் 335 கிலோ மீற்றர் ஆகும். அதாவது 208 மைல்.

உலகில் காபனீர்ரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதால் பூகோளம் வெப்பம் அடைதல் ஏற்படுகின்றது. இதனால் பனிப்பாறைகள் மிக வேகமாக உருகி வருகின்றனவாம். உருகிய பனிப்பாறைகளால் கடல் நீர் மட்டம் உயர்ந்து வெள்ளப்பெருக்கு அபாயங்கள் ஏற்படலாமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள். அந்த வகையில் இப் பனிக்கட்டி உருகினால் உலக வரைபடத்தில் சில தீவுகளைக் காண முடியாது போகும்.



## 5 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

லவுசான் சுவிஸில் வசிக்கும் தவக்குமார் - சுகந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் டிலக்ஷன் தனது 5ஆவது பிறந்த நாளை 05.10.2005 அன்று சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். டிலக்ஷன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, நிஷாந்தன் மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



வி. அனுஷின்
2005.09.25

தகவல் :- பிரபா (மாமா) - ராதிகா (அத்தை) வவுனியா.